www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 10/00

දිනමුරසු වාරමලප්

ஜனவரி.01-07,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 83



## பிரபாவின் புதிய குழந்தைகள்

## தீர்வு யார் கையில்?

## தொண்டாவுக்கு நெருக்கடி

அரசியல் அலசல்-

எக்ஸ்ரே ரிப்போர்ட்



புத்தாண்டு வரவேற்பு!

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை— அரசியல் தொடர் புதிய தகவல்கள்



உதடுகளில் விஷம்
கரங்களில் ஆயுதம்
இதயத்தில் விரோதம்
இனியும் வேண்டாமே!
புன்னகையும்-பூக்களும்
இனிய நேசமும்
எங்கும் மலரட்டும்!!

வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்

## கிரைம் டயறி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## சென்று விடு 94

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
சுமை பல தொடர்ந்து தந்த
94 விடைபெற்றுச் செல்ல
95 இடம்பிடித்துக்கொள்கிறது.

போரும், பூசலும்
அரசியல் படுகொலைகளும்
94இலும் தொய்வின்றித் தொடர்ந்து
நம்நாட்டு மக்களின்
நிம்மதியை மிதித்துக்கொண்டிருந்தன.

உள்நாட்டில் மட்டுமல்ல
உலக அரங்கிலும்-
மோதலும், பட்டினியும், பூகம்பமும்
போட்டி போட்டுக்கொண்டு
மக்களின் வாழ்வை
அகோரமாக ஆக்கிரமித்திருந்தன.

சோதனைகள் நிறைந்த 94இல்
சில சாதனைகளும் இல்லாமலில்லை.

கறுப்பின மக்களின் கரத்தில்
தென்னாபிரிக்க ஆட்சியதிகாரம்-
நிறவெறி எதிர்ப்பின் நியாயமான வெற்றியாய்
94இல் கிடைத்தது பெருமை.

தம்நாட்டில் பற்றி எரியும்
இனப் பிரச்சனை இருப்பதை மறுத்து
இல்லவே இல்லையென்று
மறுத்துப் பேசிய விஜயதுங்காமீது
வெறுப்பினை உமிழ்ந்தனர் மக்கள்.

இறுதியில் மூட்டையை கட்டிக்கொண்டு
அவர் வெளியேற வேண்டியதாகிவிட்டது.

வாக்குகளை வாரி அள்ளிக்கொள்ள
இனவாதம் இனிமேலும்
வசதியான ஆயுதமல்ல என்பதை
நமது வாக்காளர்கள் மிகத் தெளிவாய்
தெரிவித்த ஆண்டாக 94
வரலாற்றில் பேசப்படும்!

செல்லும் ஆண்டில் தொடங்கிய
அரசு-புலிகள் பேச்சு முயற்சி
ஆண்டு முடிவில் சிறு தடங்கலுக்கு
உள்ளாகியது வருத்தமே!

அரசு தொடர்பான புலிகளது
விமர்சனங்களுக்கு விளக்கம் கேட்டு
அரச தரப்பு கடிதம் போட்டது.

பேச்சுக் காலத்தில் தாக்குதல்கள்
தொடரும்போது,
விமர்சனங்கள் வருவதில்
அரசு ஏன் அதிர்ச்சியடையவேண்டும்?

பேச்சுத்தான் ஆரம்பித்திருக்கிறது
முரண்பாடுகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.
சாகரவர்த்தன கப்பல் தாக்கப்பட்டபோதும்
அரசு பேச்சு தொடரும் என்றது.
இப்போது புலிகளின்
விமர்சனங்களை சுட்டிக்காட்டி
விளக்கமளித்த பின்னரே பேச்சு
என்று அரசு அறிவித்திருக்கிறது.

இந்த விடயத்தில் அரசின் நிலைப்பாடு
முன்னுக்குப் பின் முரணாக உள்ளது.

இதே சமயத்தில்-
ஒரு விடயத்தை கவனிக்க முடிகிறது.
புலிகள் தொடர்பாக அரச தரப்பு
அதிருப்தியாக பேசியதில்லை.

காமினி கொலை விவகாரத்தில்கூட
அரச தரப்பு நிதானமாகவே நடந்தது.
ஆனால்-புலிகள் அமைப்பினர்
சமாதான முயற்சிகள்மீதே
சந்தேகம் ஏற்படுத்தும் விதமாக
வடக்கில் பிரசாரம் செய்து வந்தது
மறுக்க முடியாத உண்மை.

அரச தரப்புமீது மட்டுமே
குறை சொல்லி விமர்சன வீரம்காட்ட
பலர் இங்கே இருப்பதால்
உண்மை நிலவரத்தை சுட்டிக்காட்டும்
பொறுப்பு நமக்கிருக்கிறது.

இரு தரப்பினதும்
சரியையும், தவறையும்
சீர்தூக்கி ஆராயாமல்
எந்தவொரு தரப்புமீதும்
குற்றப் பத்திரிகை வாசிக்கக் கூடாதல்லவா?

'விமர்சனத்திற்கு விளக்கம்
அதன் பின்னரே பேச்சு தொடரும்'
என்ற அரசு அறிவிப்பு
அவசரப்பட்டு எடுக்கப்பட்ட
ஒரு முடிவாகவே படுகிறது.

அரசையே விமர்சிக்கக் கூடாது
என்று சொல்லமுடியாது.
ஆனால், அரசு பற்றிய புலிகளது
பிரசாரங்கள் சற்று வரம்பு கடந்து
அரசின் நம்பகத் தன்மையை
சந்தேகத்துக்கு உள்ளாக்கும் விதமாக
அமைந்தமை சரியானதல்ல.


பேச்சுக்கள் தொடரும்போது
ஒரு தரப்பின்மீது மறுதரப்பு
சந்தேகம் கொள்வது
அர்த்தமுள்ள இணக்கப்பாடுகளுக்குவர
எந்த வகையிலும் உதவாது.

எதிர்காலத்தில் தவறுகள்
மேலும் தொடராமலிருக்கட்டும்.

□□

உங்கள் இனியதும், வலியதுமான
ஆதரவிலும், அணைப்பிலும்
மலரும் ஆண்டில்
முரசு புதிய சிகரங்களைத் தொடும்
என்ற நம்பிக்கையோடும், வாழ்த்துக்களோடும்-
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்



### புதுவருட சிந்தனை

"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையிலே ஏற்றுக்கொள்வீர்" சங்கீதம் 73:24

ஒவ்வொரு நாளும் ஆண்டு ஆண்டாகவும் நான் ஆண்டவரின் ஞானத்திலும் அன்பிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். என நம்பிக்கை உண்மையானது. அவர் கூறிய வார்த்தை ஒருநாளும் பொய்யானதில்லை. ஒன்றும் ஒருநாளும் வீணாய்ப் போகாது என்றும் நம்புகிறேன்.

நான் அவர் வழி நடத்தலுக்காக என்னை அவர் கைக்குள் வைக்கிறேன். எந்த வழியைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எனக்கு தெரியாது. என் சுதந்திரத்தை ஆண்டவர் எனக்காகத் தெரிந்துகொள்வார். எனக்கு ஆலோசனையும், புத்திமதியும் தேவை. ஏனெனில் என் கடமைகள் திருக்குமறுக்கானதாகவும், புத்திமதியும் தேவை. ஏனெனில் என் கடமைகள் திருக்குமறுக்கானவையாவும் என் நிலை சிக்கலானதாயும் இருக்கிறது. ஆதி காலத்தில் பிரதான ஆசாரியர் தம் ஊரீம் தும்மீம்மை நோக்கிப் பார்த்ததுபோல் நான் ஆண்டவரைத் தேடுகிறேன். மகிமையுள்ள யேகோவாவே, நீர் என்னை இந்த புதிய ஆண்டிலே வழி நடத்துவீராக.

சீக்கிரத்தில் முடிவு வரும் இன்னும் சில ஆண்டுகளில் நான் இந்த உலகை விட்டு, பிதாவண்டை செல்வேன். என் ஆண்டவர் என் படுக்கையண்டை இருப்பார். மோட்சத்தின் வாசலில் அவர் என்னைச் சந்திப்பார். மகிமையின் நாட்டிற்குள் அவர் என்னை அழைத்து செல்வார். மோட்சத்தில் நான் அந்நியனாய் இருக்கமாட்டேன். என் சொந்த கடவுளும் பிதாவுமானவர் அதன் முடிவில்லா மகிமைக்குள் என்னை ஏற்றுக்கொள்வார்.

இங்கு என்னை வழி நடத்துபவரும் இனி வரும் ஆண்டுகளில் என்னை ஏற்றுக்கொள்பவரும் ஆனவருக்கு மகிமை உண்டாவதாக. ஆமென்.

பி.குணத்தி-கனடா.

### எல்லோருக்கும் முடியும்!

"அன்ன சத்திரம் ஆயிரம்; ஆலயம் பதினாயிரம்" இப்படிக் கட்டி வைப்பது மட்டும்தான் தர்மமாகுமா? அப்படியானால் எளியவர்கள், நடுத்தர மக்கள் ஆகியோர் தர்மம் செய்ய இயலாதா? பணம் படைத்தோர் மட்டும்தான் தர்மவான்களாக இருக்க முடியுமா?

அனைத்துலக மக்களுக்கும் அறவழி காட்ட வந்த அண்ணலெம் பெருமானின் அருளுரை இந்த ஐயங்களுக்குத் தெளிவு தருகின்றது.

அபூதர் (ரழி) பெருமானர் (ஸல்) சொன்ன கீழ்க் கண்ட அருளுரையை அறிவிக்கின்றார்கள். 'உன் சகோதரன் முன் புன்னகை பூப்பதும் ஒரு தர்மமாகும். நல்லதை செய்யுமாறு பிறரை ஏவுவதும் அறச் செயலாகும். கெடுதி செய்யாது பிறரை தடுப்பதும் தர்மமாகும். வெளியூர்வாசி ஒருவருக்கு சரியான பாதையை காட்டுவதும் அறச்செயலே. ஒரு குருடர் கண்பார்வை பெற உதவுவதும் தர்மம்தான். நடைபாதையில் கிடக்கும் கற்களையும் முட்களையும் எலும்புகளையும் அங்கிருந்து அகற்றுவதும் அறமாகும். தனது வாளியில்தான் எடுத்த நீரைத் தன் சகோதரனது வாளியில் ஊற்றுவதும் ஓர் அறமேயாகும்."

நடைமுறையில் சம தர்ம போதனை செய்யும் இந்த அருளுரை எக்காலத்துக்கும் எந்நாட்டுக்கும் பொருத்தம் உடையதல்லவா?

மௌலவி அனீஸ் எம் ஷாகீர்-கும்புக்கந்துரை.

## கவிதைப்போட்டி இல-80

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**எடுப்பார் கைப் பிள்ளையிங்கே!**

எமனோடு பெற்றவரை
சேர்த்துவைத்த சங்கதிகள்
இறுமாப்பு சண்டை ஒன்று!
இயற்கை அதன் மறு அனர்த்தம்!
இரண்டினதும் தாண்டவத்தால் நான்
எடுப்பார் கைப் பிள்ளையிங்கே!

திருமதி. சுசீலா- மட்டக்களப்பு.

### வியக்கப்பட்டவை

**யார் சொன்னார்கள்?**

மனிதம் மாண்டு விட்டதென்று
யார் சொன்னார்கள்?
நீரில் மூழ்கும் நேரத்திலும்
நீள்கிறதே நேசக்கரம்
தான் தப்ப வழியின்றித்
தவிக்கும் இவ்வேளையிலும்
மழலையைக் காப்பாற்ற
மனிதமன்றோ துடிக்கின்றது?

மதுரா யோகேந்திரன்-திருக்கோவில்.

**நிம்மதி தேடி**

அழைக்கும் என்
கரங்களுக்குள்
அடைக்கலமாய் வா மகனே
படைக்கலம் புறப்படுதாம்
பதுங்குகுழி
போய்விடுவோம்.

தெ.லோஜனா-கொழும்பு15.

**அழைப்பு**

போர்ப் புயலினால்
நம் தேசத் தெருக்களில்
எஞ்சிக்கிடக்கும்
நாளைய தலைமுறைக்கு
அமைதித் தாயின்
அவசர அழைப்பு.

பூ. இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**அணைத்திடுவோம்**

சமாதானத் தூதுகொண்ட
அமைதிச் சேதியிங்கே
கைவிட்டுப் போகுமுன்னே
வாரி அணைத்திடுவோம்.

ஏ.எச்.எம். பாஹிம்
ஹிஜ்ராபுரம்.

**வாராய்!**

தனியாய் அமர்ந்து சிரித்துக்குலவும்
தங்கப்பாப்பா வாராய்
தணியாதிருக்கும் போருலகில்
தவிக்க விடேன் வாராய்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**தேவை ஆயுதம்**

அந்த ஆயுதத்தை
தந்தாலன்றி
சும்மா நான்
இறங்கமாட்டேன்

க.நௌஷாத்
ஏறாவூர்-3.

**இளைய மலரே!**

இது- பூத்திருக்கும்
புதிய ஆண்டின்
புதிய ஜனவரி!
இளைய மலரே
இனிதாய் நீ சிரி!
கனவுகள்-நனவாக.....
கனிவாய் நீ சிரி!
நம்பிக்கைகள்-நிறைவேற
நலமாய் நீ சிரி!

கோட்டைமுனை வாஹிட்
ஏ. குத்தூஸ்-பதுளை.

எட்ட இருக்கும் பிள்ளையைக்
கட்டி அணைக்கக் கை நீட்டும்
தாயைப் போல்
தூர விலகிய சமாதானத்தை
காண விழையாதோ-நம்
தாய்நாடு?

சுகிதா சுந்தரவடிவேல்
அக்கரைப்பற்று-08.

இனமிழந்த மழலையைக் காக்கவென்று
இரு கரங்கள் நீட்டுகின்ற வேளையிலே
மனம் துணிந்து வதைபுரியும் யுத்தத்தாலே
சனம் அழியும் கொடுமையினைப் போக்குவீரே

வாழையூர் வைரமுத்து.

**றவுண்டப்**

வந்துவிடு என் மகனே
வளவுக்குள்ளே போய்விடுவோம்
சுற்றி வளைத்து உன்னைச்
சுருட்டிக்கொண்டு போய்விட்டால்
வட கிழக்குத் தாய்மார்போல்-நான்
வாய் வயிற்றில் அடித்திடவோ?

கல்முனை.கே.தயானந்தன்.



**வாடா என் கையருகே**

வண்ணமலரே
வம்ச விளக்கே
வாடா என் கையருகே

க.கமால்தீன்-ஏறாவூர்-3.

## கவிதைப் போட்டி இல-83



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.01.1995.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 83
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**எதிர்பார்ப்பு**

நம்பிக்கை கீற்றுடன்
நேசக்கரம் அழைக்கின்றது
சமாதானக் குழந்தை-விரும்புமா
அமைதி மீண்டும் திரும்புமா?...

கே.நஸ்ரீனா-திருகோணமலை.

**சாதனை ஒத்திகையோ?**

ஆங்கிலக் கால்வாயை
நீந்திக்கடப்பதற்கு
ஆரம்பத்தின் ஒத்திகையோ?

ஏ.உம்முல் முபீனா
கற்பிட்டி.

**போர்க்கரம்**

போர் வெறிக் கரங்களே!
போய்விடு எம்மை விட்டு...

நஸபியா பஹர்தீன்-புத்தளம்.

---

### உன்னதமான 'தாய்'

'தினமுரசு' யதார்த்த அரசியலை அலசும் கூர்மை திருப்தி தருகின்றது. 'தாய்' நாவலைத் தொடரும் உங்களது நோக்கம் உன்னதமானது. மீண்டும் வாசிக்கத் தயார். ஒரு பக்கம் ஒதுக்குங்களேன். உள்ளூர் இலக்கிய செய்திகளை ஏன் ஓரங்கட்டி விடுகிறீர்கள்.

தினமுரசு படித்த தாக்கத்தில் 'மக்கள் விருப்பம்' அனுப்பிகிறேன் தரம் கண்டு பிரசுரியுங்கள்.

ஜனன்யா-கொழும்பு-15.

□□

### விலை ரூ 32

குவைட்டில் பல சிரமத்துக்கு மத்தியில் தினமுரசு வாரமலர் கையில் கிடைப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஒருவாரம்தான் தினமுரசு வார இதழ். இலங்கை நாணயப்படி சுமார் 32/= கொடுத்தும் நேரம் தவறினால் அவ்வளவுதான்.

இசட்.அப்துல் லா.்.பீர்-குவைத்.

□□

### குவைத்திலிருந்து

நான் தொடர்ந்து தினமுரசு பார்த்து வருகின்றேன். உண்மையிலேயே ஆக்கங்கள் கதைகளின் முடிவுகள், படங்கள் இப்படி அனைத்தும் பிரமாதமாக இருக்கிறது.

மினுவங்கொடை அனீஸ்-குவைத்.

□□

என் இனிய செல்லக்குட்டி முரசுக்கு, நீ வந்து என் கையில் தவழும் நேரம் இன்பத்தில் என்னையே நான் மறந்து விடுகிறேன். எமது நாட்டு அரசியல் நிலமைகளை அறிய எக்ஸ்ரே ரிப்போர்ட் அலசுவது இராஜதந்திரி மாபெரும் உதவி புரிகின்றது. சிறுகதை, தேன்கிண்ணம், மகாபாரதம் 20.11.94 அன்றைய முரசில் வாசமில்லா மலரிது. என்ற சிறுகதை என் உள்ளத்தை தொட்டு விழிகளை ஈரமாக்கியது.

தவமணி-குவைத்.

□□

### சவுதியிலிருந்து

நீ சுமந்துவரும் அத்தனையும் தேர்ந்தெடுத்த மணி முத்துக்களே. வாரம் ஒருமுறை எனது பணியினை மறந்தாலும் உன் முகம் காணாமல் இருக்க முடியாது. நம் நாட்டு பயணிகளின் வருகையை எதிர்பார்த்து 'எயார் லங்கா'வை வழிமேல் விழிவைத்து அதில் வரும் எம்மவர்களிடம் ஒரு முரசைக் கண்டால்தான் கதிரவன் முகம் கண்ட மலர்போல் இருக்கும். அப்படி எங்களுடன் கலந்துவிட்டாயே.

குமார்-சவூதி அரேபியா.



### யார் அசல்கள்?

தாங்கள் ஒவ்வொரு வாரமும் வெளியிடும் முரசினை நான் தவறாது வாசிப்பவன்; உங்கள் ஆக்கங்கள் ஒவ்வொன்றையும் நேசிப்பவன்.

அரசியல் கட்டுரைகள் யாவும் தன்னலங்கருதாத ஒரு நிலையாக ஆராயப்பட்டு எழுதப்பட்டு வருவது பாராட்டுதற்குரியது.

மேலும், (டிச 11-17,94) வெளி வந்த தினமுரசில் போலிச் சாமியாரின் திரைமறைவுகளை அம்பலப் படுத்தியது போற்றுதற்குரியது. இவர்களைப்போன்ற காவி அணிந்த காவாலிச் சாமியார்கள் தானே நமது இந்து மதத்தை கேலிக்கூத்தாக்கி சீரழிய வைப்பது?

ஆயினும் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் 'இந்தப் போலிகளால் முன்பிருந்த அசல்களுக்கும் கெட்ட பெயர்'; 'நாம் உண்மையான ஆன்மீக வாதிகளை குறை சொல்லவில்லை' குறளிவித்தை கோல்மால்தனம் செய்யும் போலிகளையே சுட்டுகிறோம்' என்று குறிப்பிட்டிருந்தீர்கள். நீங்கள் குறிப்பிடுவதுபோல் யார்தான் அசல்கள்? யார்தான் உண்மையான ஆன்மீகவாதிகள்?

என்னைப் பொறுத்தவரை தூய உருப்பளிங்காக சிறந்த ஆன்மீகச் சிகரமாக இருந்தவர் ஒருவரே. அவர்தான் சில மாதங்களுக்கு முன் செம்பொருளுடன் இரண்டறக் கலந்த 'சங்கராச்சாரிய சுவாமிகள்' ( சாந்தி! சாந்தி! சாந்தி!!) அவரிடம் இருந்த எளிமை, அடக்கம், பண்பு, பரிவு, பணத்துக்கு ஏமாறாத தன்மை எந்த சாமியாரிடமுள்ளது?

க.மாணிக்கராஜா-கொழும்பு-06.

□□

திசை எட்டும் தித்திக்கும் சேதிதரும் தேன் (தின)முரசே, பகை சேராப் பண்புகொண்டு பகர்கின்ற செய்தியெல்லாம் சுவை குன்றாதென் நாளும் சோர்வில்லை. இனி உமக்கு எது இல்லை என்று ஏங்க இடமில்லை இனி எனக்கும்.

வாழையூர் வைரமுத்து
வாழைச்சேனை.

□□

ரசிகனின் இலக்கிய நயமா? லேடீஸ் ஸ்பெஷலா? அரசியல் கருத்துக்களா? யாவுமே தரமான படைப்புக்கள். ஆயினும் ஒரு கவலை வியாழன் கடைகளில் தொங்கி சனியே காணாமல் ஆகிவிடுகிறாய். கொஞ்சம் பிந்தி விட்டால் கிட்டாமல் போய் விடுகிறாய்!

செல்வி-அருள்

தினமுரசு தனது சினிமா பக்கத்தையும், கதைகளுக்கு (சிறு, தொடர்கதை) ஒதுக்கும் பக்கங்களையும் கொஞ்சம் குறைத்தால் நன்றாக இருக்கும்.

நவ.27ம் திகதிய முரசின் எக்ஸ்ரே ரிப்போர்ட் பல விஷயங்களை தெளிவு படுத்துவதாக உள்ளது. அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை... தொடர் நல்ல தகவல்களை வெளிக்கொண்டு வருகிறது.

தினமுரசு மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்.

டாக்டர் எம்.ஏ.எம்.பரீத்.

□□

### அரசியலும்-நயமும்

தங்கள் பத்திரிகை வாசித்து வரும் அனேகரில் அடியவளும் ஒருத்தி. நான் உங்கள் பத்திரிகையை படிப்பது அரசியல் கண்ணோட்டத்திற்காகத்தான் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்வதில் மிக மகிழ்வடைகின்றேன். உண்மைகள் பலருக்கு கசக்கலாம். ஆனால் எல்லாருக்குமல்ல! தங்கள் பத்திரிகையில் அரசியல் கண்ணோட்டங்களை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருப்பவர்களில் நானும் ஒருத்தி. சின்ன சின்ன நிகழ்வுகளைக்கூட தொட்டுத் தருவது சிறந்ததே.

ஏனைய அம்சங்களை உள்வாங்க தவறாத போதும் உண்மையில் என்னைக் கவர்ந்தது அரசியலும், இலக்கிய நயமுமாகும். எதிர்க்கொள்ளும் இக்கட்டுக்களை தகர்த்தெறியுங்கள்!! என்னவோ எதுவோ தொடர்ந்தும் நடுநிலை தவறாத ஆக்கபூர்வமான அம்சங்களை எதிர்பார்த்து விடை பெறுகிறேன்.

வாழ்க தமிழ்!

தமிழ்த்தங்கை-கேகாலை மலர்.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# “ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும்.”

# “போர் நிறுத்தம் செய்யப் புலிகள் தயார்”

## பத்திரிகையாளர் மாநாட்டில் பாலசிங்கம் விளக்கம்

- தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும்.
- கடந்த மூன்று மாதங்களில் தலைவர் பிரபாவினால் 9 கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
- இராணுவத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டுவர அரசு விரும்புவதாகத் தெரியவில்லை.
- இனப்பிரச்சனை விடயத்தில் சந்திரிகா முன்னர் காட்டிய ஆர்வம் தற்போதில்லை.
- யுத்த நிறுத்தத்தைவிட மோதல் தவிர்ப்பைத்தான் அரசும் இராணுவமும் விரும்புகின்றன.

### குற்றச் சாட்டு

நத்தாருக்கு முன்னர் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே இரண்டாம்கட்ட பேச்சு ஆரம்பமாகும் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் அவ்வாறு நடக்கவில்லை.

22.12.94 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்கள்.

புலிகள் இயக்க அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ் செல்வன், புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

2ம் கட்ட பேச்சை அரசாங்கம் பின் போட்டுவிட்டது என்று திரு.அன்ரன் பாலசிங்கம் குற்றம்சாட்டினார்.

போர் நிறுத்தம், சமாதானப் பேச்சு தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? புலிகளின் நிலைப்பாடு என்ன? என்று நிருபர் கேட்ட கேள்விக்கு திரு.அன்ரன் பாலசிங்கம் பின்வருமாறு பதிலளித்தார்.

இனப்பிரச்சனையில் சந்திரிக்கா முன்னர் காட்டிய ஆர்வம் தற்போது இல்லை. கடந்த மூன்று மாதங்களில் தலைவர் பிரபாவினால் 9 கடிதங்கள் சிறிலங்கா அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தலைவர் 9 கடிதங்களை சிறிலங்கா அரசுக்கு எழுதியுள்ளார் என்றால் அவருக்கு பேச்சு வார்த்தையில் உள்ள அக்கறையைத்தான் இது காட்டுகிறது.

### போர் நிறுத்தத்திற்குத் தயார்

போர் நிறுத்தத்திற்கு நாம் தயார் என்பதை தலைவர் அக்கடிதங்களில் திரும்பத் திரும்ப வற்புறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சனைகள், அவசரப் பிரச்சனைகள் முதலில் தீர்வு காணப்படவேண்டும்.

முதற்கட்ட பேச்சின்போது திரு.பால பட்டபெந்தி, சந்திரிகா அம்மையார் தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சனைகளை, அவசரமான பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் படி தங்களுக்கு கூறியதாக தனது ஆரம்ப உரையில் தெரிவித்திருந்தார் என்று கூறிய அன்ரன் பாலசிங்கம் அன்றாடப் பிரச்ச னைகள் என்றால் என்ன என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது,

- இயல்பு நிலையை தோற்றுவித்தல்,
- முற்றுமுழுதான பொருளாதார தடை நீக்கம்
- பாதை திறப்பு
- கடல்வலய தடை நீக்கம்
- யாழ் குடாநாட்டிலுள்ள அகதிகளை மீளக் குடியேற்றல் போன்றவையே உடனடியாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் என்று திரு.அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

இந்தப் பிரச்சனைகளை நாம் முதல் கட்டப் பேச்சில் வலியுறுத்தினோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நிலையான, உருப்படியான போர் நிறுத்தத்தை விரும்புகின்றது. அப்படியான ஒரு போர் நிறுத்தம் வந்தால்தான் உண்மையான இயல்பு நிலை தமிழர் தாயகத்தில் தோன்றும். இதனை தலைவர் பல தடவை வலியுறுத்தியுள்ளார். ஆனால் இராணுவமும், அரசும் இதனை விரும்பவில்லை.

### யுத்த நிறுத்தமா? மோதல் தவிர்ப்பா?

யுத்த நிறுத்தத்தைவிட மோதல் தவிர்ப்பைத்தான் அரசும், இராணுவமும் விரும்புகின்றன.

இராணுவத்தை வெளியேற்றி பூநகரி பாதையைத் திறக்கும்படி நாம் கோரினோம். இராணுவம் பூநகரியைவிட்டு வெளியேற மறுத்துவிட்டது.

யாழ் குடாநாட்டில் அகதிகளை மீளக் குடியேற்ற வேண்டுமானால், தற்போது ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும்.

சமாதானத்தை அடைவதற்கான வழி முறைகள் கட்டம் கட்டமாக நடைபெற வேண்டுமென பிரபாகரன் விரும்புகிறார். முதல் கட்டம் மக்களின் அன்றாட சுமைகளைக் குறைத்தல். மக்களின் நிம்மதியான வாழ்வு. இதன் மூலம் மக்களிடையே ஒரு புதிய நம்பிக்கை பிறக்கும். இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

# இனப்பிரச்சனை தீர்வுக்கு முன் பேசவேண்டியது என்ன?

## பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு பிரபா பதில்!

### அமைச்சரின் கடிதம்

20.12.94 அன்று இலங்கையின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதம் தொடர்பாகவும், பிரபாகரன் 22.12.94 அன்று அனுப்பிய பதில் கடிதம் தொடர்பாகவும் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கமளித்தார்.

22.12.94 மாலை புலிகளின் குரல் வானொலியும் யாழ் குடாநாட்டு மக்களுக்கு பேச்சுவார்த்தையின் இன்றைய நிலை குறித்து அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார்.

அந்த உரையின் முக்கிய பகுதிகள் அப்படியே தரப்படுகின்றன:

பேச்சுவார்த்தையின் இறுதி நோக்கம் இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காண்பது எனினும் பேச்சுவார்த்தையின் முதற்கட்டத்தில் அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தீர்வுகள் காணப்படவேண்டும்.

20.12.94ல் அமைச்சர் ரத்வத்த தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

### பிரபாவின் பதில்

அக்கடிதத்தில் யுத்தத்தின் மூல வேர்களைப் பற்றி ஆராய்ந்து, இனப் பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டுமென ரத்வத்தை கூறியிருந்தார்.

பிரபாகரனால் அக்கடிதத்திற்கு 22.12.94 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டது.

தலைவர் பிரபாகரன் தனது பதில் கடிதத்தில், யுத்தத்தின் மூலவேர்களை ஆராய்வதற்கு முன்பு, யுத்தத்தின் விளைவுகளால் ஏற்பட்ட மக்களின் அவலங்களை தீர்ப்பதே முதன்மையானது. என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் தலைவர் பிரபாகரன் தனது கடிதத்தில், “விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு தயார், எப்பொழுதும் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வரலாம். ஆனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகளை முதலில் தீர்க்கவேண்டும்” என்றும் தெரிவித்துள்ளார்.

பிரபாவின் பதில் கடிதம் பற்றி தனது உரையில் விளக்கமளித்த பாலசிங்கம், மேற்படி அன்றாடப் பிரச்சனைகள் ஒவ்வொன்றிலும் சிறிலங்கா இராணுவ நிலைப்பாடு முக்கியமாகவுள்ளது. சிறிலங்கா இராணுவத்தை நிர்ப்பந்தித்து மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வை முன்வைக்கும் நிலையில் சிறிலங்கா அரசு இல்லை.

### சந்தேகம்

தனது இராணுவத்தை சற்றே விலக்கி, போக்குவரத்துக்கான பாதையை திறக்க முடியாத ஒரு அரசு, அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்கமுடியாத அரசு, இனப் பிரச்சனையைத் தீர்த்து, தமிழர் தாயகத்திலிருந்து இராணுவப் படையணிகளை முற்றாக அகற்றும் என்று எவ்வாறு நம்புவது என்று திரு. அன்ரன் பாலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

## கண்டியில் கல்லூரி நிர்மாணம் கைவிடப்படுமா?

(கண்டி நிருபர்)

கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் கண்டியில் முஸ்லிம் ஆண் மாணவர்களுக்காக பூரணத்துவம் பெற்ற பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட கண்டி வட்டாரந்தென்ன வயல்வெளியில் இப்பொழுது கண்டி நகருக்கு வந்து சேரும் லொறிகளை நிறுத்தி வைக்க நகர அபிவிருத்தி அதிகாரம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் அமைச்சரும் இன்னாள் யு.என்.பி. எம்பியுமான ஜனாப் எ.ஸி.எஸ். ஹமீத்தின் பெரு முயற்சியின் விளைவாக நகர அபிவிருத்தி அதிகாரத்திடமிருந்து கண்டி கட்டுகஸ்தோட்டை வீதியில் மகியாவையில் பரந்த வயல் வெளியைப் பெற்று 50 இலட்சம் ரூபாவுக்கு மேல் மண்ணைக் கொண்டு நிரப்பி சதுப்பு நிலம் சம தரையாக்கப்பட்டது தெரிந்ததே.

இதன் பொருட்டு தற்காலிக கொட்டில் ஒன்றும் அங்கு கட்டப்பட்டது. இந்நிலையில் அந்த வயல் வெளியை முஸ்லிம் மாணவர்களின் கல்விக்காக அனுமதிக்க இயலாதெனவும் அப்படி அனுமதித்தால் பௌத்த குருமார்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பார்களெனவும் கூறப்பட்டதுடன் அது தொடர்பாக உரிமை கோரி கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இப்பொழுது உரிமை கோரி நீதிமன்றம் சென்றவர்கள் பக்கம் நீதி நியாயப்படுத்தப்பட்டதனால் பாடசாலை நிர்மாணிக்கும் முயற்சியும் இப்பொழுது கைவிடப்பட்டு விட்டது. தற்காலிக கொட்டிலும் உடைக்கப்பட்டு விட்டது.

அந்த சம தரை இப்பொழுது மோட்டார் வாகனங்கள் விற்கும் பேட்டையின் தளமாகவும் மாறிவருகின்றது. இவ்வாறு அனாதரவாக கிடக்கும் நிலத்தை கண்டி நகர அபிவிருத்தி அதிகாரம் கண்டி நகருக்கு வருகை தரும் வாகனங்களை நிறுத்தி வைக்கப்படும் தளமாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## சுவிஸ் கொலை மர்மம்

## கொல்லப்பட்டவர் உமா கொலையாளி?

சுவிட்ஸர்லாந்தில் பேர்ண் நகரில் தமிழ் தம்பதியர் கொல்லப்பட்டமை தொடர்பாக சுவிஸ் பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

யாழ் அச்சுவேலியைச் சேர்ந்த ஐயாத்துரை உதயகுமார் (வயது 28) அவரது மனைவியான யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வத்ஸலா (வயது 24) ஆகியோர் இரு வாரங்களுக்கு முன்னர் தமது வீட்டில் வைத்து கொல்லப்பட்டிருந்தனர்.

இரு பிணங்களும் அழுகிய நிலையில் காணப்பட்டதால் நீண்ட நாட்களுக்கு பின்னரே அவர்கள் கொல்லப்பட்ட விபரம் வெளியே தெரிய வந்தது என்று கூறப்படுகிறது.

கொல்லப்பட்ட உதயகுமார் (ரொபின்) இலங்கையில் புளொட் இயக்கத்தில் தீவிர உறுப்பினராக இருந்தவர். புளொட் இயக்கத்தில் தலைவராக இருந்த உமா மகேஸ்வரன் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்டதில் உதயகுமாருக்கும் தொடர்பிருந்ததாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

உமா கொலைக்கு தானும் ஒரு காரணம் என்று அவர் சுவிஸில் உள்ள தனது நண்பர்களிடம் கூறித் திரிந்ததாகவும் அறியப்படுகிறது.

# ராஜீவ் கொலைவழக்கில் இலங்கை அரசின் உதவி

# ஒப்பந்தம் இல்லாத நிலையில் நாடு கடத்தல் ஏன்?

## இலங்கை-இந்திய உறவு குறித்து புலிகளது தினசரி சந்தேகம்

இந்திய அரசோடு இலங்கை அரசு கொண்டுள்ள உறவு குறித்து புலிகள் அமைப்பினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இந்தியாவுக்கு எதிராக கடும் குற்றச் சாட்டுக்களை சுமத்திவரும் புலிகள் அமைப்பினர் புதிய அரசு பதவிக்கு வந்தபின் இந்தியாவோடு நெருக்கத்தை அதிகரித்திருக்கிறது என்று கருதுகின்றனர்.

இந்திய உறவு தொடர்பான இலங்கை அரசின் கூற்றுக்கள் தொடர்பாக சந்தேகம் தெரிவித்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள தினசரியான 'ஈழநாதம்' ஆசிரியர் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அதனை முழுமையாக இங்கே தருகிறோம்:




சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெளியுறவுக் கொள்கை, குறிப்பாக இந்தியா தொடர்பான கொள்கை இன்று அரசியல் அரங்கில் முக்கியமாகப் பேசப்படும்-ஆராயப்படும் விடயமாக முதன்மை பெற்றுள்ளது. இந்நிலையானது பத்திரிகையாளர் மாநாட்டில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரிடம் பல கேள்விகளைக் கேட்குமளவிற்கு அவசியமானதாகவும் மாறியுள்ளது.

### தடயங்கள்

இந்த வகையில் சந்திரிகா அரசாங்கத்திற்கும்-ராவ் அரசாங்கத்திற்கும் இடையில் பல விடயங்கள் இடம்பெற்றிருப்பதற்கான தடயங்கள் உள்ளன. இதில் முதலாவதாக சந்திரிகா பிரதம மந்திரியாக பதவி ஏற்றதைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் விசேட தூதுவர் சந்திரிகாவைச் சந்தித்து கையளித்துள்ள கடிதத்தைக் குறிப்பிடலாம். இறுதியாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் சந்திரிகாவிடம் இருந்து இந்தியப் பிரதமருக்குக் கொண்டு சென்ற தகவலைச் சொல்ல முடியும்.

இதில் முதலாவது கடிதம் சந்திரிகாவிற்குக் கிடைக்கப் பெற்று நூறு நாட்கள் கடந்த பின்பும் அது குறித்த விபரங்கள் வெளிவரவில்லை. ஊகங்கள் மட்டுமே வெளி வந்துள்ளன. லக்ஷ்மன் கதிர்காமர் கொண்டு சென்ற தகவல் பற்றி இப்பொழுது எதுவும் கூற முடியாது. அவை வெளிவரும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

ஆனால் தற்பொழுது இந்திய-சிறிலங்கா நட்பில் மிக நெருக்கம் ஏற்பட்டுள்ளது என்பது மட்டும் தெளிவாக உறுதி செய்யக்கூடியதாகவுள்ளது. அது சாதாரணவெளியுறவு நட்புக்கும் அப்பால் பட்ட ரீதியில் நெருக்கமானது என்பது மட்டும் நிச்சயம். இதற்கு எடுத்துக்காட்டாக ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை விவாகப் பதிவாளரை சிறிலங்கா இந்தியாவிற்கு நாடு கடத்தியுள்ளதைக் கூறலாம்.

### சட்டத்திற்கு அப்பால்

சிறிலங்காவிற்கும்-இந்தியாவிற்கும் இடையில் குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தம் இல்லாத நிலையிலும், சம்பந்தப்பட்டவர் குற்றவாளி என இனம் காணப்படாத நிலையிலும்கூட, சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது இந்திய-சிறிலங்கா உறவானது சட்டதிட்டத்திற்கு அப்பாற்பட்ட ரீதியிலும் செயற்வடுவதைக் காட்டுவதாகவே உள்ளது.

இந்த நிலையில் இந்திய-சிறிலங்கா உறவில் வெளிப்படையான அறிவிப்புக்களுக்கும் அப்பால் நெருக்கமான உறவு இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. ஆகையினால் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் கை செயற்படாது என்று எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானதாகும். ஆனால் எது எவ்வளவு தூரம் நீளும் என்பதை சிறிலங்கா அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கையைப் பொறுத்தே ஊகிக்க முடியும்.

# சுயரூபத்தை மறைக்கவந்த 'சூப்பர்' அறிக்கை

## பனைவளச் சபை முன்னாள் தலைவரின் பரிதவிப்பு

பனம்பொருள் சபைத் தலைவராக இருந்த திரு.நடராசாவின் ஊழல் விவகாரங்கள் பற்றி மேலும் மேலும் முரசுக்கு தகவல்கள் கிடைத்துவருகின்றன.

இதேசமயம் க.நடராசா ஒரு அறிக்கையைப் பத்திரிகை ஒன்றில் விடுத்துள்ளார்.

தனது பதவியை இராஜினாமா செய்து விட்டதாகவும், ஊழல் குற்றச்சாட்டுக்களால் விலத்தப்படவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

குற்றங்களை மறைக்க சட்டவாதம் செய்வோரின் ஆசிர்வாதம் அவருக்கு இருப்பதை அந்த அறிக்கை மூலம் அறிந்துகொண்டோம்.

முன்னாள் பனைவளச் சபை நடராசா மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் இல்லையென்றால் மீண்டும் அவர் தலைவராக உடனடியாக நியமிக்கப்படாதது ஏன்?

பனைவளச் சபைக்கு தமிழர் ஒருவரை தலைவராக நியமிக்க அரசாங்கம் தயாராக இருந்தபோது நடராசாவின் பெயரை மீண்டும் கூட்டணி சிபாரிசு செய்தது.

ஈ.பி.டி.பி, புளொட் போன்ற தமிழ் கட்சிகளிடமும் கூட்டணி பா.உக்கள் சிலர் நடராசாவுக்காக பரிந்து பேசினார்கள். அக் கட்சிகளையும் அவரையே சிபாரிசு செய்யுமாறு கூட்டணியினர் கோரினார்கள்.

க.நடராசா தமிழ் கட்சியின் அலுவலகம் ஒன்றுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனக்கு ஒரு சந்தர்ப்பம் தருமாறு அழுது மன்றாடினார்.

கடந்த இரண்டு மாத காலமாக க.நடராசா இவ்வாறு அலைந்து திரிந்தும் பனைவளச் சபைத் தலைவர் பதவி கிடைக்காமல் போனது ஏன்?

தமிழ் மொழி அமுலாக்கல் குழுவுக்கு கூட்டணி சிபாரிசு செய்த சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் பதவி பெற்றுவிட்டார்.

பனைவளச் சபைக்கு கூட்டணி சிபாரிசு செய்த க.நடராசாவுக்கு மட்டும் பதவி கொடுக்க அரசாங்கம் யோசித்து தாமதித்த காரணம் யாது? காரணம் பனைவளச் சபை ஊழியர்களது உறுதியான குற்றச்சாட்டுக்கள். அவற்றை மொட்டைக்கடிதம் என்று அறிக்கை விட்டுள்ளார் க.நடராசா.


அது மட்டுமல்ல, குறிப்பிட்ட பத்திரிகை அறிக்கை மூலம் தன்னை ஒரு கூட்டணி அபிமானி என்றும் க.நடராசா வெளிப்படுத்தி முரசினதும், நடராசாவின் ஊழலை அம்பலப்படுத்திய ஏனைய பத்திரிகைகளினதும் செய்தியை அவர் உறுதிப் படுத்தியிருக்கிறார்.

க.நடராசாவின் ஊழல்கள் பற்றிய மேலதிக விபரங்கள் விரைவில் வெளிவரும்.

ஒரு விசயம் மிகத் தெளிவாக தெரிகிறது. அனுபவித்த ருசி தலைகீழாய் நின்றாவது மீண்டும் தலைவராகிவிட துடிக்க வைக்கிறது.

## சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் சுருட்டல்

## கட்சித்தலைமை உடன் கவனிக்கட்டும்!



(திருமலை நிருபர்)

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் படிவம் திருகோணமலை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் தயானந்த ஜயவீரவின் ஆதரவாளர்களால் ஒன்று ரூபா 300/= ஆக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதுபோல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தன்னால் மட்டுமே கையாளப்படும் என்று பிழையான தகவல்களைப் பரப்பி இவ் விற்பனை நடைபெறுகிறது. ரூபா 300/= கொடுத்து வாங்கப்பட்ட பிரதியின் புகைப்படப் பிரதி இது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையினர் இதனை உடன் கவனித்து நடவடிக்கை எடுத்தால் கட்சிப் பெயரை காப்பாற்றிக் கொள்ளலாம்.

### பனைவளச் சபை முன்னாள் தலைவரால்

## "பழிவாங்கப்பட்ட அப்பாவித் தமிழர்!"

(டிசம்பர் 04-10,1994) வெளிவந்த தினமுரசு வாரமலரின் மூன்றாம் பக்கத்தில் பிரசுரமாயிருந்த 'பனம் பொருள் சபையில் பல இலட்சம் மோசடி ஊழல் குற்றச் சாட்டை விசாரிக்க கூட்டணி தடை!' என்னும் தலைப்பிலான செய்திகண்டு அளப்பரிய மகிழ்ச்சி கொள்வதோடு, பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரின் பிற செய்திகளையெல்லாம் கடந்த காலங்களில் வெளியிட்ட மற்றைய தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவராத அந்த அதிரடிச் செய்தியை வெளியிட்ட 'தினமுரசு வார மலரின்' பாரபட்சமில்லாப் பத்திரிகைப் பண்பினை வரவேற்பதுடன் ஊழல் பேர்வழிகட்கும், உடந்தையாயுள்ளவர்கட்கும் தனது நேர்மையான, நேரடியான பதில்மூலம் நெத்தியடி கொடுத்த திரு.வாசுதேவ நாணயக்கார அவர்களின் துணிச்சலையும் பாராட்டுகின்றேன்.

தமிழரசுக் கட்சியினரதும்-கூட்டணியினரதும் செல்லப் பிள்ளையாகவும், மிகவும் கேவலமான பலமுறைகளிலே பெற்ற அரசியல் செல்வாக்கினாலும், யாழ்ப்பாணத்திலிருந்த பல கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்குப் பலவிதமான லஞ்சங்களைக் (என் மூலமும்) கொடுத்து அவர்களைத் தன் கைக்குள் போட்டுக்கொண்டமையினாலும், சில ஊழல்கள் வெளி வந்த வேளையிலே கூட்டணியினரால் காப்பாற்றப்பட்டமையினாலும் தொடர்ந்தும் பல ஊழல்களைச் செய்து தனித்துவமானவராக இருந்த க.நடராசாவினால் ஏமாற்றப்பட்ட பல அப்பாவிகளில் நானும் ஒருவன்.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த காலம்வரை இவர் செய்த பல தில்லு முல்லுகள், மோசடிகள், ஊழல்கள் யாவுமே விபரமாக உள்ளன. இதுவரை பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருந்துவந்த இவருடைய மோசடிகளை வெளிக்கொண்டுவர உதவிய அனைவர்க்கும் நன்றி கூறுவதோடு, இதனைப் பகிரங்கப்படுத்திய 'தினமுரசு வார மலரி'ற்கு மீண்டும் எனது பாராட்டுக்கள்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த காலத்தில் இவர் செய்த மோசடிகளில் எனக்குத் தெரிந்த முக்கியமானதும், பெரியதுமான உதாரணத்திற்கு ஒன்று: 1992ம் ஆண்டு மன்னார் மாவட்ட பனம் பொருள் அபிவிருத்திக்கென அப்போதைய பா.உ..திரு.இமானுவெல் சில்வா (EPRLF) அவர்களினால் இவரிடம் வழங்கப்பட்டிருந்த ரூபா எட்டு இலட்சம் (8,00,000/=) பணத்திற்கான கணக்கு விபரங்கள் எதுவுமே இல்லை. இதனை திரு.இமானுவெல் சில்வா அவர்களே நேரில் கூறியுள்ளார்.

கூட்டணித் தலைவர்கள் சிலர் இவரைக் காப்பாற்ற முயற்சிப்பதன் காரணத்தை (இரகசியம்)யும் மிக விரைவில் 'தினமுரசு வாரமலர்' மூலம் வெளியிட விரும்புகின்றேன்.

வேலுப்பிள்ளைபரமராஜா,
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

## நகருக்குள் பன்றிகள் அட்டகாசம்!

## நகரசபை மன்றத்தில் அலட்சியம்!

(திருமலை நிருபர்)

நகரமத்தியில் பன்றிப் பண்ணை நடத்தப்படுவதால் அக்கம் பக்கத்துக் குடியிருப்பாளர்கள் நாற்றம் சகிக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள்.

நெருக்கமான குடியிருப்புகளைக் கொண்ட அன்பு வழிபுரம் பகுதியிலேயே இப் பன்றிப் பண்ணை அமைந்திருக்கிறது. பன்றிகளுக்கென கொண்டு வந்து குவிக்கப்படும் கழிவுப் பொருட்களை அவைகள் கிளறும் போது ஏற்படும் குமட்டல் மணம் ஊரையே கதிகலங்க வைத்துக்கொண்டிருக்கிறது. மழை நீரும் சேர்ந்து கொள்வதால் நாற்றம் மேலும் அதிகரிக்கிறது.

சுகாதாரச் சீர்கேட்டை விளைவிக்கும் இந் நடவடிக்கையை உடன் நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் நகராட்சி மனறத்தைக் கோரியுள்ளனர்.

குப்பை கூழங்களால் அதிகரிக்கும் நுளம்புகளும் பன்றிகளின் நடவடிக்கைகள் பெரும் நோய்களைப் பரப்பிவிடக்கூடும் என்றும் அந்தக் கோரிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உடனடியாக நகரசபை நடவடிக்கை எடுக்காவிடில் அன்பு வழிபுரம் நோய்ப் பிரதேசம் ஆவது திண்ணம் என்கிறார்கள் அங்குள்ள மக்கள்.

## நாளும் பொழுதும் நலிந்துவரும் வீதிகள்

(ஹரிஸ்பத்துவ நிருபர்)

ஹரிஸ்பத்துவ தொகுதியில் காணப்படும் சகல மோட்டார் போக்குவரத்து வீதிகளும் நாளுக்கு நாள் சீர்கெட்டு வருகின்றன.

வீதியோரங்களில் கால்வாய்கள் வேண்டுமென்றே. பொதுமக்களினால் அடைக்கப் படுவதனால் நீர் வழிந்தோட முடியவில்லை. சகல வீதியோரங்களும் புல் நிறைந்த காடாக காட்சியளிக்கின்றன. நெடுஞ்சாலைகளை அண்டிய வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்படுவதில்லை. ஹரிஸ்பத்துவ பிரதேச சபையும் கட்டுப்பாட்டில் இயங்கும் கிராமப் பாதைகளின் ஓரங்களும் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. கடந்தவாரம் ஹரிஸ்பத்துவ பிரதேச சபையின் கூட்டம் திரு.ஆர்.பீ.ஜீ.வர்னசிரி தலைமையில் நடைபெற்ற பொழுது உறுப்பினர்கள் பலரும் இத்தகைய சீர்கேடுகளை எடுத்துக்காட்டினர்.


## விளம்பரப் பகுதி

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, P.O. BOX 162
COLOMBO - 11. T.P. - 434770

BRIGHT ன் தபால் மூலம் கல்வி நெறிகள்

- ☆ 90 நாட்களில் பேச்சு ஆங்கிலம் ☆ 90 நாட்களில் பேச்சு சிங்களம்
- ☆ 5ம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி பயிற்சியும் வெகுமதியும்
- ☆ கடைக் கணக்கு எழுதும் முறை (Method of Book -Keeping)
- ☆ Association certified Book - Keepers (London Exam)
- ☆ Effective English with Grammar (Senior/Junior) Scheme (பாடசாலை மாணவர்களுக்கான இலக்கணப் பயிற்சி
- ☆ G.E.E. (O.L)முன்னோடி பயிற்சி

## மாபெரும் மலிவு விற்பனை

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையிலான அனைத்து வகை புத்தகங்களும் மலிவு விலையில் கிடைக்கும்.

50% கழிவு நீக்கி
ஆங்கில பாட கற்கை நெறி

| | | |
|---|---|---|
| Follow Me - | 12 | 16.00 |
| Follow On - | Mayurei I | 20.00 |
| | Mayurei II | 20.00 |
| Follow Me | Exam Guide I | 25.00 |
| | Exam Guide II | 25.00 |
| | Exam Guide III | 25.00 |
| Follow Me Again I | | 20.00 |
| Follow Me Again II | | 20.00 |
| | | 171.00 |

171/- பெறுமதியான புத்தகத் தொகுப்பு 85/- விற்கப்படும்.

50% கழிவு நீக்கி
ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடி பயிற்சி

| | |
|---|---|
| கணிதம் | 60.00 |
| தமிழ் | 55.00 |
| கட்டுரை மஞ்சரி | 25.00 |
| மும்மொழி | 20.00 |
| | 160.00 |

160/-பெறுமதியான புத்தகத் தொகுப்பு 80/- விற்கப்படும்.

90 நாட்களில் சிங்களம்
25% கழிவு நீக்கி
60/- புத்தகம் 45/- ரூபாவுக்கு விற்கப்படும்.

இத்தோடு
சகல விதமான வெளியீடுகளும்
பாடசாலை பாடப் புத்தகங்களும்
10% கழிவு நீக்கி விற்கப்படும்.

தில்லை மோகனின் OMOS
Selection 25% கழிவு நீக்கி

| | | |
|---|---|---|
| OMOS . | 1 | 20.00 |
| OMOS - | 2,3,4 | 75.00 |
| OMOS - | 5 | 37.50 |
| OMOS - | 6 | 37.50 |
| | | 170.00 |

170/-பெறுமதியான புத்தகத் தொகுப்பு 127.50/- விற்கப்படும்.

எமது மலிவு விற்பனை BRGHT BOOK CENTRE (PVT) LTD ல் மாத்திரமே 31.1.1995 வரை நடைபெறும். மாணவர்கட்கு நேர அட்டவணை, வரய்ப்பாடு இலவசமாக வழங்கப்படும்.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, P.O. BOX 162 COLOMBO - 11. T.P. - 434770
77/24 JAMPATTA LANE (SRI PONNAMBALA VANESAR KOVIL EAST SIDE ROAD) COLOMBO - 13

## மலையாள மாந்திரீகம்



27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதைபோட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 492/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 251/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 128/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


உ
சிவமயம்

### மட்டக்களப்பு-களுதாவளை பிள்ளையார் ஆலய திருப்பணி நிதி வேண்டுகோள்!



மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே 17 மைல் தொலைவில் தான்தோன்றியாக எழுந்தளியிருக்கும் திருவருள் மிகு களுதாவளை பிள்ளையார் ஆலயத்தில் 10.09.1994 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரணத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

கூன், குருடு, செவிடு மற்றும் ஊமை போன்ற குறைபாடுகளுடைய பல்லாயிரக்கணக்கானோரின் குறை நீக்கி அருள்பாலித்த எம்பெருமானுடைய திருப்பணிக்கு தங்களாலியன்ற பொருளுதவி தந்து விநாயகப் பெருமானின் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குறிப்பு: காசோலைகளை களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கி வைப்புக்கணக்கு இல: 1476க்கு அனுப்பிவைக்கலாம்.

A/C NO: 1476
Bank of Ceylon
KALUWANCHIKUDI.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை
திருப்பணிக்குழு,
களுதாவளை-களுவாஞ்சிக்குடி.


## மட்டு மாவட்டத்தில் 10642 விதவைகள்!

## அதிர்ச்சிதரும் தகவல்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக விவகாரத்துக் கோருவோரினதும், தாபரிப்புப் பணம் கோருபவர்களினதும் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருக்கின்றது. இவ்வாறான வழக்குகளுக்காக நீதிமன்றம் வருவோரின் எண்ணிக்கை வாராந்தம் 300 பேருக்குமேல் உள்ளதென்று பேராசிரியரும், சட்டத்தரணியுமான ரி.சி. சச்சிதானந்தம் மட்டு ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற "பெண்களும், மனித உரிமைகளும், எயிட்சும்" என்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை மரணத்தால் தமது கணவன்மாரை பறிகொடுத்தவர்களைவிட யுத்தத்தாலும், வன்முறைச் சம்பவங்களாலும் கடத்தப்பட்ட, காணாமல்போன, விசாரணைக்கெனக் கொண்டு செல்லப்பட்டமையால் விதவைகளாக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகம் மட்டு மாவட்டத்தில் மொத்தம் 10642 விதவைகள் உள்ளனர். இவர்களில் அதிகமானோர் இளம் பெண்களாகும்.

## ஊர்காவல் படைவீரருக்கு கரடி கடித்தது

(ஏறாவூர் நிருபர்)

பொலநறுவை மகாவலித்தென்ன எனுமிடத்தில் ஊர்காவல் படை வீரரொருவர் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் கரடி கடித்த சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கண் உட்பட உடம்பில் பல இடங்களிலும் பாரதூரமான காயங்களுக்குள்ளான அவர் தற்சமயம் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். பிரஸ்தாப காவல்துறையாளர் 6 பிள்ளைகளின் தந்தையாவார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பிரபாவின் புதிய குழந்தைகள்

# தீர்வு யார் கையில்?

நத்தாருக்கு முன்னர் இரண்டாம் சுற்றுப் பேச்சு என்ற செய்தி அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பல்ல என்பது தாமதமாகவே தெரியவந்திருக்கிறது. அல்லது தாமதமாகவே ஊகிக்க முடிகிறது.

அரச தரப்பினர் மத்தியிலிருந்து திட்டவட்டமான கருத்துக்கள் பளிச் சென்று வெளிப்படுவது மிக அரிதாகவே இருக்கிறது.

குறிப்பாக, அரசு-புலிகள் பேச்சு விடயத்தில் அமைச்சர்கள் வாய்திறக்க முன்னர் பலமாக யோசிக்கிறார்கள். சில சமயத்தில் வெவ்வேறு விதமான கருத்துக்கள், தகவல்கள் வெளியாகி குழப்பமடையவும் செய்கின்றன.

மறுபுறம், அரச கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் தமது ஊகங்களை வெளியிட்டு குழப்பு கின்றன. இதனை செய்திச் சுதந்திரத்தின் வெளிப்பாடு என்று சொல்லிச் சமாளிப் பது பொருத்தமாகப்படவில்லை.

இவற்றையெல்லாம் ஆரம்பகால அனுபவக் குறைபாடாக எடுத்துக் கொள்ள வேண்டிதுதான்.

தொடர்ந்தும் இவ்வாறு நடக்காமல் அரச தரப்பினர் நடந்துகொண்டால் சரி.

பேச்சை தள்ளிப்போட்டதில் புலிக ளுக்கு எந்த வருத்தமுமில்லை.

நத்தாருக்கு முன்பாக இரண்டாம் கட்டப் பேச்சு ஆரம்பமாகும் என்றுதான் புலிகளும் யாழ்ப்பாணத்தில் அறிவித் துக்கொண்டிருந்தார்கள்.

இதற்கிடையே இரண்டுவார போர் இடை நிறுத்தம் பற்றி அரசாங்கம் புலிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பி யிருந்தது.

போர் இடைநிறுத்தத்திற்கு தயார். அக்காலகட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி இரு தரப்பும் பேசித்தீர்மானிக்கலாம் என்று பிரபாகரன் பதில்கடிதம் அனுப்பி யிருந்தார்.

ஆனால், அரசாங்கம் புத்தாண் டுக்கோ அல்லது பாப்பரசர் வரும் நேரமாகப் பார்த்தோ போர் நிறுத்தம் செய்யலாம் என்று நினைத்திருக்க வேண்டும்.

அதனால்தான் 20.12.94 அன்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் புலி களுக்கு எழுதிய கடிதத்தில் போர் நிறுத்த திகதி எதனையும் குறிப்பிட வில்லை.

யுத்தத்தின் மூலவேர்களை ஆராய்ந்து இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டும் என்று பிரதிப் பாது காப்பு அமைச்சரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்று புலிகள் சொல்லுகிறார்கள்.

அந்தக் கடிதத்திற்கு 22.12.94 அன்று பிரபாகரன் பதில் அனுப்பியிருந்தார்.

"யுத்தத்தின் மூலவேர்களை ஆராய் வதற்கு முன்னர், யுத்தத்தின் விளைவு களால் ஏற்பட்ட மக்களின் அவலங் களைத் தீர்ப்பதே முதன்மையானது" என்று பிரபா தனது பதில் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் நாம் குறிப்பிட்டது போலவே நடந் திருக்கிறது.

தமது நிபந்தனைகளை வலியுறுத்தி புலிகள் அரசுக்கு கடிதம் எழுதியுள் ளார்கள்.

உடனடியாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் என்று புலிகள் பட்டிய லிட்டுள்ள விடயங்கள்:

* பொருளாதாரத் தடையைப் பூரணமாக நீக்குதல் * கடல்வலய தடையை அகற்றுதல் * அகதிகளை மீளக் குடியமர்த்தல் * போக்குவரத்து பாதையை திறப்பது.

விடயம் என்னவென்றால் இதில் எந்த விவகாரத்திலும் அரசும்-புலிகளும் நேர்மாறான நிலைப்பாடுகளில்தான் இருக்கின்றனர்.

எனவே- ஒரு குறிப்பிட்ட காலம் பேச்சை நீட்டி இழுத்துச் செல்ல இவையே போது மானதாக இருக்கும்.

புலிகள் உடனடிப் பிரச்சனையை பற்றி முதலில் பேசுவதற்கு வற்புறுத்துவதன் நோக்கம் மிகத் தெளிவானது.

தமிழ் ஈழக் கோரிக்கைக்கு மாற்று என்ன? என்ற ஆராய்ச்சிக்குச் சென்று

அதனால்தான், அடிப்படைப் பிரச் சனைகளை ஆராயலாம் என்று அரச தரப்பு புதிய கருத்தை புலிகளுக்குக் கூறியது.

அடிப்படைப் பிரச்சனையில் இருந்து தொடங்கினால் அரசுக்கு உள்ள சாதகங்கள் பின்வருமாறு அமையும்:

* புலிகள் கேட்கும் புனர்நிர்மாண உதவிகளை உடன் செய்யவேண்டியிருக்காது.

மாக கைவீசிக்கொண்டு தோதான இடங்களில் அவர்களால் பொறிவைக்க முடியும்.

இரு தரப்பிடமும் விவேகம் இருந்தாலும், தற்போதைய நிலவரப்படி விவேகமும், பலமும் புலிகளிடமே இருப்பதால், அரசு விட்டுப்பிடிக்கும் அணுகுமுறையை கைக் கொண்டேயாக வேண்டும்.

**"முன்பு தன் மகன்களை தாய்மார் போர்க்களத்துக்கு அனுப்பினார்கள். இன்று என் மகள்களை களத்துக்கு அனுப்புகிறேன். சென்று வா மகளே வென்று வா"**

1993 ஜூலையில் பூநகரி இராணுவ தளம்மீது தாக்குதல் நடத்தச் சென்ற புலிகளது பெண் போராளிகள் மத்தியில் பிரபா கூறிய வார்த்தைகள்தான் அவை.

ஒரு புதிய பரம்பரையை பிரபா கரன் உருவாக்கியிருக்கிறார் என்பது அவரை விமர்ச்சிப்பவர்களும் ஏற்றுக் கொண்டேயாகவேண்டிய உண்மை.

தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடும் கரும்புலிகள் இலக்கு நோக்கிப் புறப் படும் கடைசிநாளில் பிரபாகரனுடன் இரவுச் சாப்பாட்டை உண்ணவேண்டும்.

தலைவரோடு இரவுச் சாப்பாட்டை உண்பதற்காகவே கரும்புலித் தாக்கு தலுக்கு தமது பெயர் தெரிவாக வேண்டும் என்று கரும்புலிகள் மத்தியில் பலத்தபோட்டி நிலவுவது நம்புவதற்கு கஷ்டமான ஆச்சரியம்.

நீண்டகால உறுப்பினர்கள் பலர் புலிகளில் இறந்துவிட்டனர். சிலர் ஒதுங் கிச்சென்றுவிட்டனர். மாத்தையா சிறை



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்—**

## உடனடிப் பிரச்சனை பற்றி புலிகள் வற்புறுத்துவது ஏன்?

போராட்டத்தை ஊசலாட்டம் காணச்செய்ய புலிகள் விரும்பிவல்லை.

உடனடிப் பிரச்சனைகள் விடயத்தி லேயே அரச தரப்பை ஆட்டமிழக்கச் செய்யலாம் என்பதுதான் புலிகளின் கணிப்பு.

அவ்வாறு ஆட்டமிழக்கச் செய்தால் புலிகள் பின்வருமாறு மக்களுக்குச் சொல்ல முடியும், "உடனடிப் பிரச்சனைகளையே தீர்க்க முடியாத அரசால் இனப்பிரச் சனையை தீர்க்க முடியாது. எனவே போராடுவது தவிர வேறு வழி கிடையாது.

"எல்லோருமே இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வை உடனே முன்வைக்க வேண்டும்" என்று அரசைக் கோருகிறார்கள்.

புலிகள் மட்டும் இனப்பிரச்சனை தீர்வு

* பாதைத் திறப்பு விடயத்தில் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்காது.

* படையினர் தற்போது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பகுதிகள் அப்படியே இருக்கும்.

* புலிகளோடு ஒரு கட்டத்தில் பேச்சு முறிந்தாலும் கூட, புலிகளால் ஏமாற்றப் பட்டதாக எதிரணிகள் கூறுவதற்கு இட மிருக்காது. புலிகளிடம் எதையும் நாம் விட்டுக் கொடுக்கவில்லை என்று அரசு கூறிக்கொள்ளமுடியும்.

* அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிய விடயங்களை ஆராய நீண்டகாலம் தேவைப் படுமென்பதால், அக்கால கட்டத்தில் நிலவும் அமைதியான சூழலில் வெளிநாட்டு முதலீடு களை ஊக்குவிக்க முடியும்.

நத்தாருக்கு முன்பு நடைபெறவிருந்த இரண்டாம் கட்டப் பேச்சு தள்ளிவைக்கப்பட்ட தால் அரசுக்கு இருக்கக்கூடிய அரசியல் லாபம் என்ன?

நாம் ஒன்றும் விழுந்தடித்து புலிகளை தேடி ஓடவில்லை. கறாராகத்தான் நடந்து கொள்கிறோம் என்று சிங்கள மக்களை நினைக்கவைக்கலாம்.

ஆனால், பேச்சுக்கள் தள்ளிப்போவது தமிழ் மக்கள் மத்தியில் சந்திரிக்கா அரசு மீது சந்தேக ரேகைகளை உருவாக்கத் தொடங்கியிருப்பதையும் கவனிக்கவேண்டும்.

அரச தரப்பு பேச்சை சற்று தள்ளி வைத்தது புலிகளுக்கு இலாபமா? நிச்சயமாக இலாபம்தான்.

யில். யோகி போன்றவர்கள் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர். மொழி பெயர்ப்பு வேலைகள் சிலவற்றை தற்போது யோகி செய்துவருகிறார். ஒரு காலத்தில் புலிகளது குரலாக முழங்கித்திரிந்தவர்தான் யோகி.

பேபி சுப்பிரமணியம் போன்ற நீண்டகால உறுப்பினர்கள் சிலர் தலைவருக்கு சந்தேகம் வராதவகையில் பவ்வியமாக நடந்துகொள்கின்றனர்.

இளம்குமரன் என்ற பெயரில் பேபி சுப்பிரமணியம் சிலகாலம் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டார். அவ ரது பெயரும் அடிக்கடி யாழ் பத்திரிகை களில் அடிபட்டது. பின்னர் தலைவர்

## தொண்டாவுக்கு நெருக்கடி

பற்றி பேசத்தான் வேண்டும். ஆனால் அதற்கு முன் உடனடிப் பிரச்சனைகள் பற்றிப் பேசலாமே என்று சொல்லுகிறார்கள்.

அரசாங்கத்தின்பாடு திண்டாட்டம்தான். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சந்திரிக்கா வும் உடனடிப் பிரச்சனைகள் பற்றிப் பேசவே விரும்பினார்.

ஜனாதிபதித் தேர்தல்வரை நிலைமையை சிக்கலாக்காமல் பந்தை மெல்லத் தட்டி விளையாடவே அரச தரப்பு விரும்பியது.

ஜனாதிபதித் தேர்தல் அமோக வெற்றி யும், காமினி கொலை மற்றும் புலிகளது அரச எதிர்ப்பு பிரசாரங்களும் அரசின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளன.

பந்தை அடித்தாடிப் பார்க்கலாம் என்று அரசு நினைக்கிறது.

புலிகளுக்கு தேவையான கால அவகாசத் தையும், பொருட்களையும் கொடுத்துவிட்டு பின்னர் வாங்கிக் கட்டிக்கொள்ளும் நிலை ஏற் படாமல் பார்த்துக்கொள்ள அரசு விரும்புகிறது.

* தென்னிலங்கையில் அரசு எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை தீர்த்துக்கொள்ளவும் வசதி ஏற்படும்.

ஆக, மொத்தத்தில் எதனையும் இழக்கா மல், ஏமாறாமல் பேச்சை நடத்த அரசு நினைக்கிறது.

ஆனால், புலிகள் அதனை அனுமதிக்க மாட்டார்கள். புலிகளது கோரிக்கையை அரசு முற்றாக மறுக்கவும் முடியாது. மறுத்தால் தற்போது நஷ்டம் அரசுக்குத்தான்.

உடனே போர் உக்கிரமாகும். சமாதா னத்தை ஏற்படுத்தக்கூடிய அரசாங்கம் என்ற எண்ணப்பாடு சேதமாகும். புதிய அரசு கால்களை ஊன்றிக்கொள்ள முன்னரே அதிக சுமைகளை தன் தோளில் சுமக்க வேண்டியிருக்கும்.

அரசாங்கம் புத்திசாலித்தனமாக யோசித் தாலும் அதனை நடைமுறைப்படுத்த முடியாதவகையில் பிறநெருக்கடிகள் அதன் கரங்களை கட்டிப்போட்டுவிடும்.

புலிகளுக்கு அப்படியில்லை. சுதந்திர

22.10.94 அன்று அவசர அவசரமாக யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மாநாடு கூட்டிய புலிகள் ஜனாதிபதி மீதும், பேச்சு முயற்சிகளது உண்மைத்தன்மை குறித்தும் சந்தேகம் தெரிவித்து கருத்துக்களை வெளியிட்டார்கள்.

திரு. அன்ரன் பாலசிங்கம் மிகத் தெளிவாக யாழ் குடாநாட்டு மக்களுக்கு தெரிவித்த செய்தி இதுதான்: "சந்திரிக்கா முன்னர் காட்டிய ஆர்வம் இப்போது அவரிடம் இல்லை."

இதன் மூலம் தமிழ் மக்களுக்கு புலிகள் புரியவைக்க நினைப்பது என்ன?

"புலிகளைத் தவிர வேறு யார்மீதும் நீங்கள் நம்பிக்கை கொள்வதில் அர்த்த மில்லை" என்பதுதான்.

சுருக்கமாகச் சொன்னால், அரசு பொல்லைக்கொடுக்கிறது, புலிகள் அதை வாங்கி அரசுக்கு செமத்தியாக சாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

□□

என்ன நினைத்தாரோ தெரியாது, பேபியின் ஆரவாரம் குறைந்துபோய் விட்டது.

1980களில் புலிகளது அரசியற்பிரிவு தலைவராக இருந்தவர் பேபி சுப்பிர மணியம். ஆனால் இப்போது அரசியற் பிரிவுத் தலைவராக இருப்பவர் தமிழ் செல்வன்.

தலைவரை அடிக்கடி சந்திப்பவர் களில் தமிழ்செல்வனும் ஒருவர் என்று கருதப்படுவதால், 'தமிழீழ அரசவைக் கவிஞர்' என்று அழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை தலைவரை போற்றிப் பாடிய ஒரு கவிதையில் தமிழ் செல்வனை யும் மறக்காமல் வாழ்த்தியிருக்கிறார்.

தலைவர் புதியவர்களையே நம்பு கிறார். புதியவர்கள் என்றால் வயதில் மிகச் சிறியவர்களைத்தான் குறிக்கிறது.

சிறுவயதிலேயே அவர்களை இயக்கத்தில் சேர்த்து பயிற்றுவித்து

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



றெண்டு எழுத்தாரின் பிரதித் தலைவர் விரைவில் விடுதலையாகக் கூடும் எண்டு ஒரு கதை அடிபடுகுது. ஆள் இருக்கிறாரோ இல்லையோ எண்டு முதலிலை தெரிய வேணும். தெரிஞ்சாத்தானே வெளியே வருவாரோ இல்லை யோ எண்டு பந்தயம் கட்டலாம்.

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் ஜனவரியில் ஒய்வு பெறப்போகி றார் எண்டு சென்றவாரம் சொல்லியிருந்தனான் அல்லோ. விடு முறையிலை அவரை வீட்டுக்கு அனுப்பியாச்சாம். வேறை ஒரு தமிழ் பத்திரிகை ஆசிரியர்தான் தன்ரை பதவிக்கு ஆசைப்பட்டு அள்ளிவைக்கிறார் எண்டு ஒய்வு பெற்ற ஆசிரியர் பலரிடம் சொல்லிப் பொருமினவராம். யாரைப் பற்றியும் நேராக கதைக்காமல் முதுகுக்குப் பின்னாலே தூள்ளும் விசயத்திலை அந்த ஒய்வு பெற்ற ஆசிரியர் கில்லாடி எண்டு அவரோடை கூட இருந்த ஆட்களே சொல்லுகினமாம். கோள் மூட்டல், மொட்டைக் கடிதம் போன்ற விசயங்களிலும் அவர் ஈடுபட்டதாலை இப்ப அவரைப் பற்றியே யாரோ கோள்மூட்டித்தான் விரைவான ஒய்வு கிடைச்சதாம். தன்வினை தன்னைச் சுடும். எடுத்துச் சொன்னால் புரியாதுதான்.

தமிழாராய்ச்சி மாநாடு எண்டு போய் ஒரு ரவுண்ட் அடிச்சுப் போட்டு வரலாம் எண்டு கணக்குப்போட்டிருந்த நம்மூர் பண்டிதர்கள் பலர் கெட்ட கோபத்திலை இருக்கினமாம். செல்வியை அவை கிழிக்கிற கிழிக்கு முன்னாலை நிக்கேலாமல் ஓடி வந்துட்டன்.

நத்தார்-புதுவருச வியாபாரம் தலைநகரிலை களைகட்டியிருக்கு. நேரடியா பார்ப்பம் எண்டு கடைநகர் ஒன்றுக்குள் நுழைஞ்சன் பாருங்கோ. குப்பைத் தொட்டிகளுக்கு பக்கத்திலை வாட்டசாட்டமான ஆட்கள் நிண்டு முறைச்சுப் பார்க்கினம். அங்காலை இங்காலை பார்த்துப்போட்டு தொட்டிக்குள்ள இருந்து ஏதோ தூக்கப் போகினமாக்கும் எண்டு நினைச்சுப்போட்டன். நல்ல காலம் கூட வந்த நண்பர் சொன்னார்: "அது பாதுகாப்பு பிரிவு காணும். பேசாமல் வாரும்."

## அதிரடி அய்யாத்துரை

பெட்டிக் கடையிலை இருந்து பெரிய கடை வரைக்கும் யாழ்ப் பாணத்திலை றெண்டு எழுத்தார் வரி வாங்கினாலும் ஒரு விசயத்திலை கடைக்காரருக்கு தொல்லை கொடுக்கிறேல்லையாம். விலையை பொறுத்தவரை ஏற்றவும், இறக்கவும் வியாபாரிகளுக்கு முழு உரிமை கொடுத்திருக்கினமாம். யாழ்ப்பாணத்திலை ஜனநாயகம் இல்லை எண்டு யார் சொன்னது?

நடந்து முடிஞ்ச மாவீரர் தினத்திற்கு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியிலை இருந்தும் காசு திரட்டப்பட்டு போய்ச் சேர்ந்தது. முன்னாள் அமைச்சர் ஒருத்தரும் நிதி கொடுத்த ஆட்களில் அடக்கம் எண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த பட்சி ஒண்டு சொல்லுகுது.

சுவிசில் தமிழ் தம்பதி கொலை எண்ட செய்தி அறிஞ்சிரிப்பியள். பாவம் அந்த மனுஷியை ஏன் கொல்லவேணும்..? எய்தவன் இருக்க அம்பை நோகுறது வீரமில்லைப் பாருங்கோ.

சைவ சமய மூத்த கடவுளின் பெயரைக்கொண்ட அரசியல்வாதியின் பெயரை விற்கிறாராம் பனை வளத்தை பதம் பார்த்த ராசா. அந்த ராசா என்ன சொல்லுறார் தெரியுமோ? அந்தத் தலைவர் ஆசுப்பத் திரியிலை இருக்கேக்கை கட்சி முக்கியஸ்தர்கள் எட்டிப்பார்த்துப் போட்டு ஓடினவையாம். தான் மட்டும்தான் அவரின் பக்கத்திலை இருந்து கவனிச்சவராம். சரிதான், அதுக்காக தான் சுருட்டினதையும் கவனிக்க வேண்டாம் எண்டு சொல்லுறாராக்கும்.

எத்தனையோ தமிழாராய்ச்சி மாநாடுகள் நடந்தாச்சு. வேண்டாம் எண்டு சொல்லேல்லை. ஆனால், தமிழ் வாழ்க என்று சொன்னால் மட்டும் போதுமோ? தமிழ் வளரச் செய்ய வேண்டாமோ? கல் தோன்றி மண் தோன் றாக் கால மரபுகளையும் விதிகளையும் பற்றிப் பேசிப் பேசியே தூங்கிப் போற ஆட்களுக்கு புத்திசொல்லுற கவிதை இது. எழுதினது செல்வ கணபதி.

**"ஊசி செய்யும் சிறு தொழிலின் நுட்பம் கூற**
**ஒரு கோடி நூல் வேண்டும் தமிழில்; இந்தக்**
**காசியினில் இன்றுவரை அறிவின் மன்னர்**
**கண்டுள்ள கலைகள் எல்லாம் தமிழில் எண்ணிப்**
**பேசி மகிழ் நிலை வேண்டும்; விண்ணை எட்டிப்**
**பிடிக்கிறது மனித இனம்; முன்னோர் செல்வ**
**ஆசியிலே வாழ்கின்றோம்; காலமெல்லாம்**
**அதன் பெருமை பேசுகின்றோம்; அவலமன்றோ!!"**

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு போகாத கவலையை விட்டுப்போட்டு உருப்படியாய் ஏதாவது ஆராய்ச்சி செய்யுங்கோ!

www.padippakam.com


# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன் எழுதுவது

அரசியல் தொடர்

8

தீவிரவாத குழுவை மடக்கிப்பிடிக்கும் புகழைத் தானே முழுதாக பெற்றுக்கொள்வதே அவரது நோக்கம்.

பிரபலம், மற்றும் பதவி உயர்வுக்கு தனது திறமையை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்று நினைத்தார் பஸ்தியாம்பிள்ளை.

சப்-இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன் பாலசிங்கம், சாரதி சிறிவர்த்தனா ஆகியோரை அழைத்துக்கொண்டு அவர் யாழ்ப்பாணத்திலிருந்து முருங்கனுக்குப் புறப்பட்டார்.

தாம் எங்கே போகிறோம் என்ற தகவலைக்கூட பஸ்தியாம்பிள்ளை தனது மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை.

4.7.1978 அன்று முருங்கன்-மடு வீதிக்கு உட்புறம் இருந்த காட்டுப்பகுதி பஸ்தியாம்பிள்ளை குழுவினரால் முற்றுகையிடப்பட்டது.

முற்றுகையை முகாமில் இருந்த இளைஞர்களும் எதிர்பார்க்கவில்லை.

வாக்குமூலம் கொடுத்துவிட்டு நீங்கள் திரும்பி வந்துவிடலாம். என்னோடு வாருங்கள். ஒரு பிரச்சனையும் இருக்காது."

என்றார் பஸ்தியாம்பிள்ளை.

இளைஞர்களும் உடன்படுவதுபோல் நடித்து தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

"தேநீர் குடித்துவிட்டுச் செல்லலாம்."

என்றார் ஒரு இளைஞர். தேநீர் தயாரானது. பஸ்தியாம்பிள்ளை உள்ளே பண்ணைக்குள் இருந்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் பேரம்பலமும் ஏனைய இரு பொலிசாரும் வெளியே சென்று நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

## முந்திக்கொண்ட இளைஞர்கள்

இதுதான் சமயம் என்று இளைஞர்கள் உஷாரானார்கள். செல்லக்கிளி பஸ்தியாம்பிள்ளை மீது பாய்ந்தார். பஸ்தியாம்பிள்ளையிடம் இயந்திரத் துப்பாக்கி இருந்தது. செல்லக்கிளியால் அது பறிக்கப்பட்டது.

பஸ்தியாம்பிள்ளை சூழ்நிலையின் தீவிரத்தை கணக்கெடுக்க தவறிவிட்டார். தனது புத்திசாலித்தனம் மீதும் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்.

எதிர் தரப்பின் பலத்தை குறைவாக எடைபோட்டிருந்தார்.

தனது தவறுகளை பஸ்தியாம்பிள்ளை உணர்ந்துகொள்ள அவகாசமே கொடுக்கப்படவில்லை.

அவரது இயந்திரத் துப்பாக்கியே அவருக்கு எமனாய் மாறியது.

இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளைமீது இயந்திரத் துப்பாக்கி ரவைகளைப் பொழிய, குழுவினர் சென்ற வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது. கொலையாளிகள் விரைவில் வலையில் மாட்டிவிடுவார்கள் என்றது பொலிஸ்.

## அபாய அறிவிப்பு

ஆயுதப் போராட்ட வரலாற்றில் முதன் முதலில் நடைபெற்ற பாரிய தாக்குதல் பஸ்தியாம்பிள்ளை குழுவினருக்கு எதிரான நடவடிக்கைதான்.

அந்த நடவடிக்கை அரசாங்கத்திற்கு அபாய அறிவிப்பாக விளங்கியது.

அமைதிக்குப் பெயர் பெற்ற வடபகுதியில் தீப்பொறிகள் பரவத் தொடங்கிவிட்டன. தீ பரவி காட்டுத்தீயாக முன்னர் அணைத்துவிட வேண்டும் என்று அரசு நினைத்தது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் போல் அல்ல, நாம் கடுமையாக நடந்து கொள்வோம் என்று காட்டிக்கொள்ள ஜே.ஆர்.தலைமையிலான ஐ.தே.கட்சி அரசாங்கம் திட்டமிட்டது.

அரசும், அதன் பொலிஸ் படையினரும் பஸ்தியாம்பிள்ளைக் குழுவினரை அழித்த இளைஞர்களை வடபகுதியில் தீவிரமாகத் தேடிக்கொண்டிருந்தபோது,

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் பாராளுமன்றக் காரியாலயத்தில் இருந்த தட்டச்சு இயந்திரம் ஒரு பெண்ணால் இயக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்னும் கடிதத் தலைப்பில் அந்தப் பெண் எழுத்துக்களை அரங்கேற்றிக்கொண்டிருந்தார்.

## பெண்களுக்கு அழைப்பு

"பெண்களும் தமிழ் ஈழ மீட்புப் போரில் அணி திரள வேண்டும்" அறைகூவல் விடுப்பார் மங்கையற்கரசி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதங்கள், சத்தியாக்கிரகங்கள், சட்டமறுப்புப் போராட்டங்கள் போன்றவற்றில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டனர்.

ஊர்மிளாதேவி, திலகவதி போன்றவர்கள் அவர்களில் முக்கியமானவர்கள்.

1978ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு யாழ்ப்பாணம் ஆவரங்காலில் நடைபெற்றது.

மாநாட்டு மேடையில் ஒரு பெண் பாடினார், "துவக்கு போரை துவக்கு, துவக்கும் போரை துவக்கு"

அமுதர் உட்பட மேடையில் அமர்ந்திருந்த மு.சிவசிதம்பரம்வரை அனைவருமே இரசித்துக்கேட்டனர்.

பாடலில் இரு பொருள் இருந்தது. அகிம்சைப் போரை ஆரம்பியுங்கள் என்றும் அர்த்தப்படுத்தலாம். ஆயுதப் போரை (துவக்குப் போர்) ஆரம்பியுங்கள் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

அகிம்சைவாதிகள் பாடலை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பொருள் தெரியும். ஆயுதம் ஏந்தியவர்களின் முகங்களும் தெரியும்.

இப்போது எதிர்கட்சி தலைவரின் காரியாலயத்திற்கு மீண்டும் செல்வோம்.

ஊர்மிளாதேவி தயாரித்துக்கொண்டிருந்தது புலிகள் இயக்கத்தின் உரிமை கோரும் கடிதம்.

# ஆயுதப் போராட்டத்தில் முதல் பெரும் தாக்குதல்

## அமுதரின் காரியாலயத்தில் தயாரான புலிகளின் செய்தி!

### காட்டுக்குள் முற்றுகை

சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை தீவிரவாத இளைஞர்கள் பற்றிய பல்வேறு தகவல்களைத் திரட்டி வைத்திருந்தார்.

சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொல்லப்பட்டபின்னர் பஸ்தியாம்பிள்ளைதான் தீவிரவாத இளைஞர்களை கண்டறிவதில் முழு மூச்சாய் ஈடுபட்டார்.

பொத்துவில் கனகர் மீது கொழும்பு கொள்ளுப்பிட்டியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட இளைஞர்களை தனக்கு தெரியும் என்று பஸ்தியாம்பிள்ளை கூறிக்கொண்டிருந்தார்.

தமிழ் அதிகாரி என்பதால் விபரங்களை திரட்டுவதற்கு வசதியாக இருந்தது.

இதேவேளை தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்வதில் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை கைதேர்ந்தவர் என்று பரவலாகப் பேசப்பட்டுவந்தது.

கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களது ஆண் உறுப்புக்களை மேசை லாச்சியில் வைத்து நெரிப்பது, மோட்டார் சைக்கிள் சைலன்ஸர் குழாய்க்குள் ஆண் உறுப்பை வைக்கச்சொல்லிவிட்டு மோட்டார் சைக்கிளை 'ஸ்டாட்' பண்ணுதல் போன்ற பல்வேறு சித்திரவதைகளை சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை மேற்கொண்டதாக 'சுதந்திரன்' பத்திரிகையில் செய்திகள் வெளிவந்தன.

முருங்கன்-மடு வீதிக்கு உட்புறமான காட்டுப்பகுதியில் தீவிரவாத இளைஞர்கள் சிலர் முகாமிட்டுள்ளதாக பஸ்தியாம்பிள்ளைக்கு நம்பகமான தகவல் கிடைத்தது.

தனக்கு கிடைத்த தகவலை அவர் மிக இரகசியமாக வைத்துக்கொண்டார்.

புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் அந்த முகாமில் இருந்தனர்.

உமா மகேஸ்வரன், செல்லக்கிளி, நாகராசா, ரவி, ஐயர் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் அங்கிருந்தனர். பிரபாகரன் அந்த நேரத்தில் அங்கிருக்கவில்லை.

இளைஞர்களிடம் "நீங்கள் யார்? இங்கு என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார் பஸ்தியாம்பிள்ளை.



இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை

"விவசாயம் செய்கிறோம். அதுதான் பண்ணையில் இருக்கிறோம்." என்றனர் இளைஞர்கள்.

ஆனால், பஸ்தியாம்பிள்ளை அவர்களில் சிலரை அடையாளம் கண்டு கொண்டார்.

அடையாளம் கண்டதைக் காட்டிக் கொள்ளாமல் அவர்கள் சொன்னதை நம்புவதுபோல நடித்தார்.

"பொலிஸ் நிலையத்திற்கு வந்து ஒரு

சப்-இன்ஸ்பெக்டர் பேரம்பலம், சார்ஜன் பாலசிங்கம், பொலிஸ் சாரதி சிறிவர்த்தனா ஆகியோர் 'என்ன சத்தம்?' என்று ஓடி வந்தனர்.

அவர்கள்மீதும் தாக்குதல் நடந்தது. முற்றுகையிட்ட பொலிஸ் குழு முற்றாக அழிக்கப்பட்டது.

அருகில் இருந்த கிணற்றில் உடல்களைப் போட்டுவிட்டு, பொலிஸ் குழு வந்த வாகனத்தை எடுத்துக்கொண்டு இளைஞர்கள் குழு தப்பிச் சென்றது.

"சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவரோடு மூன்று பொலிஸ் அதிகாரிகளும் முருங்கன் காட்டுப் பகுதியில் கோரக் கொலை!"

பத்திரிகைகளுக்கு ஒரு வாரகாலமாக செய்திகளுக்கு பஞ்சமேயில்லை. கொலையாளிகள் யார்? கொலை எப்படி நடந்திருக்கலாம்? பொலிஸ் வட்டார ஊகங்கள் பத்திரிகைகளுக்கு தீனி போட்டுக்கொண்டிருந்தன.

கொலைக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களைத் தவிர பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். சிறையிலடைக்கப்பட்டார்கள். சித்திரவதைக்கு உள்ளானார்கள்.

கொலையாளிகளில் ஒருவர் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையை சந்தித்து தந்திரமாகப் பேசி காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றிருக்கலாம். அங்கு தயாராய் காத்திருந்த கொலையாளிகள் வேட்டையை நடத்தியிருக்கலாம் என்று பொலிஸ் தரப்பு ஊகம் ஒன்று வெளியாகியது.

சில நாட்களின் பின் பஸ்தியாம்பிள்ளை

அவர்தான் ஊர்மிளாதேவி! தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவை தீவிரமாக இயங்கிய காலகட்டம் இது.

மகளிர் பேரவைக்கு தலைவியாக இருந்தவர் அன்னலட்சுமி பொன்னுத்துரை.

இவர் ஆயுதப் போரில் ஈடுபட்டு முதல் களம் பலியான பொன். சிவகுமாரனின் அம்மா!

மகளிர் பேரவைக்கு செயலாளராக



லெப்டினன்ட் செல்லக்கிளி (செல்வநாயகம்)

இருந்தவர் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம். இவர் தலைவர் அமுதரின் பாரியார்.

"வாழ்க ஈழத் தமிழகம் வாழ்க வாழ்க வாழ்கவே" உணர்ச்சி ததும்ப பாடுவார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.

தமிழ் ஈழ தேசியக்கொடி உதயசூரியன் கொடி! அதனை ஏற்றிவைப்பார் அமுதர். கொடி வணக்கப் பாடலை பாடுவார் மங்கையற்கரசி.

### அரசின் விழிப்பு

1978 ஏப்ரல் மாதம் 25ம் திகதி சகல பத்திரிகை காரியாலயங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு உரிமை கோரும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

ஆங்கிலததுல் தட்டச்சு செய்யப்பட்ட அந்தக் கடிதத்தில் புலிகளது மத்தியகுழு சார்பாக உமா மகேஸ்வரன் கையொப்பமிட்டிருந்தார்.

அல்பிரட் துரையப்பா கொலை, சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் என்.நடராசா கொலை, சி.ஐ.டி.பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கருணாநிதி, சண்முகநாதன் மற்றும் சண்முகநாதன் கொலை, பொத்துவில் பா.உ. கனகரத்தினம் கொலை முயற்சி, பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலை போன்றவை உரிமை கோரப்பட்டிருந்தன.

கடிதத்தின் பிரதி ஒன்று இலங்கை புலனாய்வுப் பிரிவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அரசாங்கம் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் மூளையில் ஒரு திட்டம் உருவானது.

(தொடர்ந்து வரும்)

## எக்ஸ்ரே ரிப்போர்ட் (தொடர்ச்சி)

வளர்ப்பதால் மிகவும் விசுவாசத்துடன் இருப்பார்கள் என்பது பிரபாவின் நம்பிக்கை.

இளம் கன்றுகள் பயமறியாது. அவர்கள் மத்தியில் கேள்விகளுக்கும் இடமில்லை. தமிழனுக்கு ஒருநாடு வேண்டும். அதுவே தாகம். தங்களுக்கென்று ஒரே ஒரு தலைவர். அவரே பிரபாகரன். வேறு சிந்தனைகளுக்கே இடமில்லை.

உயிர்விடுதல் புனிதமான காரியம். தியாகத்திற்கு மட்டுமே மரியாதை! பிரபாகரனின் புதிய குழந்தைகளுக்கு தமது தலைவர்தான் சகலமும். வெளியுலகம் அவர்களுக்கு பரிச்சயமில்லாத ஒன்றாகி விட்டது.

'ஜிக்கு புக்கு ஜிக்கு புக்கு ரயிலு' அவர்களுக்கு தெரியாத பாடல். பாடலை மட்டுமல்ல அதில் குறிப்பிடப்படும் ரயில் வண்டியைக்கூட அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்.

"சூப்பர் ஸ்டாரு யார் என்று கேட்டால் சின்னக் குழந்தையும் சொல்லும்" என்றொரு பாடல் இருக்கிறது. ஆனால் யாழ்ப்பாணக் குழந்தைகள் யார் என்று சொல்லாது- தெரியாது.

தென்னிந்திய திரைப்படங்களுக்கு முற்றாக தடை விதித்துவிட்டார்கள் புலிகள்.

'புலிமாமா' பாடலும், 'இந்த மண் எந்தன் சொந்த மண்' பாடலும் யாழ்ப்பாணக் குழந்தைகளுக்கு மனப்பாடம்.

பிரபாகரன் உருவாக்கியிருப்பது புதிய பரம்பரை. அந்தப் பரம்பரையின் எண்ணங்களுக்கு மாறான தீர்வுகளை யார் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் நிறைவேற்ற முடியாது. அவர்கள் விடமாட்டார்கள்.

ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு முன்னைய குழந்தைகள் போல விரல் சூப்பிக் கொண்டிருக்க அவர்கள் தயாராக இல்லை.

இதுதான் யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தற்போதுள்ள உண்மையான நிலவரம். தமிழ் ஈழத்திற்கு குறைந்த அரசியல் தீர்வு பற்றிப் பேசும் எவருக்குமே இது அச்சுறுத்தும் உண்மையாக இருக்கலாம். உண்மைகள் சகல சந்தர்ப்பங்களிலும் இனிப்பாகவே இருக்கவேண்டும் என்பதில்லை!

□□

அமைச்சர் என்று மீண்டும் அழைக்கப்படுவதைத் தவிர வேறெந்த முக்கியத்துவத்தையும் தொண்டமான் புதிய அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளவில்லை.

தொண்டாவின் விசுவாசிகள் அப்படித்தான் முணுமுணுக்கிறார்கள்.

அமைச்சர் பதவியேற்றபின் தனக்காக ஒரு அலுவலகத்தைப் பெற்றுக்கொள்ளவே அவர் அலைய வேண்டியதாகிவிட்டது என்பதுதான் மகா சோகம்.

தொண்டாவின் ஒரு தொண்டராக அரசியலில் நுழைந்தவர் திரு. சந்திரசேகரன்.

ஒரு தொண்டாவின் வழியைவிட்டு விலகி அவர் தனிவழி சென்றார்.

இப்போது இருவருமே ஒரு திருப்பத்தில் சந்தித்துக்கொண்டு ஒப்புக்காவது சிரித்துக் கொள்ளவேண்டியாகி விட்டது.

திரு. சந்திரசேகரன் சென்றவழிதான் சரியென்பதை ஒப்புக்கொள்வதுபோல திரு. தொண்டமானும் மிகத் தாமதமாக பொதுஜன முன்னணியோடு போய் சேர்ந்துகொண்டார்.

தனது முன்னாள் கூட்டாளிகளான ஐக்கிய தேசியக் கட்சி மறைமுகமாகத் தொடுக்கும் அம்புகளில் இருந்து தொண்டா தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டியவராகியுள்ளார்.

திரு. தொண்டமான் ஊழல் புரிந்ததாக கொழும்பின் ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிட்ட தகவல்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மூலமே கசிந்தவை என்று நம்பப்படுகிறது.

கசப்பான ஒரு உண்மையை நாம் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியோடு கொண்ட தேர்தல் உடன்பாடு தம்மைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லுகின்றது இ.தொ.கா.

ஆனால், ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குண்டுவெடிப்பில் பலியானதால் ஏற்பட்ட வெற்றிடங்களை தமது உறுப்பினர்கள் மூலம் இ.தொ.கா. நிரப்பி வருகிறது.

அதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒன்றும் நன்றி சொல்லத் தேவையில்லை. நியாயமாகப் பார்த்தால் புலிகளுக்குத் தான் நன்றிசொல்லவேண்டும் என்று தொண்டா நினைக்கிறாரோ தெரியவில்லை.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல பொதுஜன முன்னணிகூட திரு. தொண்டமானை நம்பகமானவராக நினைக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

தொண்டா ஒரு சுடு சொல் கூட புலிகளை நோக்கி எறிந்தது கிடையாது. ஆனால் புலிகள் தொண்டாமீது காரசாரமான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள்.

தொண்டாவிடம் இப்போதும் மலையக மக்களது கணிசமான வாக்கு வங்கி இருப்பதால் மட்டுமே ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் அவரைப் பகைக்காமல் இருக்கின்றன.

அரசாங்கத்தில் இருந்துகொண்டே அடிக்கடி முரண்பாடாக பேசுவதும், மலையக மக்களிடம் தனக்குள்ள செல்வாக்கை காட்டி வேலைநிறுத்தம், போராட்டம் மிரட்டுவதும் சலிப்பை ஏற்படுத்தும் தந்திரங்களாகி விட்டன.

அரசாங்கத்திடம் பணிந்து போகவில்லை. நிமிர்ந்து நிற்கிறோம் என்று தொண்டா பேசுவதெல்லாம் மேடையோடு சரி என்ற கருத்து மலையக இளைஞர்கள் மத்தியில் மெல்ல மெல்ல வளரத்தொடங்கி விட்டது.

இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் வி. சென்னன் சொல்வதன்படி, "கம்பனிக்காரர்கள் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றவாறு தோட்டங்களை நடத்துகிறார்கள். தொழில் அமைச்சு மௌனம் சாதிக்கிறது.

2500 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பதுளையில் உள்ள தோட்டத்தை பௌத்த பிக்கு ஒருவர் சொந்தம் கொண்டாடி வருகிறார்.

"ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் தோட்டங்களைப் பொறுப்பேற்கப் போவதாக பொதுஜன முன்னணி சொன்னது. இதுவரை ஒரு தோட்டத்தைக்கூட பொறுப்பேற்கவில்லை."

இவ்வாறு வி.சென்னன் சொல்லுகிறார். இ.தொ.காவின் மற்றொரு பா.உறுப்பினர் எம். சிவலிங்கம் மிகவும் மனவருத்தத்தோடு சொல்வது இது: "இன்று தோட்டத் துரைமார்கள் நாங்கள் எழுதும் கடிதங்களைக் கூடக் கவனத்தில் எடுப்பதில்லை. பதில் எழுதுவது கிடையாது.

"பத்திரிகைகளை விரித்துப் பார்த்தால் "அமைச்சரோடு பேசி பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளன." என்று செய்தி வருகிறது. ஆனால் பத்திரிகைகள் வாயிலாக வரும் அந்தச் செய்திகள் பத்திரிகையோடு நின்றுவிடுகின்றன. எங்களுடைய பிரச்சனைகள் தீர்ந்தபாடாக இல்லை.

"'சமுர்த்தி' திட்டத்தின் கீழ் மலையக தமிழ் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை."

என்கிறார் இ.தொ.கா. பா.உ. சிவலிங்கம்.

இ.தொ.காவின் உள்ளேயே நிறைய அதிருப்திகள் நிலவுகின்றன. தொண்டாவின் அரசியல் சாணக்கியம் தடுமாறத்தொடங்கி விட்டது என்பது மட்டும் உண்மை.

தன்னோடு முரண்பட்டு வெளியேறிய சந்திரசேகரனும், தன்னால் வெளியேற்றப்பட்ட செல்லச்சாமியும் எங்கே போய் சேர்ந்தார்களோ அங்கேயே தானும் போய் சேரவேண்டிய நிலை வந்தது என்றால் அது தொண்டாவின் விருப்பமல்ல. அவரை மீறிய அரசியல் மாற்றங்களின் கட்டாயமே அது.

போய்ச் சேர்ந்த இடத்திலும் பூரண வரவேற்பில்லை. தனது அணிக்குள்ளும் திருப்தியில்லை. மலையக தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களது பிரச்சனைகளும் தீர்ந்தபாடில்லை. 'வேலை நிறுத்தம் செய்ய வேண்டிவரும்' என்று தொண்டா விடுத்த எச்சரிக்கையையும் அவரது வழக்கமான மிரட்டல் பாணியாக அரசு அலட்சியம் செய்திருக்கிறது.

ஆனால், இப்போதும் மலையக தமிழ் மக்களில் கணிசமானோர் திரு. தொண்டமானை மலையென நம்பியிருக்கிறார்கள். அவர்களது நம்பிக்கையை தொடர்ந்து பேணவேண்டுமானால் தனது வழக்கமான அரசியல் பாணியில் இருந்து விலகி தொண்டா புதிதாக ஏதாவது செய்தேயாக வேண்டும்.

www.padippakam.com நன்றி நூலகத்திட்டம்

# சந்திரிகா சந்திக்கும் முக்கிய சவால்

அலசுவது-இராஜதந்திரி



இலங்கையைப் பொறுத்தவரை விடைபெற்றுச் செல்லும் 1994ம் ஆண்டு அரசியல் ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே இருக்கின்றது.

1994ம் ஆண்டில் அரசியல் ரீதியாக இலங்கையில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள், பல்வேறு புதிய மாற்றங்களுக்கும் வழிவகுத்திருக்கக் காணப்படுகின்றது.

இந்த ஒரே ஆண்டிலேயே நாட்டின் ஆட்சியதிகாரங்களை நிர்ணயிக்கும் இரு முக்கிய தேர்தல்களான பாராளுமன்றப் பொதுத் தேர்தல், மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கான தேர்தல் என்பன இடம்பெற்றிருந்தன.

இத் தேர்தல்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி கட்சி வெற்றியீட்டி நாட்டில் புதிய ஆட்சிமுறையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக, அதாவது 17 வருடங்கள் ஆட்சிப்பீடத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாக தற்போது பாராளுமன்றத்தில் இடம்பிடித்துள்ளது.

இந்நிலையில் அரசியல் வானில் திடீரென ஒரு சுறாவளி ஏற்பட்டு மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளதையே 1994ம் ஆண்டில் காண முடிந்தது.

ஆனால் இந்த முக்கிய மாற்றங்கள், இதுவரை காலமும் இருந்துவந்த அனர்த்தங்கள், கெடுபிடிகள், அராஜகங்கள், யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவருமா அல்லது இருந்துவரும் நிலைமைகளை மேலும் மோசமானதாக்கிவிடுமா என்பதனை புதிய ஆண்டான 1995ம் ஆண்டிலேயே புரிந்துகொள்ள முடியும்.

பாராளுமன்றத் தேர்தலையடுத்து கடந்த 17 வருடகாலமாக ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நலிவடைய ஆரம்பித்தது. பின்னர் ஜனாதிபதித் தேர்தலையடுத்து ஐ.தே.கவின் பலம் பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சியின்போது ஐ.தே.க. சிறிது சிறிதாக ஆட்டங்காணத் தொடங்கியது. உட்பூசல்கள் மலிந்து ஐ.தே.கவிலிருந்தும் பல முக்கிய பிரமுகர்கள் பிரிந்து சென்றனர்.

தொடர்ந்து ஐ.தே.கவிலிருந்து பிரிந்துசென்ற லலித் அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டமை, அதனையடுத்து ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டமை போன்றன இலங்கை அரசியலில் பெரும் ஈடாட்டத்தை தோற்றுவித்திருந்தன.

இப்பெரும் அரசியல் கொலைகளின் தொடர்ச்சியாகவே ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான காமினி திசாநாயக்காவின் கொலையும் இடம்பெற்றிருந்தது. இக்கொலை ஐ.தே.கவை மேலும் உலுப்பிவிட்டிருந்தது.

ஏனெனில் காமினியுடன் சேர்ந்து ஐ.தே.கவின் பல முக்கிய பிரமுகர்களும் கொல்லப்பட்டிருந்தனர். இக்கொலைகள் இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விட்டிருந்த தருணத்திலேயே இலங்கை அரசியலில் வரலாறு காணாத பெரு வெற்றியுடன் சந்திரிகா ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார்.

இதனையடுத்து சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு முழு அளவிலான ஆளுமையை ஏற்படுத்திக்கொண்டது.

இன்று இலங்கையில் எத்தகைய முடிவையும் எடுக்கும் பூரண அதிகாரம் கொண்ட ஒரு ஸ்தானத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இருக்கின்றார். அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தக்கூடிய வல்லமையை சந்திரிகா கொண்டுள்ளார்.*

பாராளுமன்றத் தேர்தல், அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தல் ஆகியனவற்றில் ஜனாதிபதி சந்திரிகா தீவிரமாக ஈடுபட்டிருந்தார். பெருஞ் சவால்களை எதிர்நோக்கிய நிலையிலேயே சந்திரிகாவின் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்றிருந்தன.

## '94ல் சந்திரிகாவுக்கெதிரான பெரும் பிரசாரமாக மாறிய காமினி கொலை

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளை, ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான காமினி திசாநாயக்கா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

காமினியின் கொலையை சந்திரிகாவுக்கெதிரான ஒரு பெரும் பிரசாரமாக ஐ.தே.க.வினர் கட்டவிழ்த்து விட்டிருந்தனர்.

ஆனால் இப்பிரசாரங்களையெல்லாம் மழுங்கடித்து புதிய கண்ணோட்டத்தில் தமது எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கும் வகையிலேயே நாட்டு மக்கள் சந்திரிகாவை பெரும்பலத்துடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் தென்னிலங்கையில் தமது அமைச்சரவையைச் சரிசெய்து, பின்னர் ஏனைய முக்கிய பொறுப்புக்களையும் கையாளும் நடவடிக்கைகளில் இறங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா, புதிய ஆண்டில் சந்திக்கவிருக்கும் விடயங்களே அவரது அரசியல் சாணக்கியத்துக்கு சவால்விடவிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா அரசு சந்திக்கவிருக்கும் முக்கிய சவாலாக தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமரசப் பேச்சுக்கள் விளங்குகின்றன. இப்பேச்சுக்கள் குறித்து இலங்கையில் பல்வேறுபட்ட கருத்துக் கண்ணோட்டங்கள், அபிப்பிராயங்கள் என்பன நிலவுகின்றன.

இருந்த போதிலும் அரச தரப்பினரதும், தமிழீழ விடுதலைப் புலிகளதும் நாடியைப் பிடித்தறிவது போலவே அமெரிக்க 'டைம்' (TIME) சஞ்சிகை அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோரை விரிவான முறையில் பேட்டி கண்டிருந்தது.

அப் பேட்டியில் சந்திரிகா, பிரபாகரன் ஆகியோர் தெரிவித்தவை அமைதி முயற்சிகளில் அவர்களுக்கிருக்கும் விருப்பத்தை வெளியிடுவதாக விளங்கியிருந்தன.

இவை தவிர சந்திரிகா கடந்த வாரங்களில் தமிழ் அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பலரையும் சந்தித்திருந்தார். அச் சந்திப்புக்களின்போதும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முயற்சிகளிலிருந்து தாம் தவறிவிடவில்லை என்று சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.
இவையாவற்றுக்கும் மேலாக கடந்தவாரம் 'ரூபவாஹினி' தொலைக்காட்சியில் தமது அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் கருத்துக்களை சந்திரிகா பேட்டியொன்றின் மூலமாக வெளியிட்டிருந்தார்.

அப்பேட்டியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தனது அரசாங்கம் தொடர்ந்து ஈடுபடுமெனவும், யுத்த நிறுத்தமொன்று ஏற்படும் பட்சத்தில் அது ஒரு நிரந்தர யுத்த நிறுத்தமாகவே இருக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார்.

சந்திரிகாவின் பேட்டி- போர் நிறுத்தமொன்றை அவரது அரசு எதிர்பார்ப்பதாக இருக்கின்றது.

இதே வேளை சந்திரிகா அரசு சில மாதங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் குறித்து தொடர்பு கொண்டபோது போர் நிறுத்தமொன்றைக் கொண்டுவரவேண்டுமென்று புலிகள் தரப்பிலும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

முதற்சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக சந்திரிகா பிரதமராக இருந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுடன் கடிதத் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

அப்போது திரு.பிரபாகரன் சந்திரிகாவுக்கு எழுதிய கடிதமொன்றில், பேச்சுவார்த்தைகளில் ஒத்துழைக்க தமது தரப்பினர் தயராக இருப்பதாக அறிவித்திருந்ததுடன், போர் நிறுத்தமொன்றையே தாம் வெகுவாக எதிர்பார்ப்பதாகவும், எனவே போர் நிறுத்தத்தைக் கொண்டுவரும் முயற்சிகளுக்கே சந்திரிகா அரசு முதன்மையளிக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

போர் நிறுத்தம் குறித்து சந்திரிகா தமது ரூபவாஹினி பேட்டியில் குறிப்பிடுகையில், ஒரு நிரந்தரமான போர் நிறுத்தமொன்றையே தாம் எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இரு தரப்பினருமே போர் நிறுத்தமொன்றை விரும்புகின்றனர்; அது நிலையானதாக விளங்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றனர். இருந்த போதிலும் இந்த விருப்பங்கள், எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக ஆங்காங்கே மோதல்கள் ஏற்பட்டு பதட்டங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கின்றது.

போர் நிறுத்தமென்ற விடயம் வெறுமனே வாய்ப் பேச்சில் கூறிவிடக்கூடியதொன்றல்ல. போர்ச் சூழலினால் பீடிக்கப்பட்டிருக்கும் வடக்கு,கிழக்குப் பிரதேசங்களுக்குப் பயணஞ் செய்து அங்குள்ள நிலவரங்களை நேரில் பார்வையிடுவதன் மூலமே போர் நிறுத்தமொன்றைக் கொண்டுவருவது எத்துணைக் கடினமானதென்பது புலனாகும்.

ஒருபுறம் படையினரும், மறுபுறம் விடுதலைப் புலிகளுமாக ஒருவரது நடமாட்டத்தை ஒருவர் கண்வெட்டாது அவதானித்துக்கொண்டிருப்பதையே காண முடியும்.

> வடக்கு-கிழக்கில் நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கான உறுதியான அத்திவாரமாக போர்நிறுத்தம் விளங்குகின்றது.



இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஒரு சிறிய சலனமும் ஒரு மோதலை உருவாக்கிவிடுவதாக இருக்கின்றது.

யுத்தப் பிரதேசத்தில் நடமாடும் படையினரும் மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருவரது நகர்வு குறித்து மற்றவர் சந்தேகத்துடன் நோக்கும் தன்மைகளே காணப்படுகின்றன. யுத்தப் பிரதேசங்களில் இத்தகைய நிலைமைகள் காணப்படுவது சகஜம்.

ஆனால் அரசியல் அரங்கிலும் இதுபோன்ற சந்தேகங்களும் முரண்பாடுகளும் நிலவும் சந்தர்ப்பங்களில் ஒரு பரந்துபட்ட விவகாரத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலைமைகள் தோன்றுகின்றன.

எனவே யுத்தப் பிரதேசத்தில் யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்துவது குறித்த தீர்மானம் அரசியல் அரங்கில் ஆட்சியதிகாரங்களைக் கொண்டவர்கள் மத்தியிலேயே எடுக்கப்பட வேண்டியதாகவுள்ளது.

இது விடயத்தில் சந்தேகங்கள் இன்றி தெளிவான, உறுதியான உடன்பாடுகளுடன் எடுக்கப்படும் நடவடிக்கைகளே அர்த்தமுள்ள போர் நிறுத்தமொன்றைக் கொண்டு வருவதற்கு வழி வகுக்கும்.

ஜனாதிபதி சந்திரிகாவும், திரு.பிரபாகரனும் போர் நிறுத்தமொன்றை உண்மையிலேயே விரும்புவதாக இருந்தால், அவர்கள் முதல்படியாக இவ்விடயத்தையே தீவிரமாகப் பரிசீலனை செய்து ஓர் ஆக்கபூர்வமான முடிவை எட்ட முன்வரவேண்டும்.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு நிரந்தர தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஓர் உறுதியான அத்திவாரமாகவே போர் நிறுத்தம் விளங்குகின்றது.

இந்நிலையில் போர் நிறுத்தமொன்றைக் கொண்டு வருவதில் இரு தரப்பினரும் எட்டுகின்ற இணக்கப்பாட்டிலேயே எதிர்கால சமரசப் பேச்சுக்களின் வெற்றியும் பெருமளவு தங்கியுள்ளதெனக் கருதலாம்.

இலங்கை இனப் பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வு வேண்டுமென பல்வேறு அரங்குகளிலும் முழக்கஞ் செய்வோர் பாலஸ்தீன-இஸ்ரேலிய சமாதான ஒப்பந்தம், மற்றும் பிரிட்டன்-வட அயர்லாந்து தரப்பினரிடையே தோன்றிவரும் நல்லெண்ணங்கள் என்பனவற்றை முன்னுதாரணங்களாகக் குறிப்பிடுவதுண்டு.

வெந்து, புரையோடிப்போன வெளி உலகப் பிரச்னைகள் பலவற்றுக்கும் சுமுகமான தீர்வுகள் எட்டப்பட்டுவருவது, அனைவரும் அறிந்ததே.

ஆயினும் தனித்துவங்களையும், சுய நிர்ணய உரிமைகளையும் பேணும் போராட்டங்கள் உலகில் இருந்து அகன்றுவிடவில்லை. எந்தவொரு இனமும் தனது சுய கௌரவம், சுய நிர்ணயம் என்பவற்றைப் பேண ஆயுதமேந்திப் போராடி வருவதையே முன்னைய யூகோஸ்லாவியாவில் நிலவும் பொஸ்னிய-சேர்பிய பிரச்னை, மற்றும் ரஷ்ய-செஸ்னிய பிரச்னை என்பன புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

எனவே இன்று இலங்கையிலும் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக இடம்பெற்று வரும் கொடிய வடக்கு-கிழக்கு, யுத்தத்துக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதென்பது, உயரக் கட்டிய கயிற்றின் மேலாக சமநிலை பேணி நடக்கும் முயற்சியையொத்ததென்பதனையே சமரச முயற்சிகளை எதிர்நோக்குவோர்கள் மனதில் கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் - ஆரோக்கியம் பெறுங்கள் - ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

# தம்பதியினர் மனம் குளிரும் செய்தி அதனால் வராது இருதய நோய்!

தாம்பத்திய உறவின் மூலமும் இருதய நோய் ஏற்படுகிறது என்ற கருத்து வயது வந்த அனேகர் மத்தியில் நிலவிவரக் காணப்படுகிறது.

இது குறித்து இங்கிலாந்தை சார்ந்த மருத்துவத்துறை ஆராய்ச்சியாளர் திரு. ஜேமிஸ் மிலர் சமீபத்தில் பொஸ்ட்டன் நகரில் பரிசோதனையொன்றை மேற்கொண்டு பல புதிய தகவல்களை வெளியிட்டுள்ளார்.



திரு ஜேமிஸ் மிலரினால் மேற்கொள்ளப் பட்டிருந்த வைத்திய பரிசோதனையில் 50 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவந்த 1663 இருதய நோயாளர்கள் பங்குகொண்டிருந்ததோடு பங்கு கொண்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண் நோயாளர்கள் என்றும் தெரிய வருகிறது.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் 1663 நோயாளர்களில் 761 நோயாளர்கள் தாம்பத்திய உறவோடு தொடர்புடையவர்களாக காணப்பட்டனர் என்றும் இந்த 761 நோயாளர்களிலும் தாம்பத்திய உறவின் மூலம் இருதய நோய்த் தாக்கத்திற்கு ஆளாகியோரின் எண்ணிக்கை 1.5 வீதம் கொண்டோர் மாத்திரமே காணப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், பொதுவாக இருதயத் தாக்கம் ஏற்படும் சந்தர்ப்பங்களைவிட தாம்பத்திய உறவின்போது இச் சந்தர்ப்பங்கள் இரு மடங்குகளாக அதிகரித்து நிகழ்வதற்கு வாய்ப்பேற்படுகின்றதாகவும் இவை தவிர கோபம் ஏற்படும் தருணங்களில் இவ் வாய்ப்புக்கள் மும் மடங்காகவும் கடின வேலைகளில் ஈடுபடும்பொழுது இவை ஆறு மடங்குகளாகவும் அதிகரித்து நிகழ்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள திரு மிலர் மனிதர்களின் ஏனைய நடவடிக்கைகளினால் ஏற்படும் இருதயத் தாக்கங்களுடன் ஒப்பிடும் பொழுது தாம்பத்திய உறவின்மூலம் ஏற்பட்டு வரும் தாக்கங்கள் குறைந்தளவிலேயே நிகழ்ந்து வருவதால் வயது வந்தோர் இது குறித்து கவலை கொள்வதைவிட கவனமெடுப்பதே பொருத்தமான செயலென குறிப்பிட்டுள்ளதோடு இருதய நோயாளர்களுக்கு தாம்பத்திய உறவு தீமையை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடப்படுமானால் அவற்றைவிடக் கூடிய தீமை அந் நோயாளர் அதிகாலை படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் செயலினால் ஏற்படுவதாக தெரிவிக்கின்றார். ஏனெனில் அநேகமாக இருதய நோயாளர்கள் காலை கட்டிலைவிட்டு இறங்கிய இரு மணித்தியால காலப் பகுதிக்குள்ளேயே இந் நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவது வழக்கமாகும்.

அனேகமான மக்கள் ஐம்பது வயதைத் தாண்டியதும் தாம் இருதய நோய்த் தாக்கத்திற்கு ஆளாக நேரிடலாம் என்ற அச்சத்தோடு வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவ்வாறு நிகழ்வதில்லை என்றும் ஐம்பது வயதைத் தாண்டிய ஆரோக்கியமான பத்து இலட்சம் மக்களில் ஒருவருக்கு மாத்திரமே இருதய நோய்த் தாக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக திரு மிலர் மேலும் தெரிவித்துள்ளார்.

**குறிப்பு:** மருத்துவத்துறை ஆராய்ச்சி வல்லுனரான திரு ஜேமிஸ் மிலர் இருதய நோய் குறித்து தொடர்ச்சியாக நீண்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருபவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## மூளைப்புற்றுநோய்க்கு மருந்து

மூளைப் புற்றுநோய்த் தாக்கத்திற்கு ஆளாகியுள்ள நோயாளியின் ஆகக்கூடிய ஆயுட் காலம் ஆறுமாதகாலம் மாத்திரம்தான் என்றே பலராலும் நம்பப்பட்டு வந்துள்ளதை நாமறிவோம்.

ஆனால்... இந்தக் கால நியதிக்கு சவாலாக அமெரிக்கா தேசிய சுகாதார நிறுவனத்தைச் சார்ந்த வைத்திய நிபுணரான திரு மைக்கல் ப்ளேஸ் இப்பொழுது ஒரு புதிய மருந்தொன்றைக் கண்டு பிடித்து அறிமுகப்படுத்தியுள்ளார். இவரின் இம் மருந்தின்மூலம் மூளைப் புற்றுநோயாளரை குறைந்த பட்சம் மேலும் இரு வருடங்களுக்கு உயிர் வாழ வைக்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுபற்றி அவர் விளக்கிக் கூறுகையில் தம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இம் மருந்து பொறியியல் விஞ்ஞானத்தை கொண்டு எலியின் உடலில் இருந்து மீட்கப்பட்ட வைரசுடன், ஹர்பீஸ் சிம்ப்ளெக்ஸ் எனப்படும் வைரஸ்கவிலிருந்தும் பெறப்பட்டிருந்த கருவணுக்களை இணைத்து இப்புதிய ஔஷதம் கண்டுபிடிக்கப் பட்டதாகவும் இவற்றை மூளைப் புற்று நோயாளருக்கு ஊசி வழியாக ஏற்றுவதன் மூலம் நோயுற்றுள்ள உயிர்மங்கள் மாத்திரம் அப்போது அழிக்கப்பட்டுவிடுவதாகவும் தெரிவித்தார்.

எனவே இச் சிகிச்சைமூலம் நோயாளர்களின் ஆயுளை மேலும் சில காலத்திற்கு நீடிக்கச் செய்வதற்கு உதவ முடியும் என்று திரு மைக்கல் ப்ளேஸ் தெரிவித்துள்ளார்.

## எலுமிச்சையில் என்ன இருக்கு?

- எலுமிச்சம் சாற்றுள் அதிக பட்சமான விட்டமின் 'சி' அடங்கப்பெற்றுள்ளது.
- உப்புக் கலந்த நீரில் சில துளிகள் எலுமிச்சம் சாற்றை கலந்து அருந்துவதன் மூலம் வயிற்றுக் கோளாறை தணித்துக் கொள்ள முடியும்.
- குளிர் பானங்களுடன் எலுமிச்சம் சாற்றை சேர்த்துக்கொள்வதன் மூலம் அப் பானத்தை மேலும் சுவையாக்கிக்கொள்வதோடு 'சீ' பதார்த்தமும் கிடைக்கப் பெறுகிறது.
- தேனீரில் சில துளிகள் எலுமிச்சம் சாற்றைக் கலந்துகொள்வதன் மூலம் அவற்றின் பக்க விளைவுகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.
- எலுமிச்சம் சாறு கலந்த நீரை அருந்தக் கொடுப்பதன் மூலமும் பழத்தை அடிப் பாதத்தில் தேய்ப்பதன் மூலமும் மது போதையைத் தணிக்க முடியும்.
- எலுமிச்சம் சாறு இரும்புக் கறை, மைக்கறை போன்றவற்றை போக்கிக் கொள்ள உதவுகின்றது.
- கூகைக் கட்டு போன்றவற்றை செந்சந்தனத்துடன் எலுமிச்சம் சாற்றைக் கலந்து பூசுவதன் நிமித்தம் தணித்துக் கொள்ள முடியும்.
- எலுமிச்சம் பழத்தை தலைக்கு தேய்த்து குளிப்பதன்மூலம் சொடுகு, சிரங்கு போன்றவற்றை தவிர்த்துக்கொள்ள முடியும்.
- எலுமிச்சம் சாற்றை வெந்நீரில் கலந்து விடுவதன்மூலம் அவற்றில் அடங்கப் பெறும் விட்டமின் 'சி' பதார்த்தம் அழிக்கப்பட்டுவிடுகின்றது.

## அழகியின் அனுபவங்கள்



இந்திய முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் ஒரு புத்தகம் எழுதினார். இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி பற்றி அவர் எழுதிய விஷயம் சர்ச்சைக்குள்ளானது.

இந்திய தேர்தல் அதிகாரி டி.என். சேஷன் ஒரு புத்தகம் எழுதினார். தமிழக முன்னாள் முதல்வர் அமரர் அண்ணா அமெரிக்க சி.ஐ.ஏ.உளவாளி என்று சேஷன் சொல்ல அது பெரிய புயலைக் கிளப்பியது.

இப்போது உலக அழகியான இந்தியாவைச் சேர்ந்த சுஸ்மிதா சென் ஒரு புத்தகம் எழுதப்போகிறார்.


புத்தகத்திற்கு அவர் வைக்க நினைத்துள்ள தலைப்புத்தான் உறுத்தலானது. தலைப்பு இதுதான்;

அழகியின் அனுபவங்கள்.

# கிரைம் டயறி

உலகில் நடந்த மிக முக்கிய கொலைகள்-மற்றும் குற்றச் செயல்கள் வாரா வாரம் சுவையோடு தொகுத்துத் தரப்படுகிறது.

# 1994 ஜனவரி 4 கடைசியாய் ஒரு கொலை



பொஸ்டன் நகரப் பொலிசாருக்கு ஒரே தலைவலி.

18 மாதகால இடைவெளியில் 12 கொலைகள்!

பிரேத பரிசோதனை அறிக்கைகள் யாவும் ஒரு பொதுவான தகவலைத் தெரிவித்தன.

12 பேரும் காமப் பசிக்கு இரையாக்கப்பட்டுத்தான் கொல்லப் பட்டுள்ளார்கள்.

எல்லோருமே இளம் பெண்கள். தமது வீடுகளில் வைத்தே அனைவரும் கொல்லப்பட்டிருந்தார்கள்.

பொஸ்டன் நகர அழகிகள் பூகம்பத்தால் நடுங்கும் பூமிமாதிரி நடுங்கத் தொடங்கிவிட்டார்கள்.

பொலிஸ்மீது மக்களுக்கு மகா மகா கோபம். திட்டித் தீர்த்தார்கள்.

1964 ஜனவரி 4. பொஸ்டன் நகர பொலிஸ் நிலைய தொலைபேசி அலறியது.

"தொடர்மாடி வீட்டில் 19 வயது இளம்பெண் தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கிறாள்"

"செத்துவிட்டாளா?"

"இது என்ன கேள்வி? உயிர் இருந்தால் உங்களை ஏன் அழைக்கிறோம். பிளீஸ் உடனே வாருங்கள்!"

பொலிஸ் விரைந்தது. வேடிக்கை பார்க்க கூட்டம் வந்திருந்தது.

"போங்கள் அப்பால்!" விலத்திக் கொண்டு பொலிஸ் உள்ளே நுழைந்தது.

பொட்டுத் துணிகூட இல்லாமல் தூக்கில் பிறந்த மேனியோடு அவள் இறந்து போயிருந்தாள்!

தரையில் ஒரு மடல் கிடந்தது. பொலிஸ் எடுத்துப் பார்த்தது.

அது புதுவருட வாழ்த்து மடல்!

வழக்கம்போல பிரேத பரிசோதனை- கட்டழகியின் உடல் அறுத்துப் பார்க்கப் பட்டது.

"கற்பழிக்கப்பட்டிருக்கிறாள்!" பரிசோதனை முடிவில் டாக்டர்கள் அடித்துச் சொன்னார்கள்.

இது 13வது கொலை!

பொலிஸ் முகம் சிவந்தது. 'செக்ஸ்' குற்றவாளிகளின் பட்டியலை தூசு வியது. சிலரைப் பிடித்து இரண்டு தட்டு தட்டி விசாரித்தும் பார்த்தது.

பயன்- பூச்சியம்!

### விரட்டிய பெண்

பொலிசுக்கு ஒரு தகவல் வந்தது. 1963 பெப்ரவரியில் தனது வீட்டில் தனியாக இருந்தாள் ஒரு பெண்.

டொக்...டொக்...

கதவு இருமுறை தட்டப்பட்டது. அவள் சென்று, கதவு திறந்தாள்.

"யார் நீங்கள்?"

கேட்டாள். அவன் விகாரமாய் சிரித்துக்கொண்டு அபாரமான அவள் அழகை வெறித்துப்பார்த்தான்.

"யார் வேண்டும் உங்களுக்கு?"

இரண்டாவது கேள்விக்கு அவன் பதில் சொன்னான்.

"நீ...நீயேதான்!"

சொல்லிக்கொண்டே அவளை உள்ளே தள்ளிக்கொண்டுவந்து கதவை தாழிட முயன்றான்.

அவள் திடுக்கிட்டாள். அவனை வெளியே தள்ளப் போராடினாள்.

அவன் வெறி கொண்டவன்போல அவளை அணைத்தபடி தரையில் சாய்த்தான். அவள் விடவில்லை. தன் இதழ்களை அண்மித்த அவன் உதடுகளை பலம்கொண்டமட்டும் இறுக்கிக் கடித்தாள்.

அவன் வலியால் துடித்து விலகினான். அவள் கூச்சலிட்டாள்.

'இனியும் இங்கிருந்தால் ஆபத்து' அவன் தப்பி ஓடிவிட்டான்.

தகவல் அதுதான். பொலிசுக்கு அமோக உற்சாகம். அந்தப் பெண் எங்கே இருக்கிறாள்?

விசாரித்து விலாசமறிந்து வீட்டுக்குப் போனார்கள்.

பேரதிர்ச்சி காத்திருந்தது! அந்தப் பெண் அந்தச் சம்பவத்தின் பாதிப்பால் ஏற்பட்ட யோசனையால் தற்போது சித்தப் பிரமையடைந்துவிட்டாள். பெற்றோர் சோகமாய் தெரிவித்தனர்.

### மீண்டும் பாய்ச்சல்

பொலிஸ் ஏமாற்றத்தோடு திரும்பியது. 1964 அக்டோபர் 27ம் திகதி மாசாசுசெற்ஸ் மாநிலத்தில் உள்ள கேம்பிரிட்ஜ்ஜில் ஒரு இளம்பெண் கற்பழிக்கப்பட்டாள்!

வீட்டுக்குள் திருத்த வேலை செய்வதற்காக ஒருவன் வந்தான்.

கணவன் வெளியே சென்றுவிட்டதால் மனைவி மட்டுமே வீட்டிலிருந்தாள். அவள் இளம் பெண்.

வந்தவன் திருத்தவேலை செய்யாமல் தன்னையே கவனிப்பதைப் பார்த்து,

"வேலையைக் கவனி"

என்றாள் அவள்.

"முதலில் உன்னைக் கவனிக்கிறேன்" என்றான் வந்தவன். அவள் உஷாராவதற்கிடையில் அவளை அலாக்காகத் தூக்கினான்.

கட்டிலில் கொண்டுபோய் போட்டான். அவள் திமிறினாள். கட்டிலோடு சேர்த்து கயிற்றால் அவளை கட்டிப் போட்டான். தனது வெறியைத் தணித்துக்கொண்டான்.

பசி தீர்ந்ததும் பறந்துவிட்டான். கொலை செய்யவில்லை!

பொலிஸ் கைரேகைகளை வைத்து அலசல் நடத்தியது.

கற்பழிக்கப்பட்ட பெண் குற்றவாளியின் அங்க அடையாளங்களை விபரித்தாள்.

பாலியல் குற்றவாளியான அல்பேட் என்பவன்தான் குற்றவாளி என்று பொலிஸ் வெற்றிகரமாக கண்டறிந்தது. அவனது புகைப்படம் ஏற்கனவே பொலிசில் இருந்தது.

புகைப்படத்தை அந்தப் பெண்ணிடம் காட்டினார்கள்.

"சந்தேகமேயில்லை இவன்தான்!" என்றாள் அவள்.

பொலிஸ் வலை விரித்தது. கழுகு சிக்கியது. கற்பழித்த குற்றத்தை ஒப்புக்கொண்டான். ஆனால் முன்னர் நடந்த 13 கொலைகளுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று சொன்னான் அல்பேட்.

பொலிஸ் உரமாய் நாலு தட்டுப் போட்டுக் கேட்க அல்பேட் பட்டு பட்டென்று உண்மையைச் சொன்னான்.

"13 கொலைகளும் நானே செய்தேன். கடைசிக்கொலைதான் ஜனவரி 4ல்- மேரி சுலைவான் என்ற 19 வயது அழகியின் கொலை!"

குற்றவாளியை மடக்கியதில் பொலிசுக்கு திருப்தி. ஆனால் பாதியளவான திருப்திதான்.

'அல்பேட்' செய்த கொலைகளை நிரூபிக்க சாட்சியம் இல்லையே! என்ன செய்வது?

பொலிஸ் 'அல்பேட்'டிடம் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வந்தது.

"கொலைக் குற்றங்களை நாம் சுமத்தமாட்டோம். ஆனால் கற்பழிப்பு குற்றத்தை நீ ஏற்க வேண்டும்!"

'அல்பேட்' சம்மதித்தான். குறைந்த தண்டனையோடு தப்பிக் கொள்ளலாம் அல்லவா?

நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது. நன்நடத்தை மூலமான தண்டனைக் குறைப்பில் விரைவில் வெளியே வரும் கனவோடு சிறைக்குப் போனான் அல்பேட்.

1973 ஜுன் 30. அல்பேட்டின் கனவு சிதைந்தது.

சக கைதி ஒருவன் செருகிய கத்தி 'அல்பேட்' உயிரை ருசித்து சுவைத்தது.


சட்டத்திற்கு சாட்சி தேவை. நியாயத்திற்கு..........?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி

## புதுமையான மீன்!

சூழ்நிலைதானே சிந்தனையைத் தீர்மானிக்கிறது. பனிபடர்ந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப வேடிக்கைகளிலும் பொழுது போக்குகளிலும் ஈடுபடுகிறார்கள். படத்தில் இருப்பது உண்மையான மீன் அல்ல. பனிக்கட்டிகளால் உருவாக்கப்பட்ட மீன். கனடா ஒட்டோவா மாநிலத்தில் இதனை உருவாக்கியவர் மார்க் கவிட்டன்காம் (வயது 20)






## உயர்ந்த மனிதன்

எந்த மலையில் இவர் ஏறுகிறார்? என்று யோசிக்கிறீர்களா? இவர் ஏறுவது மலையில் அல்ல; மனிதனில்! உயிருள்ள மனிதனல்ல; பனி மனிதன்! பனிப் பிரதேசங்களில் பனிக்கட்டிகளால் பனி மனிதனை உருவாக்குவதில் பலத்த போட்டியே நிலவுகிறது. 76 அடி 2 அங்குல உயரமான பனிமனிதனை உருவாக்கியதுதான் உலக சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை சுவிட்ஸர்லாந்தில் உள்ள ஆறு நண்பர்கள் உடைத்தெறிந்துவிட்டார்கள். படத்தில் உள்ள பனிமனிதனின் உயரம் 88.5 அடி. இது கோடைகாலம் வரை உருகாமல் இருக்கும். சுவிஸ் அல்ப்ஸ் மலைத் தொடரில் உள்ள பனிச்சறுக்கு திடலில் இந்த மனிதன் உருவாக்கப்பட்டுள்ளது. கடல்மட்டத்தில் இருந்து இதன் உயரம் 10 ஆயிரம் அடிகள்!

## எந்தப் பனையிலும் இல்லாத ஒன்று



இந்திய அரசுக்கு மிகப்பெரிய கவலை- சனத்தொகைப் பெருக்கம். அதனால் பிரபலமான கோஷம் 'நாமிருவர் நமக்கிருவர்'. சுவர்கள் முதல் பஸ் வண்டிகள் வரை அந்தக் கோஷத்தை எழுதினாலும் யாரும் அநேகமாக கண்டு கொள்வதில்லை. இந்தப் பனை மரத்தைப் பார்த்தால் குடும்பக்கட்டுப்பாட்டு பிரசாரகர்களுக்கு சந்தோசமாக இருக்கக்கூடும். ஒரு பனை மரம் நான்கு கிளைகளாகப் பிரிந்து வளர்ந்திருப்பது அதிசயம். 'நாமிருவர் நமக்கிருவர்' விளம்பரத்திற்கும் உபயோகிக்கலாம். ■



## விலை உயர்ந்த நன்றி!

ஜப்பான் தலைநகரமான ரோக்கியோவிலுள்ள ஒரு வர்த்தக நிறுவனம், காலஞ்சென்ற அதன் ஸ்தாபகரை நினைவு கூரும் வகையில், நிறுவனத்துக்குரிய கட்டிடத்தின் மேலே 40 அடி உயரமான அன்னாருடைய மார்பளவு சிலையினை நிறுவியுள்ளது. இதனை உருவாக்குவதற்கு 156,000 டொலர் செலவிடப்பட்டுள்ளது. இதுதான் விலையுயர்ந்த நன்றி!

## வசதியாய் நனையலாம்

திறந்துவிட்டால் கொட்டோ கொட்டென்று தண்ணீரைக் கொட்டும் இந்த ராட்சத பைப்பில் குளிப்பது ஜாலிதான்!

ஜெர்மனியில் மியூனிச் நகரில் உள்ள பூங்காவில் வருடாந்த விழா ஒன்று நடைபெற்றது. விருந்தினர்களை குளிர்விக்க இந்த ராட்சத பைப்பை அமைத்திருந்தார்கள்.




## குள்ளக் குதிரை



உலகத்திலேயே மிகவும் குள்ளமான இனத்தைச் சேர்ந்த இந்தக் குதிரையின் பெயர் 'பிட்யூ'. 'பிட்யூ' சமீபத்தில் லண்டனின் மிகப்பெரிய குதிரை கொட்டடி ஒன்றிலிருந்து திருடப்பட்டது. 2 அடி 3 அங்குல உயரமே உள்ள 'பிட்யூ'வை கண்டுபிடிக்க பொலிஸ்காரர் கடும் முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. இறுதியில் மூன்று மாதங்களுக்குப் பிறகு 'பிட்யூ' கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பின் அவருக்கு பலத்த பாதுகாப்புத்தான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சென்ற ஆண்டுக்கு சிறப்பு

## சிவாஜிக்கு கிடைத்த செவாலியர்





### வந்துவிட்டது மற்றொரு வாரிசு!

பாக்யராஜ் கதை-திரைக்கதை வசனம் எழுதி இயக்கும் படம் வேட்டியை மடிச்சுக் கட்டு. இந்தப்படத்தில் பாக்யராஜின் மகனும் நடிக்கிறார். டி. ராஜேந்தர் தனது மகன் சிம்புவை அறிமுகம் செய்தது போல பாக்யராஜ் தனது மகனை அறிமுகம் செய்திருக்கிறார். புதிய படம் ஒன்றிலும் பாக்யராஜ் கதை-வசனமெழுதி நடிக்கப் போகிறார். ... இல்லை.

94



### பொங்கலன்று கருப்பு நிலா

விஜயகாந்த்-குஷ்பு ஜோடி சேர்ந்து நடித்துவரும் 'கருப்பு நிலா' படப்பிடிப்புக்கள் வேகமாக நடந்து வருகின்றன. பொங்கல் திருநாளுக்கு திரைக்கு வருகிறது 'கருப்பு நிலா'.

### ஸ்ரீதேவியின் சவால்

"நான் நீச்சல் உடை அணிந்தாலும் அதிலும் ஒரு லெவல் இருக்கும். லிமிட் இருக்கும் ஜுக் இருக்கும். உடையைக் குறைத்தால் முன்னேறி விடலாம் என்று தப்புக்கணக்கு போடுகின்றனர் இப்போதைய நடிகைகள். அதுமட்டும் உண்மையாக இருந்தால் நம்பர் ஒன் இடத்தை ஏராளமான நடிகைகள் தொட்டு விட்டிருப்பார்கள். முன்னணி நடிகையாக எவ்வளவோ தகுதிகள் வேண்டும். செய்யும் தொழிலில் ஆர்வம், நேர்மை வேண்டும். அதுடன் அதை அழகாக வெளிப்படுத்தும் திறமையும் வேண்டும். செக்ஸியாக நடிப்பது அவ்வளவு எளிதல்ல. கண்களிலும் செக்ஸைக் கொடுக்க வேண்டும். கால் விரல்களிலும் அதை உணர்த்தத் தெரியவேண்டும். அப்போதுதான் 'சரக்குள்ள நடிகையாக முடியும்." என்கிறார் ஸ்ரீதேவி.

### புதைகுழியில் அழகி

செல்வச் செழிப்பில் புரளும் அழகி அவள் தோழிகளுடன் உல்லாசப் பயணம் சென்றாள். காரிலிருந்து இறங்கி ஏரியில் உள்ள தாமரைப்பூவை பறிக்க ஆசைப்பட்டாள். பூவைப் பறிக்கச் சென்றவள் புதைகுழியில் சிக்கிக் கொண்டாள்.

அவள் கொடுத்த அபயக்குரல் கேட்டு ஓடிவந்தான் விஜய். காப்பாற்றி கரை சேர்த்தான். கரைசேர்த்ததும் அவன் விஜய்மீது சரிந்தாள். பிறகென்ன, கனிந்தது காதல்.

இக்காட்சி படமான திரைப்படம் 'கர்ணா'. அழகியாக நடித்தது வினிதா. அந்த இளைஞன் அர்ஜுன். இருவேடங்கள் அர்ஜுனுக்கு.

### விரைவில் வருகிறது

### கிசு-கிசு நியூஸ் 'பம்பாய்' இருக்கா?

சில நடிகர்களிடம் படத்திற்கு ஒப்பந்தம் செய்யச் சென்றால் 'பம்பாய் நடிகை இருந்தால் நடிக்கிறேன்' என்று பதில் வருகிறதாம். அதனால் கோடம்பாக்க தமிழ்த் தயாரிப்பாளர்கள் 'பம்பாய்' படையெடுப்பு நடத்துகிறார்கள். ஆர்.வி. உதயகுமார் கூட 'நந்தவன தேரு' படத்தில் பம்பாய் நடிகையை கொண்டு வந்துபோட்டிருக்கிறார். அது சரி, பம்பாய் நடிகைகள் என்றால் நடிகர்கள் ஏன் பிரியப்படுகிறார்கள்?



### தழுவியதால் வழக்கு!

'ஜென்டில்மேன்' தமிழ் படத்திற்கு இசையமைத்தவர் ஏ.ஆர்.ரகுமான். அதே படம் இந்தியில் தயாரானபோது வேறு ஒருவர் இசையமைத்தார். அந்த இசை தமிழ் 'ஜென்டில்மேன்' இசைபோலவே உள்ளதால் ரகுமான் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

### ரஜனியின் அடுத்த படம் எது?

'பாட்சா' படத்தையடுத்து ரஜினிகாந்த் நடிக்கவுள்ள படத்தைத் தயாரிக்க பிரபல பட நிறுவனங்கள் கிழுவில் நிற்கின்றன. ஆனால் ரஜினி இதுவரை யாருக்கும் பச்சைக்கொடி காட்டவில்லை. பச்சைக்கொடி காட்டும் தயாரிப்பாளரின் காட்டில் ரஜினி பச்சைக்கொடி ... மழைதான். அடுத்த படத்தை எஸ்.பி.முத்துராமன் இயக்க ... என்றும் ஒரு செய்தி அடிபடுகிறது. ரஜினி என்ன நினைத்திருக்கிறாரோ?

### 'கல்யாணி என் காதலி'

ஆனந்தபாபு கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'கல்யாணி என் காதலி'. சகலகலா வல்லவன் என்று அழைக்கப்படும் டி. ராஜேந்தர் இசையமைப்பை மட்டுமே பொறுப்பேற்றுச் செய்யும் படம் இது. கதை-திரைக்கதை வசனம் எழுதி படத்தை இயக்குபவர் ராஜ்குமார்.



ரவீனா டாண்டன்



பாண்டியராஜன்-சிவரஞ்சனி
படம்-மின்னையார் கதி

### என்னோடு மோதாதே

'காதலன்' படத்தில் கவர்ச்சியை கொட்டித் தீர்த்த நக்மா அடுத்து தமிழ் இரசிகர்களை கலக்கப் போவது 'பாட்சா' படத்தில். 'வில்லாதிவில்லன்' படத்திலும் சத்யராஜின் ஜோடியாக நடித்துவருகிறார். தணிக்கைக்குழு கை வைக்காத வகையில் ஆடைக் குறைப்பு நிச்சயம் இருக்கும். தெலுங்கில் விஜயசாந்திக்கு சவால்விடும் நக்மா தமிழில் கஸ்தூரி-மீனா போன்ற நடிகைகளை ஓரங்கட்டிவிடுவார்போல் தெரிகிறது. ஆனால் நக்மா கேட்கும் சம்பளம் தெத்திவடியாக இருப்பதால் அதிகபடங்கள் அவரைத் தேடி வருவதில்லையாம்.

### நடிகை வீட்டில் சொத்துச் சண்டை

பானுப்பிரியா வீட்டில் பாகப்பிரிவினை விவகாரத்தால் ஒரே களமுசா. பானுப்பிரியாவின் தங்கையான நடிகை நிஷாந்தி இந்தி சினிமா உலகைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து பம்பாயில் குடித்தனம் நடத்துகிறார். அவர் தமிழில் நடித்த படங்களின் ஊதியம் அம்மாவிடம் இருக்கிறதாம். அதை நிஷாந்தி கேட்டிருக்கிறார். அம்மா மறுத்துவிட்டார். வழக்குப் போடப் போவதாக எச்சரித்துவிட்டு பம்பாய்க்குப் பறந்திருக்கிறார் நிஷாந்தி. நீதிமன்றப் படிக்கட்டில் ஏறுவதை நினைத்தால் தாய்க்குலம் புலம்பி அழுகிறதாம்.

'தாய் மாமன்', 'நாட்டாமை' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மீனா தனது ஊதியத்தை 10 லட்சமாக உயர்த்தி விட்டார்.

### குட்டிச் செய்திகள்-6

'தாமரை' படத்தை இயக்கிய கே.கே.ராஜசிற்பி தற்போது இயக்கிவரும் படம் 'டேக் இட் ஈஸி ஊர்வசி'. இதற்கு முதலில் வைத்த பெயர் 'மோனாலிசா'.

'வியட்னாம் வீடு' படத்தில் நடிகர் திலகம் ஏற்று நடித்த பிரஸ்டீஜ் பத்மநாபன் போன்றதொரு கெட்-அப்பில் 'மிஸ்டர் ...' படத்தில் விஜயகுமார் நடித்துவருகிறார்.

www.padippakam.com

# 1995

## போலீச் சாமியார் கதை படமாகிறது

பரபரப்பான சம்பவங்களை வைத்து சூட்டோடு சூடாக படமாக்கினால் வசூல் குவியும். திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு சொல்லியா தெரியவேண்டும். போலீச்சாமி பிரேமானந்தா விவகாரம் சூடாகப் பேசப்பட்டுவருகிறது. அதனால் போலீச்சாமியாரின் திருவிளையாடல்களை திரைப்படமாக எடுக்கப் போகிறார்கள். 'ஆசிரமம்' என்ற பெயரில் படம் தயாராகப்போகிறது. நிர்வாணமாக ஒரு பெண் குளிக்கும் காட்சியையும் படமாக்கப் போகிறார்களாம். அதற்காக பம்பாயிலிருந்து ஒரு நடிகையை இறக்குமதி செய்துள்ளார்கள். தணிக்கை குழுவிடம் முன்கூட்டியே காட்சிகள் பற்றி விளக்கி அனுமதி பெறப் போகிறார்கள். புத்திசாலித்தனமான வேலை.

## டிஸ்கோவின் வியாபாரம்

நடிகை டிஸ்கோ சாந்தி புதிய தொழில் ஒன்றை ஆரம்பிக்கப் போகிறார். 'சென்சார்' பிரச்சனையால் துள்ளல் நடனத்திற்கு வாய்ப்புக்கள் குறைவு. கிடைக்கும் வாய்ப்புக்களையும் கதாநாயகிகள் தாமே துள்ளிப் பறித்துவிடுகிறார்கள். அதனால் வருமானத்திற்கு வழிதேட தோட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளார் டிஸ்கோ சாந்தி.



முகப்பில்

மீனா

பாண்டியராஜன்





## இறுதிக்கட்டத்தில் 'மக்கள் ஆட்சி'

மலையாள நடிகர் மம்மூட்டியோடு ரோஜா-ரஞ்சிதா நடித்துவரும் பிரமாண்டமான படம் 'மக்கள் ஆட்சி'. படப்பிடிப்புக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டன. ஆர்.கே.செல்வமணி இயக்கியுள்ள படம் என்பதால் எதிர்பார்ப்பு அதிகம் உண்டு. இசை-இளையராஜா. வசனம்-லியாகத் அலிகான். அரசியல் சாடல்கள் நிறைய இருக்கும்.

## ஜோடி புதுசு

'நல்ல மனசுக்காரன்' படத்தில் பாண்டியராஜனின் ஜோடியாக புது நடிகை ஒப்பந்தமாகியுள்ளார். பெயர்-ஜெயராசினி. அவரோடு சில்க்சுமிதா, வடிவேலு, சின்னி ஜெயந்த் ஆகியோரும் உண்டு. இசை-தேவா. பாடல்கள்-வாலிதாசன்.



...ாடு நடிப்பது ஏன்?

சரத்குமார் படம்-கூலி

## ஐந்தாண்டுத் திட்டம் கதையாகிறது

திரைப்பட வசனகர்த்தாவாக, இயக்குநராக வரவேண்டும் என்று ஆரம்பத்தில் ஆசைப்பட்டவர் சத்யராஜ். ஆனால் வில்லனாக நடித்து புகழ்பெற்று ஹீரோவாகிவிட்டார். சத்யராஜ் கதை எழுதி வில்லனாக நடிக்க, மணிவண்ணன் இயக்கிய தெலுங்குப் படம் 'கொடியவன்' என்ற பெயரில் நன்றாக ஓடியது.

என்றாலும், தமிழில் சத்யராஜ் திரைக்கதை வசனம் எழுதுவதும் இயக்குவதும் இதுதான் முதல்முறை. கடந்த ஐந்து வருடமாக சிறு சிறு குறிப்புக்களாக எழுதிவைத்த சம்பவங்களை தொகுத்து அசத்தலாக கதை எழுதியிருக்கிறாராம். இரசிகர்கள் அசரப் போகிறார்களா என்பது 'வில்லாதி வில்லன்' திரைக்கு வரும்போதுதான் தெரியும். 'வில்லாதி வில்லன்' படத்தில் இயக்குநர் மணிவண்ணன் அமைச்சராக நடிக்கிறார்.



லாவண்யா-ரகுமான் படம்-பாட்டுப் பாடவா

## தயாராகிறது கூலி

சின்னத்தம்பி, வால்டர் வெற்றிவேல், போன்ற வெற்றிப்படங்களை உருவாக்கிய பி.வாசு கதை-வசனம் எழுதி இயக்கும் படம் 'கூலி'. ...ில் அமிதாப்பச்சன் நடித்த படம் ஒன்றின் பெயரும் 'கூலி'. அதற்கும் இதற்கும் ஒரு தொடர்புமில்லை என்கிறார் பி.வாசு.

...ார் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகி மீனா. மற்றும் ராதாரவி, செந்தில், கவுண்டமணி, மனோரமா ஆகியோரும் நடிக்கிறார்கள். ...ஜயகுமாரின் மகள் கவிதா இந்தப் படத்தின் மூலம் அறிமுகமாகிறார். புதிய இசையமைப்பாளர் சுரேஷ் பீட்டர் இசையமைக்க, வைரமுத்து பாடல்களை ...ர். 10 நாட்கள் படப்பிடிப்பு நடத்துள்ளது.

...த்தாண்டு (ஏப்ரல் 14) வெளியிடாக திரைக்கு ...து கூலி.

...ாக இயக்கத்தில் பொங்கலுக்கு வரும் படம் ...ிரபு நடிக்கும் 'கட்டுமரக்காரன்'.

## மினிசினி

- ஜி.டி. ரமேஷ்-ராதிகா இணைந்து நடிக்கும் 'உதவும் கரங்கள்' படத்தில் சிந்தூரி என்னும் பம்பாய்ப் புதுமுகம் அறிமுகமாகிறார். இந்தப்படத்தை 'ஒருவர் வாழும் ஆலயம்' படத்தை இயக்கிய ஷண்முகப்பிரியன் இயக்குகிறார்.
- பாண்டியராஜன்-பிரகதி நடிக்கும் 'சும்மா இருங்க மச்சான்' படம் மலையாளத்தில் மோகன்லால் நடித்த 'நின் இஷ்டம் என் இஷ்டம்' படத்தின் தமிழ் வடிவமாகும்.
- பாரதிராஜாவின் 'கருத்தம்மா' படத்தில் அறிமுகமானவர் ஸ்ரீதேவியின் சித்தி மகள் மகேஸ்வரி. இவர் இப்போது தெலுங்கில் சமனுக்கு ஜோடியாக 'அம்மாய் காப்புரம்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.
- 'நூறாவது நாள்', 'ஜல்லிக்கட்டு', 'அமைதிப் படை' ஆகிய படங்களில் சத்யராஜை மொட்டையடிக்க வைத்த இயக்குநர் மணிவண்ணன், தற்போது எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கத்தில் உருவாகும் 'தேவா' படத்திற்காக முதன்முறையாக மொட்டை அடித்துள்ளார்.
- மலையாளத்தில் ஊர்வசி முதன் முறையாகத் தயாரித்த 'பொட்ட கோழி கூவிய நூற்றாண்டு' வெற்றிகரமாக ஓடுவதைத் தொடர்ந்து, இரண்டாவது படத்தைத் தயாரிக்கவுள்ளார். இதுவும் மலையாளத்தில்தான் தயாரிக்கப்படுகிறது.
- வி.சேகர் இயக்கிய 'வரவு எட்டணா செலவு பத்தணா' படத்தை இந்தியில் தயாரிக்கவுள்ளனர். தமிழில் நாசர் நடித்த வேடத்தில் இந்தியில் 'நிழல்கள்' ரவி நடிக்கிறார்.
- குஷ்பு கதாநாயகியாக நடிக்கும் 'முத்தும் குளிக்க வாரீகளா' படத்திற்குக் கதை-வசனம் எழுதும் ஏ.சந்திரகுமார், சரவணன்-அகானா நடித்த 'செவத்தப்பொண்ணு' படத்தினை இயக்கினவர்.
- குழந்தை நட்சத்திரமாக பல படங்களில் நடித்துவிட்டு ராதாரவியின் 'இளைஞர் அணி' மூலம் கதாநாயகியாக அறிமுகமான சோனியா, தற்போது 'வீரபாண்டிக் கோட்டையிலே', 'உன்னோள் நான்' ஆகிய படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.
- பிரபுதேவா-ரோஜா நடிக்கும் 'ராசய்யா' வரும்பொங்கலன்று வெளியாகவுள்ளது. இப்படத்தில் ப்ரீதி என்பவர் புதிய பாடகியாக அறிமுகமாகிறார்.
- 'புதுசா பூத்த ரோசா' படத்தில் வில்லனாக நடித்த ராஜாவின் சொந்தப் பெயர் புருஷோத்தமன். இவர் தற்போது பெயரிடப்படாத இரு புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
- 'தாலாட்டுக் கேட்குதம்மா' படத்தை இயக்கிய ராசுமதுரவன், கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் புதிய படம் ஒன்றை இயக்க இருக்கிறார்.



நக்மா

மாதுரி டிக்ஷித்-சல்மான்கான் படம்- ஹம் ஆப்கே ஹேன் கோன்



அர்ஜுன்-ரஞ்சிதா படம்-கர்ணா

...கமலஹாசன் இந்தியில் இயக்குவதாக இருந்த '...மகாநதி' படத்தை இன்னமும் ஆரம்பிக்கவில்லை. இவர் இந்த ஆண்டில் இரு புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

சுபாஷ் கைய் இயக்கும் 'ஷிகார்' என்ற இந்திப்படத்தின் பாடல் உரிமை இரண்டு கோடி ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார்.

...சுகன்யா நடித்து வெளிவர இருக்கும் ஒரே ஒரு படம் 'மகா பிரபு'. இதற்குப் பின்னர் எந்தவொரு படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகவில்லை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அழகின் பெருமை சருமத்தின் அழகு

## சரும அழகு சிறப்பாக சில யோசனைகள்

நம் சருமத்தை வெளிப்புறத்திலிருந்தும், உடலின் உள் புறத்திலிருந்தும் பல்வேறு விஷயங்கள் தாக்குகின்றன.

சீதோஷ்ண நிலையில் மிக அதிகமான குளிரோ, வெய்யிலோ இருந்தால், நமது சருமம் அதற்குத் தக்கபடி உடலின் Temperature ஐ சரிப்படுத்துகிறது. அதேபோல், மனக்கவலை, படபடப்பு, பயம் இது போன்ற உணர்வுகள் ஏற்படும்போதும் சருமம் பல்வேறு பாதிப்பிற்குள்ளாகிறது. வெட்கம், கோபத்தில் முகம் சிவக்கிறது... பயத்தில் முகம் வெளிறிப்போகிறது என்கிறோமே அது இதனால் தான். முதலில் சருமம் நல்ல 'பளிச்' தன்மையுடன் இருக்க உடல் நலம் அவசியம். உடலில் சேரும் வேண்டாத கழிவுகளை உடனுக்குடன் நாம் நீக்கிவிட வேண்டும். உணவில் அதிகமாக பச்சைக் காய்கறிகள், பழரசம், கீரைகள் சேர்ப்பதன் மூலம் சருமத்தை சுத்தம் செய்யலாம். நிறைய நீர் பருக வேண்டும். நிறைய காரம் புளி, எண்ணெய் உபயோகித்து செய்யப்பட்ட உணவுகளை நீக்க வேண்டும். இதைக் கடைபிடித்து வந்தால் நிச்சயம் சருமம் நன்றாக இருக்கும். முள்ளங்கிச் சாறும்,



காரட் சாறும் சருமம் பளபளக்க இயற்கை தரும் நல்ல மருந்து. எலுமிச்சை, சமைக்காத தேங்காய், வெள்ளரி, வெங்காயம், தக்காளி இவற்றை அதிகமாக உணவில் சேர்த்துக் கொண்டாலும் சருமம் நன்றாக இருக்கும்.

செம்பருத்திப் பூவை நன்றாகக் கழுவி மிக்ஸியில் அடித்து ஜூஸ் எடுத்து சாப்பிட்டால் சருமத்திற்கு மிகவும் நல்லது. ஒரு அரை டம்ளர் கஷ்டப்பட்டேனும் விழுங்கிவிட்டால் நல்லது. வாரத்திற்கு மூன்று நான்கு முறை இதை முயற்சிக்கலாம்.

இந்த எல்லாச் சாறுகளையும் வேறுவகை உணவுகளைச் சாப்பிடுவதற்கு இரண்டு மணிநேரம் முன்பே சாப்பிடுவது நல்லது. உடலில் நன்கு கலந்து வேலைசெய்யும். சருமத்திற்கு வீட்டிலேயே நல்லபொடிகள் செய்து வைத்துக்கொள்ளலாம்.

கடலைமாவு, பச்சைப்பயறு, சந்தனம், சிறிது கஸ்தூரி மஞ்சள் கலந்து அரைத்து வைத்துக்கொண்டு உபயோகிக்கலாம்.

தினமும் ஒரு அரைமணி நேரம் வேர்க்கும்படி எளிமையான உடற்பயிற்சிகள் செய்வது மிகவும் நல்லது. யோகா, ஆழ்நிலை தியானம் உடலில் சீரான இரத்த ஓட்டத்தைப் பெருக்கி சருமத்திற்கு நன்மை செய்கிறது.

காலை எழுந்ததும், ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறுடன் ஒரு டேபிள்ஸ்பூன் தேன் சேர்த்துச் சாப்பிடுவது சருமத்தை புத் துணர்ச்சியுடன் வைத்திருக்கும். இதையெல் லாம் சரியாக கடைபிடித்தபின் முகத்திற்கு மேலாக, மாஸிஸ்சரையர், ஆலிவ் ஆயில், கிரீம்கள் என்று தேய்த்தால் பலனிருக்கும். 30 வயதிற்குப் பின் ரெகுலர் பேஷியல்-மிகவும் நல்லது.

சருமத்தொல்லை இருப்பவர்களுக்கும், நல்ல சருமம் வேண்டுபவர்களுக்கும் இந்த அட்டவணைப்படி பத்து நாட்கள் செயல்படலாம்.

காலை 5.30 - ஒரு டம்ளர் எலுமிச்சை சாறு தேனுடன்.
காலை 7.30 - நல்ல பழவகைகள், ஒரு டம்ளர் பால்.
காலை 9.30 - ஒரு டம்ளர் காரட் ஜூஸ்
காலை 11.30 - ஒரு கிண்ணம் வேகவைத்த காய் கறிகள், முளைவிட்ட பயறு, சிறிய கப் தயிர், பச்சைக் காய்கறி சாலட்.
மதியம் 2.30 - ஒரு டம்ளர் மோர்
மாலை 4.30 - பழரசம்-பழங்கள்
மாலை 6.30 - ஒரு டம்ளர் காரட் ஜூஸ்
மாலை 7.30 - இரண்டு எண்ணெய் சேர்க்காத சப்பாத்தி, பழங்கள் காய்கறி சாலட், காய்கறி சூப், தயிர் சிறிது.

நன்றி-ராஜம்.

குழந்தையின் பற்களைப் பாதுகாக்க

## தாய்மார்கள் கவனிக்க சில ஆலோசனைகள்

கர்ப்பம் தரித்து ஆறாவது மாதத்திலிருந்து வயிற்றிலுள்ள குழந்தையின் பால் பற்கள் மாத்திரமல்ல நிரந்தரப் பற்களும் வளர்ச்சியடையத் துவங்குகின்றன.



இந்தக் காலப்பகுதியில் தாய் ஒருவர் தான் மேற்கொள்ளும் உணவு மற்றும் மருந்து வகைகளை போன்றவற்றில் சீரான கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு பிறக்கும் குழந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதோடு, பற்களும் விகாரமடைந்து அவற்றில் பலவிதக்* குறைகளும் ஏற்படக் காரணமாக அமைகிறது.

கர்ப்பம் தரித்துள்ள காலத்தில் தாய் நிறை உணவுகளை உட்கொள்வதில் விசேட கவனமெடுப்பதோடு டெட்ராசைக்கிளின் (Tetracyclin) போன்ற கிருமி எதிர்ப்பு மாத்திரைகளின் பாவனைகளையும் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

டெட்ராசைக்கிளின் (Tetracyclin) போன்ற மாத்திரைகளின் பக்க விளைவுகள் குழந்தைகளின் பற்களை பாதிப்படையச் செய்கின்றன என்ற கருத்து அனேகமான வைத்தியர்கள் மத்தியிலும் நிலவி வருகின்றது.

குழந்தைகளுக்கு பால் பற்கள் தோன்றிய காலம் தொட்டு 1 1/2 வயதையடையும்வரை அவர்களின் பற்களை கிருமிநீக்கிய மிருதுவான துணி அல்லது பஞ்சுகளினால் தேய்த்து விடுதல் போதுமானதாகும்.

1 1/2 வருடம் தொட்டு 04 வயதுவரை சிறிய மென்மையான பல் பிரஷ் மூலம் பெரியோர்களே குழந்தைகளின் பற்களைத் துலக்கி விடுதல் அவசியமாகும்.

விரல் சூப்புதல், நகம் கடித்தல் போன்ற செயல்களினால் குழந்தைகளின் பற்கள் கோணலுறுவதோடு நோய்க் கிருமிகளும் உடலில் தொற்றிக் கொள்ளக்கூடும்.

இனிப்பான உணவு வகைகளை உட்கொள்வதன் மூலமே குழந்தைகளின் பால் பற்களில் அரிப்பு ஏற்படுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இதற்காக குழந்தைகளுக்கு இனிப்பே கொடுக்கக் கூடாதென்பதல்ல. குறிப்பாக இனிப்பு பதார்த்தம் குழந்தையின் வாயில் கூடுதலான நேரம் உறைந்து காணப்படும் பொழுது அவர்களின் வாயில் அதிகமான அமிலம் சுரக்கப்பெறுகிறது.

அவ்வாறு சுரக்கப்படும் அதிகமான அமிலமே குழந்தைகளின் பால் பற்களைச் சேதமடையச் செய்கின்றன. எனவே குழந்தைகள் நித்திரைக்குச் செல்லும் நேரத்திற்கு முன்பு அவர்களுக்கு இனிப்பு பண்டங்கள் கொடுப்பதை தவிர்த்துக் கொள்ளுதல் நலமாகும்.

தவிர்க்க முடியாத நேரங்களில் கொடுக்க நேர்ந்தாலும்கூட வாயை நன்றாக கழுவச் செய்த பின்பே நித்திரையாக்குதல் வேண்டும். இவற்றைப்போல் பற்கள் தோன்றிய குழந்தைகளுக்கு இரவு நேரங்களில் பால் பருக்குதலிலும் முடிந்தவரை இவற்றை கடைப்பிடிப்பது நலமாகும்.

குழந்தைகளுக்கு பல் அரிப்பு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் தாமதியாது பல் வைத்தியரிடம் அழைத்துச்சென்று பல் அரித்த இடைவெளிகளை நிரப்பிக் கொள்வது அவசியமாகும். இவ்வாறு சிகிச்சை மேற்கொள்ளாத பட்சத்தில் அதில் வளர்ச்சி பெறவுள்ள நிரந்தர பற்கள் விகாரமடையக்கூடும்.

# வாலி எழுதிய வீரியக் கவிதைகள்



## வீட்டுவேலை—அலுவலக வேலை
## இரட்டைச் சுமையால் திணறும் பெண்கள்!

கவிஞர் வாலியை திரைப்படங்களுக்கு பாடல் எழுதும் ஒரு பாடலாசிரியராகத்தான் பலருக்குத் தெரியும்.

"எப்படி எப்படி? சமைஞ்சது எப்படி?" "முக்கலாலா, முக்காபலா" என்றெல்லாம் படத்தில் பாட்டெழுதி பலரால் வசைபாடப்படும் வாலிக்கு ஒரு மறுபக்கம் உண்டு. சிறந்த புதுக் கவிதைகளை அவர் படைத்திருக்கிறார். பெண்கள் சுமக்கும் சீதனக்கொடுமை, வேலைக்குச் செல்லும் பெண்களின் வேலைப்பளு போன்றவற்றை வாலி தன் கவிதையால் சாடியிருக்கிறார். சென்னை வானொலியில் இவை ஒலிபரப்பாகியுள்ளன. இனி அக்கவிதைகள்-

### கவிதை 1

"அப்பா
தன்னிடம் இருந்த
இரண்டில் ஒன்றை விற்று
அக்காளின் திருமணத்தை
முடித்தார்.

அம்மா
தன்னிடம் இருந்த
இரண்டில் ஒன்றைவிற்று
இன்னொரு அக்காளின்
திருமணத்தை முடித்தாள்.

மூன்றாவதீ
மகளாகிய நான் மட்டும்
கல்யாணமாகால்
காலமெல்லாம்
கன்னியாக.

என் செய்வது?
என்
கல்யாணத்தை முன்னிட்டு
அப்பாவும்-அம்மாவும்
தங்களிடம் மீதமுள்ள
இன்னொன்றையும் விற்றால்
இறந்தே போவர்கள்.

அவர்கள் உயிர்வாழ
ஆளுக்கொரு சிறு நீரகமாவது
வேண்டாமா?

### கவிதை 2

அதிகாலையில்
அஞ்சடித்ததும்
கோல்கேட்டில்
பல் விளக்கி-ஒரு
காக்காய்க் குளியல்.

புருஷனுக்கு
ப்ரூ;
குழந்தைகளுக்கு
காம்ப்ளான்.
அத்தை மாமாவுக்கு
அரிசிக் கஞ்சி.
அதே சூட்டில்
ஆறு பேருக்கும்
சோறு வடித்து

பத்மா சேஷாத்திரி
பஸ் வருவதற்குள்
குழந்தைகளைக்
குளிப்பாட்டி
சீவி
சிங்காரித்து
சொஜ்ஜியோ
பஜ்ஜியோ
டிபன் பாக்ஸில் அடைத்து
டாட்டா காண்பித்துவிட்டு

அவரும் நானும்
பூனை வருகிறதா என்று
பார்த்துப் பார்த்து
ஆபிஸ் புறப்பட-
அவர்
ஹாய்யாக
பஜாஜ் ஸ்கூட்டரில்;
நான்
அடியும் இடியும்
வாங்கிக்கொண்டு
பத்தாம் நம்பர்
பல்லவனில்.

நாள் பூராவும்
ஆபிஸ் மனேஜர்
அசட்டுப் பிசட்டென்று
பேசுவதற்கெல்லர்ம்
பெருமாள் மாடாகி

குனியும் போதும்
நிமிரும் போதும்
இடுப்பு மடிப்புக்களை
எண்ணிப் பார்க்கும்
ஹெட் க்ளார்க்கை
மனதிற்குள்ளேயே சபித்து

பேலன் ஷீட்
டேலி ஆகாமல்
பாடாய்ப் படுத்த
பேய் முழி முழித்து

ஒரு வழியாக
வீடுவந்து சேர்கையில்
வாசல் விளக்கில்



மின்சாரம் பூக்கும்.

மறுபடியும்
ப்ரூ
காம்ப்ளான்
அரிசிக்கஞ்சி
ஆறுபேருக்கு
சோறு.
சோற்றுக்கடையை
அடைத்து-
பாத்திரம் பண்டம் கழுவி
குழந்தைகளுக்கு
ஹோம் வேர்க்கில் உதவி
அத்தை முதுகில்
அயோடெக்ஸ் தேய்த்து
மாமாவுக்கு
மட்டையில் பொடி நிரப்பி
புருஷனோட சாக்ஸை
கசக்கிப் பிழிந்து காயப்போட்டு-

.............

படுக்கையில்
கட்டையைப்
போடும்போது
பத்தே முக்கால் ஆகியிருக்கும்.
உச்சந் தலையிலிருந்து
உள்ளங்கால் வரை-
ஒரே
உளைச்ச லாயிருக்க....

'நாலு பாக்கெட்
நீரோத் வாங்கி வந்தேனே;
எங்கே?' என்று
புருஷன் கேட்க

ஓங்கி அறையலாமென்று
ஒரே ஆத்திரமாக வர-
முடியுமா?
வாசுகி கண்ணகி
வந்த மண்ணாச்சே!

நீரோத் பாக்கெட்டை
நேரே வைத்துவிட்டு
மல்லாந்து படுத்தால்
மறு விநாடியே
பொணத் தூக்கம்.

ஒரு
மனுஷி-
மரக்கட்டையாகக்
கிடப்பது குறித்து
கிஞ்சித்தும்
கவலையின்றி
அவர் காரியத்தில்
அவர்.

இப்படி
ஒரு தலைக் காமத்தில்
ஓடிக்கொண்டிருக்கிறது
வாழ்க்கை.

**பி.குறிப்பு-**
ப்ரு- காப்பி, காம்ப்ளான்-போஷாக்குப்பானம்
பல்லவன்-பஸ், நீரோத்- கருத்தடை உறை.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி


### மெடிட்டரியன் சூப்

**தேவையான பொருட்கள்:**
வெங்காயம் - 1 (நடுத்தர அளவு)
உருளைக்கிழங்கு - 2 (நடுத்தர அளவு)
உள்ளிப் பல்லு - 4 (அரைத்த விழுது)
இஞ்சி - சிறு துண்டு (அரைத்த விழுது)
மிளகுத்தூள் - 1/4 தேக்கரண்டி.
போஞ்சி - 3
கரட் - 2
தக்காளி - 1 (நடுத்தர அளவு)
உப்பு - தேவையான அளவு
பச்சைப்பட்டாணி - 1/2 கப்
மிளகாய்த்தூள் - 1/2 தேக்கரண்டி.
கொத்தமல்லி இலை - 1/4 மேசைக்கரண்டி (நறுக்கியது)

**செய்முறை:**

கரட், உருளைக்கிழங்கு இரண்டையும் தோல் நீக்கி துண்டு துண்டாக நறுக்கிக் கொள்ளவும். போஞ்சியையும் துண்டு துண்டாக நறுக்கிக் கொள்ளவும். இந்த மூன்று காய்கறிகளுடன், பட்டாணியையும் சேர்த்து வேகவைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் 4 கப் தண்ணீர் ஊற்றி, அதில் மிளகாய்த் தூள், வெங்காயம், உப்பு, தக்காளி, இஞ்சி, பூண்டு விழுது ஆகியவற்றைப் போட்டுக் கொதிக்க விடவும். நன்கு கொதி வந்தவுடன், வேக வைத்த காய்கறிகளை இதில்போட்டு மேலும் 5 நிமிடத்திற்குக் கொதிக்க விடவும். அடுப்பிலிருந்து இறக்கி மிளகுத்தூள், நறுக்கிய கொத்துமல்லி இலைகளைப் போடவும். சூப் ரெடி. நெய்யில் வறுத்த பாண் துண்டுகளுடன் இதனைப் பரிமாறலாம்.

## வீட்டுக்குறிப்பு



செயற்கை முத்துக்களால் ஆன மாலையை அங்குமிங்கும் போட்டு வைத்து விடாமல், ஒரு பிளாஸ்டிக் பெட்டியில் சிறிதளவு டால்கம் பவுடர் போட்டு, அதில் இந்த முத்து மாலையைப் போட்டு வையுங்கள். தோல் உரியாமலும், கலர் மங்காமலும், நாள் படவும் உழைக்கும்.

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.
* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 22
உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.



# தேன் கிண்ணம்



## பூர்வீக வருஷ பூசிப்பு

முதுமை முத்தமிட்ட
யௌவன முகம்.
பறந்து போகும்
புலம் பெயர்ந்த பூமி நோக்கி
மனசு.

புஷ்பங்கள் இல்லாத வசந்தம்...
வரட்சி உச்சரிக்கும் மேகம்...
ஊர்ப் பிரஷ்டம் செய்ததனை
எதிர்க்கும் சூரிய அக்னி....
பாடல் தொலைத்த குயில்கள்...

இனி ஒன்றும் இல்லை
என்றாகிவிட்ட
வெறும் ஜெபங்களில்
பெருமதி இடிந்த பூமி!

உதிர்ந்து போகும்
இவ்வருஷத்தின் தேதிகள்.
நுரைத்து நுரைத்து வரும்
என் பிரதேசம் பற்றியதான
சொப்பனங்கள் சேராத
நிறங்கள்.

புதிய வருஷம்
பழமைபோல் புலரும்.
மீண்டும் கண்கள்
கண்ணீர் உகுத்தும்.

-இஸ்லாஹிய்யா கே. முனாஸ்-

## நீயும் நானும்

அந்திவான
குருவிக் கோலங்களாய்
மனசெல்லாம்
கணிதக் கோணங்கள்
கீறியவள் நீ!

வகுப்பில்
எத்தனை கேத்திரகணித
கோணங்களைத் தீர்த்திருப்பேன்?
நீ போட்ட
கோணங்களின் அளவைத்தான்
அறியமுடியவில்லையடி.

ராத்திரிகளில்
வெற்றிலை இடித்தபடி
சகமான சாமிக்கதை சொல்லும்
பாட்டிபோல
இனிப்பாய் பேசும்
இங்கிதம்
உனக்கு எங்கிருந்து வந்தது?

தூர இருந்து
எனது துன்பங்களை
துடைத்து விடுகிறாயே...
எந்தளவு நீளம் உனது கைகள்....
எந்தளவு ஆழம் உனது இதயம்......?

நேசக் கோடுகளை
எனது இதயத்தாளில்
நீ கீறுகிற போதெல்லாம்
நான் குளிர்ந்து போய்.....
சில வேளை
கீலம் கீலமாய்
கிழிந்து போய்....

எத்தனை சந்தரம்!
எத்தனை சோபிதம்?

புள்ளடிகளால் புளகிக்கும்
அரசியல்வாதியைப் போல
உன் புன்னகைகளால்
பூரித்துப் போகிறேனே நான்

நீ நானாகி
நான் நீயாகி....
பார்!
பூமிப்பந்து நம் கால்களின் கீழ்
கால் பந்தாய்.....

எஸ். புஸ்பானந்தன்.

## வா புத்தாண்டே........!

புத்தொளிதனை வீசியே
புறப்பட்டு வா புத்தாண்டே
இத்தரை இன்னல் நீக்கிட
இனிதாய் ஓடிவா புத்தாண்டே

சத்தியமும் சாந்தியும் நிலைத்திட
சங்கீதம் பாடிவா புத்தாண்டே
அத்தனை மாந்தரும் அமைதியுற
அன்பைக் கொண்டுவா புத்தாண்டே

வேற்றுமைப் புயலை விரட்ட
விரைந்துவா புத்தாண்டே
ஒற்றுமை பயிரை வளர்த்திட
ஓடி இங்குவா புத்தாண்டே

கோபங்கள் மறந்து யாவரும்
குலவிட வைத்திடு புத்தாண்டே
சோகங்கள் பறந்து எங்குமே
சுகங்கள் தந்திடு புத்தாண்டே

மன்னார் மஹ்ஸா ஏ. காசிம்.

## (என்) விதி!

பாலை
மணலின்
அனல் நீரில்
பூத்த
பூமொட்டாய்
இளமை!

*

எரிமலையில்
தூரிகை
தொட்டு
துலக்கப்பட்ட
'தலையெழுத்து'!

*

ஏமாற்றக்
கதிர்
வீசல்களால்
உதிர் வாகிப்போகும்
'ஈசல்' வாழ்வாய்
ஊசலாடும்
'எதிர்பார்ப்புகள்'!

*

வாழ்க்கையின்
பாழ்க்
குழிகளுக்குள்
சழிப்போய்
சடுகாடாய்
என்-
வசந்தங்கள்

*

கனவுகளில்
களிப்பூட்டி
நனவுகளில்
சலிப்பூட்டி!
நாளும் என்னை
நடைப்பிணமாக்கும்
என் விதி!

*

-பாணகமுவ என். முஸ்தாக்-

## நிகழ்கால ஜீவிதம்

சுகானுபவத்தில்
இலயித்து மீண்டு
நெட்டி முறித்து
நிமிர்ந்து பார்த்தபோது
வந்த வழியெங்கும்
உயிரின் ஊசலாட்டங்கள்!

உணவர்வின் ஸ்பரிசம்
உடலெங்கும் விரவிட
தொட்டுப்பார்த்த மானுடம்
தான் இன்னும்
மரணிக்கவில்லையென்பதை
ஊர்ஜிதம் செய்துகொண்டது!

விலங்கிடப்பட்ட
விரகதாப பெருமூச்சு
திக்கித்திணறி
ஆவியாகிய கனத்தில்
ஜீவியம் சிலிர்த்துக்கொண்டது!

தில்லையடிச் செல்வன்.



## விடியல்

குறட்டை விட்டு
இருளின்
கும்மியடிப்பில்
தூக்கத்தின்
ரகசியத்தில்
விழிதாழ்த்தி
சூரியனின்
தொலைந்தவிலாசம்
மீண்டும்
கதிர்நெற்றியில்
முகவரியாகி
மீதான மண்ணின்
சவடுகளை
சொரிந்து கொள்ளும்.

••

அசடுவழிந்த
ஜீவிதத்தின்
முன்னுதிப்பு
அவசர அவசரமாய்
குடுகளை
கரங்களுக்குள்
அழைப்பித்துக்கொள்ளும்
மண்மீதான
ஜீவன்களை
தொட்டுத்தொட்டு
விசாரணை
பரிசிக்கும்.

••

வெளிச்சங்களின்
கடூரத்தில்
வெளிறிப்போன
நிலாவும்
நிலாத் தோழர்களும்
நிஷ்ரே பயணத்தில்
எங்கோ
பதுங்கிக் கொள்வார்கள்.
சூரியனின்
பார்வை
படாத இடத்தில்.

••

புல்லின்
தளிர் மேனியில்
தங்கிக்கிடக்கும்
வெள்ளிப் பனியின்
பிம்பத்தில்
ஆகாயத்துச் சூரியன்
அழகாக
முகம்பார்த்து
வெட்கிப்போவான்.

••

காற்றில்
வரவேற்பு நாதங்கள்
வைகறையுடன்
கை குலுக்கும்
ஓ......
பூமிக்கும்
ஒரு
பூவைச்சமந்த
புதுமைச் சிலிர்ப்புதான்.

••

எங்கும்
ஒளிப்பிம்பத்தின்
பிரயாணம்
விடியலின் விற்பனையை
உச்சஸ்தாயி
கீதங்கள்
உலகுக்கு
விளம்பரப்படுத்தும்
ஒரு
அஸ்த்திவாரத்தின்
வெம்மை
உச்சிவரையில்
உயர்ந்துகொண்டே
நேரங்களின் மோதலில்
மீண்டும்தன்
பாதையில்
படுத்துக்கொள்ளும்.

••

கிண்ணியா சபறுள்ளா.



## சமாதானம்

உஷ்......
பரம இரகசியம்
வெளியில்
சொல்லமுடியாது.
காதுக்குள் மெல்ல
ஊதிவிட்டுச்
சென்றான் தோழன்.


இன்றைய இரவுக்குள்
எல்லாம்
முடிந்துவிடும்
விடிந்ததும்
நாமெல்லாம்
சிட்டுக்குருவியாய்
சுதந்திரமாய்
சிறகடிக்கலாம்.

நான்
என் மனைவியின்
காதுக்குள்
மெல்ல இரகசியமாய்...
அவள் சொன்னாள்:
இந்தப் பொய்யை
'கின்னஸ்' புத்தகத்தில்
எழுதச் சொல்லுங்கள்.

கருங்கொடியூர் கவிராயர்.

## நோ கொமன்ற்ஸ்






## இந்த வாரம் உங்கள் பலன்

(01.01.95 முதல் 07.01.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வெள்ளி. வியாழன் |

★ சந்திரன்-தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு தாமதம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- உறவினர் பகை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- புதிய முயற்சி, வெளியிடப் பயணம். | காலை 6 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- வீண்குறை நீங்கும், மனத்தைரியம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-குடும்ப சுகம், பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக் கவலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், உறவினர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் அதிகம், பெரியோர் பகை. | காலை 7 மணி |
| சனி- பணவரவுத்தடை, மனக்கவலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், சுபகாரியத்தடை. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, தனலாபம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உறவினர் பகை, முயற்சித்தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- பணவரவு, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பணக்கஷ்டம். | பி.ப. 1 மணி |
| புதன்- குடும்ப சுகம் நன்மை, மனக் கவலை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- துயர் நீங்கும், ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனமகிழ்ச்சி குறைவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பண வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- முயற்சி மேன்மை, தனலாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| புதன்- குடும்ப சுகம், கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- மறைமுக எதிர்ப்பு, தொழில் கேடு. | காலை 6 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | காலை 8 மணி |
| சனி- தனலாபம், செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள்- வீண்குறை நீங்கும், தனலாபம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| புதன்- முயற்சி மேன்மை, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக் கவலை. | காலை 7 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், துயர் அதிகம். | காலை 6 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- குடும்ப சுக நன்மை, முயற்சி வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள்- பணக்கஷ்டம், கடன்படல். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| புதன்- துன்பம் அதிகம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, உயர்ந்தநிலை. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன்படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- உறவினர் உதவி, பணக்கஷ்டம் தீரல். | பி.ப. 1 மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், மனக்குறையதிகம். | பகல் 12 மணி |
| சனி- காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- குடும்ப சுகம் மேன்மை, பணச் செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடவாழ்க்கை, மனக் கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |
| புதன்- பொருளாதார நன்மை, ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மனக்கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| சனி- துன்பம் நீங்கும், வீண் பகை மறையும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம் பாதிப்பு, மனக் கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 6 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணவரவு, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்- துயர் அதிகம், வீண் மனஸ்தாபம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, கௌரவக்குறைவு. | பகல் 12 மணி |
| சனி- வெளியிடப் பயணம், தனலாபம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3



"வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமையில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்."
-சுப்பிரமணிய பாரதியார்-



# அம்மா

அம்மா
அம்மா எனது அம்மா
அருமை ஆன அம்மா.
பெருமையாக நாளும் என்னை
போற்றி வளர்க்கும் அம்மா

கருக்கல் வேளை ஆனதும்
கடமை யாவும் முடித்துமே
பாடசாலை செல்லும் எனக்கு
பாடம் சொல்லும் அம்மா.

பாடசாலை விட்டுநான்
பாதை ஓரம் வருவதை
படலையில் வந்து நின்று
பார்த்து மகிழும் அம்மா

மதிய உணவை உண்டதும்
மடியில் என்னை வைத்துமே
அறிவு மிக்க கதைபல
அன்பாச் சொல்லும் அம்மா

வ.வில்பாதினி-எருவில்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஜலகண்டம்


மேம தேசம் என்ற நாட்டை விண்ணவன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி தவறாது ஆட்சி செய்து வந்தான். அந்நாட்டில் மாதம் மும்மாரி பெய்தது. அதனால், பயிர் பச்சைகள் நன்கு விளைந்தன. மரம், செடி, கொடிகள் செழித்தன. பசியும், பட்டினியும் போய் செல்வமும், செழிப்பும் எங்கும் நிறைந்திருந்தது. மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

இப்படி மேம தேசம் எவ்வித பஞ்சமுமின்றி சகலமான செழிப்புக்களுடன் இருந்த பொழுது, ஒரு கால கட்டத்தில் வானம் பொய்த்து விட்டது. மழைக்காலத்தில்கூட மழை பெய்யவில்லை. ஆறு, கிணறு, குளம், குட்டை, ஏரி கால்வாய் எல்லாம் வற்றி விட்டன. பயிர்கள் நீரின்றி கருகிவிட்டன. குடிக்கக்கூடத் தண்ணீரின்றி மக்கள் மிகவும் அவதிப்பட்டார்கள். எங்கும் பஞ்சம் நிலவியது.

உடனடியாகத் தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்காவிட்டால் மக்கள் மடிந்து போவார்கள் என்பதை அறிந்தான் மன்னன் விண்ணவன். தண்ணீர் பஞ்சத்தை எப்படி உடனே போக்குவது என்று அவன் சபையைக் கூட்டி ஆலோசித்தான்.

"அரசே! யாகம், வேள்வி எல்லாம் நாடு முழுவதும் செய்தாகிவிட்டது. ஆனாலும், கடவுள் கண் திறந்து பார்க்கவில்லையே", என்றார் ஒரு அமைச்சர்.

"மக்களிடம் தர்ம சிந்தனையும், இறை பக்தியும் நிறைய இருக்கவே செய்கிறது. அப்படி இருந்தும் மழை பெய்யவில்லையே மன்னா!" என்றார் மற்றொரு அமைச்சர்.



"அரசே! நமது அண்டை நாடான வானவ நாடிருக்கிறதே, அங்கு மட்டும் வற்றாத ஜீவ நதிகள் ஓடிக்கொண்டே இருக்கின்றனவே, அவைகளில் நீர் வற்றுவதே இல்லையே? தண்ணீர் பஞ்சம் ஒருமுறைகூட வந்ததில்லையே அங்கே? என்றார் தளபதி.

அப்போது, சபையிலிருந்து ஒரு இளைஞன், "அரசே! நான் வானவ நாடு சென்று நம் நாட்டிற்கு தண்ணீர் கொண்டு வருகிறேன். தாங்கள் அனுமதிக்க வேண்டும்," என்று கூறினான்.

"இதற்கு வானவநாட்டு மன்னன் சம்மதிக்க வேண்டுமே? இது அவ்வளவு சுலபமான காரியமில்லையே?" என்றான் மன்னன்.

"அரசே! முயன்றால் முடியாதது எதுவுமில்லை. எப்படியாவது நீரைக் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன். கால்வாயைச் செப்பனிட்டு நீர் ஓடி வருவதற்கான வேலைகளைத் துவக்க ஆவன செய்ய வேண்டும். என்று கூறி விண்ணவனிடம் அனுமதி பெற்று அவையை விட்டுச் சென்றான்.

அந்த இளைஞன் கூறியபடியே கால்வாயைத் துப்பரவு செய்து சீராக்க கட்டளையிட்டான் மன்னன்.

சில நாட்கள் கழிந்தன.

ஒருநாள் மக்கள் கூட்டம் மகிழ்ச்சியோடு அரண்மனையை நோக்கி ஓடி வந்தார்கள். காரணம் என்னவென்று புரியாத விண்ணவன், உடனே அரண்மனை மாடத்திற்கு வந்து நின்றான்.

"மன்னா! கால்வாயில் வானவ நாட்டிலிருந்து தண்ணீர் மடை திறந்ததுபோல் 'குபுகுபு'வென பொங்கிப் பெருகி ஓடி வருகிறது அரசே!" என்று கூறி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

மன்னன் விண்ணவனால் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. உடனே கால்வாயை நோக்கி ஓடினான். தான் காண்பது கனவா, நனவா என்று ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. கால்வாயின் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு பளிங்கு போன்ற சுத்தமான தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அதை இரு கைகளாலும் அள்ளிப் பருகினான் மன்னன்.

"அரசே! இப்போது மகிழ்ச்சிதானா?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் விண்ணவன், வானவ நாட்டிற்குச் சென்று தண்ணீர் கொண்டு வருவதாகச் சொன்ன இளைஞன்.

"வாலிபனே நீ எப்படி வானவ நாட்டு மன்னனை சம்மதிக்க வைத்தாய்?" என்று கேட்டான் விண்ணவன்.

"அரசே! வானவ நாட்டு அரசன் சோதிடத்தில் அதிக நம்பிக்கையுடையவர் என்பதை நான் அறிந்திருந்தேன். அதனால் நான் ஒரு சோதிடர்போல் மாறுவேடத்தில் சென்று, அவருக்கு ஒரு ஜலகண்டம் இருப்பதாகவும், அதிலிருந்து தப்ப வேண்டுமானால் கடலில் கலக்கும் நீரை அருகில் உள்ள நாட்டிற்குத் திருப்பிவிட வேண்டும் என்றேன். அதை நம்பிய வானவநாட்டு அரசர் அப்படியே செய்துவிட்டார். நம் நாட்டின் தண்ணீர் பஞ்சமும் தீர்ந்தது," என்றான் இளைஞன்.

விண்ணவன் அந்த இளைஞனுக்கு நிறைய பரிசு அளித்தான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.01.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 72
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 69

**பரிசுக்குரியவர்**
வீ.தயாளன்-இந்து கல்லூரி, மாத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

தணிகாசலம் தசரதன்
மட்/சந்திரவெளி சி.வி.வி-சந்திவெளி.

ஏ.சி. ரியால்-நூ/ஹ சென்ஜோசப் த.ம.வி. மஸ்கெலியா.

கணநாதன் அஷோக்-ஸ்ரீ.மு.மா.அ.த.வி-கம்பளை.

ஆ.பாலக்கிருஸ்ணன்
சரஸ்வதி தமிழ் வித்தியாலயம் மொணறாகலை.

செல்வி.எம்.ஏ.சி.பாத்திமா சுமையா
மட்/மீரா மகா வித்தியாலயம்-காத்தான்குடி-06.

## செய்து பாருங்கள்



தேவையான பொருட்கள்:
பொட்டாசியம் பெர்மங்கனேட், ஹைப்போதூள், ஒரு சிறு துணி, ஒரு கிளாசில் தண்ணீர்.

ஹைப்போதூளை தண்ணீரில் கலக்கவும். சிறு துணியின் நடுப் பகுதியை மட்டும் அதில் நனைத்து துணியை நன்கு காய வைக்க வேண்டும். பிறகு, கிளாசில் உள்ள தண்ணீரில் பொட்டாசியம் பெர்மங்கனேட்டைப் போட்டு நன்கு கலக்கவும். தண்ணீரின் நிறம் சிவப்பாக மாறும்.

இப்போது, அந்தத் தண்ணீரை வெண்மையாக மாற்றுவதாக உங்கள் நண்பர்களிடம் சவால் விடவும். ஏற்கனவே ஹைப்போ திரவத்தில் தோய்த்து காய வைத்த சிறு துணியைக் கிளாஸ் மீது விரித்து வைக்கவும்.

ஹைப்போ திரவத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட பகுதி நடுவில் வரவேண்டும். அந்தப் பகுதியில் ஒரு விரலால் அழுத்தி கிளாசில் உள்ள வண்ண திரவத்தைத் தொட வேண்டும். பிறகு, கிளாசை லேசாகக் கலக்க அந்த நீர் நிறமற்றதாக மாறும்.

பொட்டாசியம் பெர்மங்கனேட்டும், ஹைப்போ இரசாயனமும் சேர்ந்து ஏற்படும் இரசாயன மாற்றத்தால்தான் இது நிகழ்கிறது.

**பாப்பா முரசுக்கு**
**உங்கள் ஆக்கங்கள்**
**வரவேற்கப்படுகின்றன.**
ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி-
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ. இல. 1772
கொழும்பு.

## விடுகதைகளும் விடைகளும்

01. ஒரு எண்ணையும், ஒரு முகத்தையும் இணைத்தால் ஒரு ஆணின் பெயர் வரும். யார் அவர்?
02. நீரிலே மலரும், நிலத்திலே படரும். அது என்ன?
03. கால் இல்லாமல் வருவான். கால் இல்லாமல் நிற்பான். யார் அவன்?
04. ஆறெழுத்தில் ஒரு ஆணின் பெயர். அது சிப்பிக்குள் இருக்கும் ஒன்றையும் சீதையின் கணவன் பெயரையும் குறிக்கும். அவர் யார்?
05. தான் உண்ணமாட்டான். பிறருக்கு உணவு படைப்பான். ஆனால் அவனுக்குள் ஒரு ஊரும் உண்டு. ஒரு மிருகமும் உண்டு. யார் அவன்.
06. எழுத்துக்கள் இரண்டு. முத்துக்கள் முப்பத்திரெண்டு. அது என்ன?

01. ஆறுமுகம் 02. பாசி 03. மழை
04. முத்துராமன் 05. கரண்டி 06. பல்

எம்.யசீர் அஹமட். யோனகபுர திக்வெல.

01. பகலிலே வெட்டுவான். இரவிலே ஒட்டுவான். அவன் யார்?
02. தொட்டுப் பார்க்கலாம், ஆனால் எட்டிப் பார்க்க முடியாது. அது என்ன?
03. சிலர் அடித்துக்கொண்டு ஓடுவார்கள். சிலர் அடிக்காமல் ஓடுவார்கள். யார் அவர்கள்?
04. நான்கு கால் திருடன். நடு இரவில் கொள்ளைக்காரன். அவன் யார்?
05. கடலிலே மலரும் பூ-நிறமோ மல்லிகைப்பூ, உணவுக்கு உகந்த பூ- உங்கள் வீட்டிலும் இருக்கும் பூ. அது என்ன பூ?
06. அவன் நம்மைக் கொல்வான். நாம் அவனைக் கொல்ல முடியாது. யார் அவன்?
07. அண்ணனுக்கு கண் உண்டு. தம்பிக்கு கண் இல்லை. அவர்கள் யார்?
08. அடித்தாலும் ஓடுவான். உதைத்தாலும் ஓடுவான். அவன் யார்?

01. கண்இமை 02. முதுகு 03. அலாம் கடிகாரம் 04. எலி 05. உப்பு
06. துப்பாக்கி 07. தேங்காய், குரும்பை 08. பந்து.

ஏ.ஆர்.பாத்திமா பர்வின்-மட்/அல்ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி-05

## நார்வல்



- **நார்வல் என்றால் என்ன?**
  ஆர்டிக் எனப்படும் வட துருவக் கடலில் காணப்படும் அபூர்வ திமிங்கிலம் ஆகும்.
- **மற்றத் திமிங்கலத்திற்கும் இதற்கும் உள்ள வேறுபாடு என்ன?**
  இதற்கு மூன்று மீற்றர் நீளத்திற்கு தந்தம் இருக்கும். இது உண்மையில் திமிங்கலத்தின் மேல் பல் ஆகும். இதுவே நீளமாக தந்தம்போல் வளரும்.
- **இந்தத் தந்தத்தின் பயன் என்ன?**
  இதனால் பயன் எதுவுமில்லை.
- **இந்தத் திமிங்கலம் வேட்டையாடப்படுவது எதற்காக?**
  இந்தத் தந்தம் மாய சக்தி நிறைந்தது. விஷத்தை முறியடிக்கக்கூடியது என்ற நம்பிக்கை இருந்தது. அதனால் இந்தத் தந்தத்தினால் செய்த கிண்ணங்களை உபயோகித்தனர். இதற்காக இவை வேட்டையாடப்படுகின்றன.
- **இந்தத் திமிங்கலம் எவ்வளவு நீளம் வளரும்?**
  தந்தத்தைவிட 16 அடி நீளம் வரை வளரும். இதன் நிறை 2 தொன் ஆகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மகாசூலம்



# எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது! யார் இந்த எழுத்தாளர்? வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்! கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு **அசத்தலான**– பரிசுகள் காத்திருக்கின்றன. தொடர்ந்து வாசியுங்கள். நாம் கேட்கும்போது மட்டும் விடைய எழுதி அனுப்பினால்போதும்.

**ப**வத்ராதன் ஏதோ ஒரு வேகத்தில் அப்படிச் சொன்னாரே தவிர, உள்ளூர அவருக்கு இப்படி எல்லாம் எந்தப் போர்க் குணமும் இல்லை. இதற்கு முன் எப்போதும் இதுமாதிரி அவர் பேசியது மில்லை!

அவருடைய சுபாவத்துக்கு அவருக்கு எதிரிகள் என்று யாருமே இருக்க முடியாது! முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே சிநேகம்தான் தோன்றும். ஆனால்........ நீலகண்டன்?

தன்னோடு பகைமை பாராட்டியிருக்கிறார். அவருடைய தன்முனைப்பு உணர்வு அவரையே ஊரும் உலகமும் போற்ற வேண்டும் என்று உந்தி விட்டிருக்கிறது.....! எனவேதான் குஞ்சனிடம் இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் அள்ளிக் கொட்டியிருக்கிறார். இது–

அவருடைய சுபாவம்! இதற்குப்போய் ஏன் இப்படிப் பேச நேர்ந்தது?

குழம்பிக்கொண்டிருந்தார் அவர்.

குஞ்சன் எஜமானையே பாதிக்கண் தூக்கியபடி பார்த்தான். அவரை ஒருவழியாக உசுப்பி விட்டாயிற்று.

வாயில் கோலிட்டுக் குத்தினால் நீர்ப் பாம்பு கூடத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு கொத்து கொத்தத்தான் செய்யும். இனியும் இப்படியே பவத்ராதன் திருமேனி வாயில்லாப் பூச்சி மாதிரி இருந்து என்ன பிரயோஜனம்?

இவரைப்பற்றி அந்த நீலகண்டன் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ கதையாக– வருவோர் போவோரிடமெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பது அவ்வளவும் தெரிய வேண்டாமா?

2



அதனால்தான் சொல்லிப் புரிய வைத்தான் குஞ்சன்.

இதுவரை, இவர் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமலிருந்திருக்கலாம். ஆனால் இனியாவது......

தனக்கும் ஓர் எதிரி இருக்கிறான் என்று எச்சரிக்கையோடு செயல்படட்டுமே!

–இது குஞ்சனின் மனோ நிலை.

இதற்குக் காரணமே நீலகண்டன் திருமேனியின் வேலைக்காரன் பாச்சு தான். திருமேனி தான் ஏதோ சொல்கிறார் என்றால் அவன் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியதுதானே? கூடவே வெளியில் வந்து குஞ்சனிடம் ஒரு 'குட்டிக்குலை' குலைத்துவிட்டான்! அதுதான் குஞ்சனை எரிச்சல் படுத்திவிட்டது.

இப்போது நீலகண்டன் திருமேனியின் வண்டவாளங்களைக் குஞ்சன், பாச்சுவின் முகத்திலடித்தமாதிரி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னான்! திருமேனியே சொல்லச் சொன்னபிறகு வந்த தைரியம்.

பாச்சுவின் வாயடைத்துவிட்டது!

நீலகண்டன் திருமேனியைப் பற்றி வானளாவப் புகழ்ந்து பேசிக் குஞ்சனின் தலையைக் குனிய வைத்தவன், இப்போது பூமியைப் பார்த்துக் குனிந்து கொண்டே சொன்னான்: "இதப்பாரு குஞ்சா! இதை நான் அப்படியே எங்க எஜமான் கிட்டே போட்டுக் குடுத்துடுவேன்........"

"போய்ப் போடு! எனக்கென்ன பயம்? உங்க காலகண்டன் திருமேனி அவரோட துஷ்ட மூர்த்திகளை அனுப்பி என்னை ஏதாவது செய்யணும்னாக் கூடச் செய்யச் சொல்லுடா! போ!"

பழியைத் தீர்க்கிற மாதிரிப் பேசினான் குஞ்சன்!

"திமிரடியாப் பேசறே! இதுக்கு அனுபவிப்பே குஞ்சா!" ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தான் பாச்சு!

அவனுடைய திருமேனியை இவன் வெறும் மேனியாக்கிய மாதிரி வெந்தான் பாச்சு. அவன் முகம் கோபத்தால் வீங்கியது.

"நீ ஒண்ணும் வந்து அந்நேரம் என்னைக் காப்பாத்த வேண்டாம்... போடா!" – அலட்சியப் படுத்தினான் குஞ்சன்.

**இ**ந்த வாக்குவாதம் முந்தின நாள் மாலையே அரசரடி மேடையில் ஆரம்பமாகி விட்டது. பகடை ஆடுகிறவர்கள் வந்து சேரவில்லை. அவனுக்கும் பகடை ஒரு பொழுதுபோக்கு. மனையிலிருந்து கடை வீதிக்கு மளிகைச் சாமான்கள் வாங்க வந்தால் இரண்டு ஆட்டம் ஆடி விட்டுத்தான் அப்புறம் அடுத்த வேலை!

அப்போது தான் அங்கே உட்கார்ந்திருந்த சிலரோடு பாச்சு அளந்து விட்டுக்கொண்டிருந்தான். முந்தின நாள் பேசிய அதே சமாச்சாரம்! அவன் இதைத் தொடராமலிருந்திருந்தால் ஒருவேளை குஞ்சனும் பேச்சைத் தடிக்க விட்டிருக்க மாட்டானோ.... என்னவோ?

குஞ்சன் அங்கே வருவதைப் பார்த்துக் கொண்டேதான் அப்படி அளந்திருக்க வேண்டும்.

"எங்க நீலகண்டன் திருமேனி செத்த கோழியைப் பறக்க வைப்பாரு! குட்டிச் சாத்தான் களை வேலைக்குவிட்டு கட்டிடமே கட்டி ஒசத்துவாரு! வேற சிலரும் இந்த ஊர்ல இருக்காங்க. என்ன பிரயோசனம்? நீலகண்டன் திருமேனி கால்லே ஒட்டிக் கெடக்கற தூசுக்குக்கூட அவுங்களை மதிக்காது."

பாச்சுவின் பேச்சில் குஞ்சனுக்கு எரிச்சல்.

இது ஏதோ எச்சிலைத் துப்பி வம்புக்கு இழுக்கிற சமாச்சாரம்!

"அடடா! நீயிருக்கறப்ப அந்த வீட்டுக்கு வேறெ குட்டிச்சாத்தான் எதுக்கு பாச்சு? உன் ஒருத்தனாலேயே திருமேனியைப் பனைமரத்துக்குக் கூட ஒசத்தமுடியுமே!" என்று சொல்லிவிட்டு பகடை மேடை மீது அமர்ந்தான் குஞ்சன். அவன் பரிகாசம் பாச்சுவை உசுப்பியது!

"ஏண்டா.... இனியுமா உனக்குப் புத்திவரலே? எங்க திருமேனிக்கு தெரிஞ்ச வித்தைகள்லே எதையாவது ஒண்ணு உங்க திருமேனியாலே செய்ய முடியுமா?"

"அவரு பெரிய அவதார புருஷன்! செத்த பறவையைப் பிழைக்க வச்சுடுவாரு. குட்டிச் சாத்தானுகளை மனுஷ உருவம் குடுத்து வேலை வாங்குவாரு! அது சரிதாப்பா......! நானும் நம்பறேன். உன்னை இது வரைக்கும் நாங்கெல்லாம் மனுஷனாத்தான் நினைச்சிட்டிருந்தோம். இப்ப நீ யாருன்னு சொன்ன வரைக்கும் சந்தோசம்....." என்றான் குஞ்சன். மேடையில் அமர்ந்திருந்த வர்கள் இதைக் கேட்டதுமே குபுக்கென்று சிரித்தார்கள்.

பாச்சுவின் முகம் பேயடித்தது போலாகி விட்டது.

"....... இந்த ஊர்லேயே இன்னிக்கு இருக்கற மந்திரவாதி ஒரே ஒருத்தர்தான். அவர் தான் பவத்ராதன்! மத்தவங்க எல்லாரும் தந்திரவாதி. அவ்வளவுதான்...."

"ஆமாமா! எந்திரமும் தகடும் எழுதிக் கட்டறவங்க எல்லாரும் மந்திரவாதி ஆயிட முடியுமா?" பாச்சுவை வெறுப்பேற்றத் தானோ என்னவோ பகடைமேடையில் ஒருவர் குஞ்சனுக்குச் சேர்ந்து பேசினார். மேலிடம் மனையின் புகழ்க் கொடியை உயர்த்தினார்.

பாச்சு சிவந்துபோய்விட்டான். அதைப் பார்த்த பிறகு வெறொருவர் அனுதாபமாகச் சொன்னார்,

"அட, அதுக்காக நீங்க ரெண்டுபேரும் எதுக்கு மோதிக்கறீங்? குட்டியைவிட்டு குரங்கு ஆழம் பார்த்தமாதிரி..... உங்களை, ரெண்டு திருமேனியும் சண்டைச் சாவலாக்கிப் புட்டாங்களா?"

பாச்சுவின் குறுக்கே பாய்ந்து அந்த மனிதர் மட்டும் தடுத்திருக்காவிட்டால் குஞ்சனைப் பாச்சு கடித்தே குதறியிருப்பான்.

குஞ்சன் மளிகைச் சாமான்களை வாங்கிக் கொண்டு போகும்போது பாச்சுவைப் பார்த்தான். மனசுக்குள் கருவினான். இதை மறுபடியும் வந்து பவத்ராதன் திருமேனியிடமும் சொன்னான்.

" அடக் கூமுட்டே! இதுக்குப்போய் நீயேன் அவனை ஒரு வெறிநாயா மாத்தினே?" என்று திட்டினார் திருமேனி.

"எனக்கு மட்டும் சில மந்திரங்கள் தெரிஞ்சா நிஜமாவே அவனை நாயா மாத்திக் குலைக்க விட்டிருப்பேன் திருமேனி! பாச்சுவை இப்படியே விடக்கூடாது! அவன் பாலேக்கல் மனையைப் பத்திப் பெருமையாப் பேசட்டும்: ஆனா மேலிடத்தை இவ்வளவு கீழ்த்தரமா எதுக்குப் பேசணும்?"

திருமேனியின் திட்டை வாங்கியும் அடங்காமல் குதித்தான் குஞ்சன்.

"எவன் என்ன பேசினாலும் மேலிடம் மேலிடந்தான். நமக்கு அதனாலே ஒரு குறைவும் வராது குஞ்சா!"

நிமிர்ந்து பார்த்தான் அவன். திருமேனியின் இந்த அடங்கிப் போகிற சுபாவம் தான் ஒவ்வொருத்தனையும் இத்தனை தூரத்துக்குப் பேசவிட்டிருக்கிறது.... என்கிற உள் கோபம்.

"அப்படி எல்லாம் நினைக்காதீங்க திருமேனி! நம்மகிட்டே வர்ர நாலுபேரை நடுவழியே மடக்கி அவன் கூட்டிக்கிட்டுப் போய் தகடும் தாயத்தும்கட்டி விடறது தப்பு! இப்படியே போனா இந்த இல்லத்துப் பாரம்பரியம் என்ன ஆகறது?"

"அடேய்... நான் பணங்காசுக்காகவா மாந்திரீகம் கத்துக்கிட்டேன்? இல்லவே இல்லை! ஜனங்களுக்குச் சேவை செய்யணும். ஏதோ முடிஞ்ச உதவி! அது எப்பவும் ஒரேமாதிரி நடக்கும். நம்ம நாடி வர்ரவங்க நம்மை மட்டுமே நாடி வருவாங்க! அவன் பேச்சை நம்பி ஓடறவங்க... அந்தத் தகடும் தாயத்தும் பலன் குடுக்கலேன்னா மறுபடியும் அங்கே போவாங்களா?"

பவத்ராதன் அப்போதும் புன்னகை மாறாமல்தான் கேட்டார்.

"..... இது சன் மாந்திரீகம்! தெய்வானுகூலம்! இதுக்குத் திடீர்னு மவுசு குறையலாம். துன்மாந்திரீகத்துக்கு வீரியம் வரலாம்! ஆனா தெய்வம் தெய்வம் தான்.... சாத்தான் சாத்தான் தான்! அதை மறந்துடாதே! நீலகண்டனுக்கும் அதுதெரியும்."

போதித்தார் திருமேனி! ஆனால்....? அவரது பொறுமைக்கும், நிதானத்துக்குமே ஒருநாள்.. சோதனை வந்தது! துவண்டு போனார், பவத்ராதன்.

**அ**ப்போது சூரியன் மேற்கே சுழன்று கொண்டிருந்த நேரம். புல்லரிக் குன்றின் மீது எழுந்தருளியிருக்கும் ஈஸ்வரனுக்குப் பொழுது சாயும் போது தீபாரதனை நடத்தப் படும். அன்று பிரதோஷ நாள். அதனால் ஆராதனை, காலம் தள்ளிப் போயிற்று.

பவத்ராதன் கோவிலிருந்து திரும்பிவந்து கொண்டிருந்தார்.

அவரோடு குஞ்சனும் நிழலாக வந்தான். வரும்போதே இருட்டாகிவிட்டது. என்றாலும் சந்திர வட்டம் தன்னால் இயன்ற மட்டும் வெளிச்சம் விரித்தது.

இருட்டைச் சாம்பலாக்கியது.

அப்போது அரசரடி மண்டபத்தின் அருகே நீலகண்டனும் பாச்சுவும்!

ஒரே குலம், ஒரே தொழில்! மாத்திரமல்ல; ஒரே குரு, ஒரே ஊர்- நீலகண்டனுக்கும் பவத்ராதனுக்கும்! எனவே பரஸ்பரம் இருவருக்குள்ளேயும் நட்பும் நல்ல எண்ணமும் இருந்துவந்திருந்தது இத்தனை நாளும்! எங்கே பார்த்தாலும் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப்பேசிச் சிரித்துப் பழகிய பழக்கம்!

ஆனால் அன்று?

பவத்ராதன் சிரித்தும், பதிலுக்கு நீலகண்டன் முகத்தைத் தூக்கி வைத்தபடியே நின்றார்.

இப்படி இதுவரை நடந்ததே இல்லை!

"என்ன நீலகண்டா? முகம் ஒரு மாதிரியா இருக்கு? இல்லை- அப்படி நமக்கு ஒரு தோணலா? இருட்டுக்குள்ளே சரியாத் தெரிய மாட்டேங்குதே! என்ன ஆச்சு உனக்கு?"

"என் முகமே அப்படித்தான்! இருட்டு வெளிச்சம் எது இருந்தாலும் இருக்கற முகம் இருக்கறபடி!"

"அப்படியா? அது எப்ப இருந்து?"

தமாஷாகத்தான் அப்போதும் கேட்டார் பவத்ராதன் திருமேனி.

"என்னைக் கேட்டா? உன் வேலைக்காரப் பய குஞ்சன்கிட்டேயே இதையும் கேட்டிருக்கலாமே! மேலிடத்தோட எனக்கு இருந்த மதிப்பு மரியாதையை என்னைக்கோ நான் இழந்துட்டேன் பவத்ராதா! நீயே சொன்னபடி உன்னோட மோத நானும் தயார்தான்! ஆனா அதுக்குச் சரியான ஒரு நேரம் வரட்டுமேன்னு காத்திருக்கேன். மோதி உன்னை மூச்சறுக்காம இந்த நீலகண்டனுக்குத் தூக்கமில்லை!"

இரைந்து கத்தினார் நீலகண்டன்.

அரசரடி மேடையிலும்... கோவில் படிகளிலும் நின்றவர்கள்... உட்கார்ந்திருந்தவர்கள்.... வந்தவர்கள்... போனவர்கள் எல்லாருமே அவர்களைத் திரும்பிப் பார்த்தனர்.

நீலகண்டனின் பின்னால் நின்றிருந்த பாச்சு, குஞ்சனுக்கு மறுபடியும் ஒற்றை விரலை உயர்த்திக் காட்டினான். பல்லை இளித்துக் காட்டிச் சத்தம் வராமல் தலையை ஆட்டினான்.

"ஓஹோ?" என்றார் பவத்ராதன். "......என்மேல் அவ்வளவு கோபமா உனக்கு?"

கேட்டுவிட்டு, அங்கே நிற்காமல் வேகமாக நடக்க ஆரம்பித்தார் பவத்ராதன் திருமேனி.

அவரது வேகத்துக்கு குஞ்சனால் நடக்க முடியவில்லை. எனவே குதியோட்டமாகப் பாய்ந்தான் அவன். இதைக் கண்ட பாச்சுவுக்கு இப்போது நிஜமாகவே சிரிப்பு வந்தது.

"திருமேனி! மேலிடம் நம்பூதிரி பயந்து ஓடறாரு. பாருங்க.... அவரோட குஞ்சனும் துண்டைக்காணோம் துணியைக் காணோம்னு பாயறான்...."

பரிகாசமாக அவன் சிரித்தது குஞ்சனின் காதிலும் விழுந்தது.

"சிரீடா! சிரி! உன்னை இப்படியே நிரந்தரமாச் சிரிக்க வைக்கற வேலை எனக்கும் தெரியும்......"

திரும்பி நின்று தன்கையை அசைத்துச் சவால்விட்டான் குஞ்சன்.

அப்போது நீலகண்டன் திருமேனியும் பரிகாசமாகச் சிரித்துக்கொண்டிருந்தார்.

**இ**ந்த எதிர் முட்டலோடு, இரண்டு இல்லத்து வேலைக்காரர்களுக்கும் ஒரு போட்டி மனோபாவம் வந்துவிட்டது. குஞ்சனுக்கு ஒரு பாடம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று பாச்சுவும், பாச்சுவை இப்படியே விடுவதில்லை என்று குஞ்சனும் பரஸ்பரம் மனசுக்குள் தீர்மானித்தனர். ஒருவாரம் ஓடோடி உருண்டது.

**அ**ன்று வெள்ளிக்கிழமை.

நிலவு வளர்ந்த எட்டாம் நாள். பாலேக்கல் திருமேனிக்காக எங்கேயோ போய்த் திரும்பிக்கொண்டிருந்தான் பாச்சு. அப்போது மணி பதினொன்று. இனியும் சிறிது நேரத்தில் வெளிச்சம் காணாமல் போய்விடும். அதற்குள் வீடுபோய்ச் சேரவேண்டும் என்றுதான் குறுக்கு வழியாக வந்துகொண்டிருந்தான் பாச்சு.

ஆனால்அந்தக் குறுக்கு வழி–

கந்தர்வன் காட்டு வழியாகப் போகிற ஒற்றையடிப் பாதை.

இது மாதிரி அகாலத்தில் இந்த வழியாக யாருமே நடக்க மாட்டார்கள். ஆனால் பாச்சுவுக்கு ஒரு தைரியம்... 'தான் பாலேக்கல் மாந்ரீகனின் எடுபிடி' யென்று.

துன் மந்திரங்கள் செய்கிற திருமேனியின் பெருமை தன் விஷயத்திலும் ஓரளவுக்குக் கர்வத்தை தந்திருந்தது. எனவேதான் ஆள் நடமாட்டமற்ற அந்த வழியாக வந்தான் அவன்.

மனசுக்குள் லேசாகப் பயம் அப்பியது. என்றாலும் ஒரு துணிச்சல்!

வேகமாக கந்தர்வன் காட்டுக்குள் நுழைந்தான். கிட்டத்தட்ட ஒரு கூப்பிடு தூரம்தான்! ஓட்டமும் நடையுமாய் வேகத்தைக் கூட்டிக்கொண்டால்... காட்டையே தாண்டி விடலாம்! பந்து கொண்டிருந்த போது பின்னால் ஏதோ ஒரு சத்தம். கலகல வென்று கொலுசு மணி குலுங்கிய நாதம்.

நின்றான் அவன்.

கொலுசுக் கால்கள்! ஒதுங்கி ஓடிய மறு கணமே... வேறு இரண்டு கால்கள் விரைந்தன. ஆனால் அவற்றிற்கு பாத பதனம்! மெல்ல மெல்ல அடிவைத்துப் போயின. கால்கள் நான்கும் ஓரிடத்தில் நின்றன!

'களுக்'கென்றது சிரிப்பு!

பாச்சுவின் தைரியம் மொத்தமும் பஞ்சாகி நெஞ்சை விட்டுப் பறக்க ஆரம்பித்தது!

'இது பிரமையா? இல்லை நிஜமா?' குழம்பினான் பாச்சு!

உறுதி செய்துகொள்ளத்தான் ஓர விழிகளால் அளந்தான். சந்தேகமே இல்லை- அது யக்ஷியும் கந்தர்வனும்தான்!

அவர்கள் இப்படி வந்து விளையாடுவதை மானிடர்கள் தங்கள் கண்களால் பார்க்கலாமா?–யோசித்தான்.

என்றாலும் மகா மாந்திரீகனின் எடுபிடி! யக்ஷியும் கந்தர்வனும் பாலேக்கல் மனைக்குப் பரிச்சயப்பட்டவர்கள்தானே என்கிற தைரியம் பார்த்தான். அப்போது– அந்த வயசில் பாச்சு பார்க்கக் கூடாத காட்சி!

யக்ஷியும் கந்தர்வனும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு உருள ஆரம்பித்தார்கள். இருவருமே தங்களை மறந்து சிரித்தார்கள்! அப்புறம்?

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். கதிர்
வயது: 22
முகவரி: இல.22, குமார வீதி, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை, புத்தகம், கிரிக்கெட்.



பெயர்: நாருள்ளா
வயது: 19
முகவரி: 120, கிறீன்ஸ் றோட், நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் படித்தல், புகைப்படம் எடுத்தல்.



பெயர்: ச.பவானி
வயது: 19
முகவரி: எழுத்தூர் மன்னார்.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.ஐபாயா
முகவரி: P.O.BOX-2977 Code No-22030 SALWA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனாநட்பு.



பெயர்: ராஜ்பவான்
முகவரி: SHONEG STR-13 (ZIMMER 15) 8004 ZURICH SWITZERLAND.
பொ.போ: பத்திரிகை, தொலைக்காட்சி, கரப்பந்து விளையாடுதல்.



பெயர்: எம்.ரஹ்மான்
வயது: 26
முகவரி: MINISTRY OF DEFENCE AVIATION P.O.BOX NO- 58952 RIYADH 11515- K.S.A.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, முத்திரை சேகரித்தல்.

பெயர்: வி.யோகன்
முகவரி: P.O.BOX -87032 2942. FINCH AVE EAST, SCARBOROUGH (ONT), MIW 3Z1 CANADA.
பொ.போ: வழமையானவை.

பெயர்: பர்ஸான் எச்.ஷாஹுல்
வயது: 24
முகவரி: 208 NAGLE AVE 2B, NEW YORK.10034 U.S.A
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, உதைபந்து விளையாடுதல்.

பெயர்: பி.சுரேஸ்குமார்
வயது: 19
முகவரி: 390, பாரதிபுரம் கன்னியா வீதி, திருமலை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: ஐ.ஹில்மி அஹ்மட்
வயது: 18
முகவரி: 19, கௌதான வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல்,கதைப் புத்தகம் படித்தல்.

பெயர்: எஸ்.சத்தியசெல்வன்
வயது: 18
முகவரி: 34 டி., பிரதான வீதி, இறக்குவாணை.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எம்.பர்ஸீன்
வயது: 15
முகவரி: 43, உடையான் லேன், புத்தளம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**என்றும் முதலிடம்**

**உலகில் மிகச் சிறந்த நாவல் எது? ஒரே பதில் தாய்! தாய்!! தாய்!!!**

**உண்மைகள் எப்போதும் வசீகரமானவை அதுதான் 'தாய்' நாவல் எப்போதும் முதலிடத்தில் இருக்கிறது! தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!**

**ரகுநாதனின் மொழி பெயர்ப்புநடை பிரமாதப்படுத்துகிறது**

**-ஆ.ர்.**




# மக்சீம் கார்க்கி



> “மீண்டும் அவள் எழுந்து நின்றாள். ஆனால் அவள் எதிர்பார்த்தற்கு மாறாக சமையலறைக்குள் ஒரு இளம் பெண் வந்து சேர்ந்தாள்.”

## 6

“இது என்ன சொந்தக் குடிசையா? இல்லை, வாடகை இடமா?” என்று கால்மேல் கால்போட்டு, நாற்காலியை முன்னும் பின்னும் ஆட்டிக் கொண்டே கேட்டான் அவன்.

“வாடகைதான் கொடுக்கிறோம்” என்று அவனுக்கு எதிராக இருந்த தாய் சொன்னாள்.

“இடம் ஒன்றும் விசாலமில்லை” என்றான் அவன்.

“பாஷா சீக்கிரமே வந்துவிடுவான். கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள்.”

“ஏற்கெனவே காத்துக்கொண்டுதானே இருக்கிறேன்” என்றான் அந்த நெட்டை ஆசாமி.

அவனது அமைதி, மிருதுவான குரல், எளிய முகம் முதலியவற்றைக் கண்டு அவளுக்கு ஓரளவு தெம்பு வந்தது. அவனது பார்வை கள்ளம் கபடமற்றதாகவும் நட்புரிமை கொண்டதாகவும் இருந்தது; தெளிந்த கண்களின் ஆழத்திலே ஆனந்தச் சுடர்கள் தாண்டவமாடிக்கொண்டிருந்தன. நெடிய கால்களும், சிறிதே சாய்ந்திருக்கும் கோலமும் கொண்ட அவனது முகத் தோற்றத்திலும் ஏதோ ஒரு கவர்ச்சி இருப்பதுபோலத் தோன்றியது. அவன் ஒரு நீல நிறச் சட்டையும், பூட்சுகளுக்குள் நுழைக்கப்பட்டிருந்த அகன்ற நுனிப்பாகம் கொண்ட காற்சட்டையும் அணிந்திருந்தான். அவன் யார், எங்கிருந்து வருகிறான், தன் மகனை அவனுக்கு ரொம்ப நாட்களாகவே தெரியுமா என்பனவற்றையெல்லாம் அவள் கேட்க விரும்பினாள்; ஆனால் திடீரென அவனே தன்னை முன்னே தள்ளிக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

“நெற்றியிலே என்ன இத்தனை பெரிய வடு? யார் அடித்தார்கள், அம்மா?”

அவனது குரல் இனிமையாயிருந்தது; கண்கள்கூடச் சிரிப்பதுபோலக் களிதுள்ளிக் கொண்டிருந்தன. ஆனால் அவளோ அந்தக் கேள்வியால் புண்பட்டுப்போனாள்.

“உங்களுக்கு எதற்கப்பா அந்தக் கவலை எல்லாம்?” என்று உதடுகளை இறுக்கிக் கொண்டு கடுப்புக் கலந்த மரியாதையுடன் கேட்டாள் அவள்.

“இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது?” என்று கேட்டுக்கொண்டே அவன் அவள் பக்கமாக இன்னும் குனிந்து கொண்டு சொன்னான். “நான் எதற்காகக் கேட்டேன் என்றால் எனது வளர்ப்புத் தாயின் நெற்றியிலும் இதைப்போலவே ஒரு வடு இருந்தது. அவள் யார்கூட வாழ்ந்தாளோ, அந்த (மூலத்தில் ‘அம்மா’ என்பதற்கு ‘நேன்க்கோ’ என்ற சொல் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. நேன்க்கோ என்பது உக்ரேனியச் சொல். அம்மா என்பதை மேலும் அருமையாக அழைப்பது- மொ-ர்) மனுஷன் கொடுத்தது அது. அவன் செருப்புத் தைக்கிறவன், அவளை ஒரு இரும்புத் துண்டால் அவன் அடித்துவிட்டான், அவள் துணி வெளுக்கிறவள்; அவனோ செருப்புத் தைக்கிறவன், அவள் என்னைத் தன் மகனாக ஸ்வீகாரம் செய்து கொண்டபின் அவனை எங்கேயோ பிடித்திருக்கிறாள். அவளது தொலையாத துயரத்துக்குக் கேட்க வேண்டுமா; அவனோ ஒரு மிடாக்குடியன்! அவன் எப்படி அவளை அடிப்பான் தெரியுமா? அவன் அடிக்கிற அடியில், பயத்தால் என்தோல் விரிந்து பிய்வதாகத் தோன்றும்!”

அவனது வெகுளித்தனமான பேச்சு தாயைச் செயலற்றவளாக்கியது; தான் இவனிடம் கடுப்பாகப் பேசியதற்கு பாவெல் தன்மீது கோபப்படுவானோ என்று அவள் பயந்தாள்.

“நான் ஒன்றும் நிஜமாகக் கோபப்படவில்லை!” என்று ஒரு குற்றப் புன்னகையுடன் சொன்னாள் அவள். “ஆனால், நீங்கள் திடீரென்று என்னை இப்படிக் கேட்டுவிட்டீர்கள். எனக்கும் என்னைக் கட்டிய வரால்தான் இந்தக் காயம் ஏற்பட்டது. அவரது ஆன்மா சாந்தியடையட்டும்! சரி நீங்கள் என்ன தாத்தாரியரா?”

அவன் தன் கால்களை ஆட்டிக் கொண்டே சிரித்தான்; அந்தச் சிரிப்பால் அவனது காதுகள்கூட அசைவதுமாதிரி தோன்றியது. ஆனால் மறுகணமே அவன் தன்னைச் சுதாகரித்துக்கொண்டான்:

“இல்லை நான் இன்னும் அப்படியாக வில்லை!”

“ஆனால், உங்கள் பேச்சு ருஷ்ய பாஷை மாதிரியே ஒலிக்கவில்லை.” அவன் சொன்ன ஹாஸ்யத்தை அனுபவித்து, சிறு புன்னகை செய்துகொண்டே சொன்னாள் அவள்.

“ஆமாம், ருஷ்ய பாஷையைவிட இது மேலானது” என்று உற்சாகத்தோடு சொன்னான் அந்த விருந்தாளி. “நான் ஒரு ஹஹோல் கானேவ் நகரப் பிறவி.”

(பழந் துணிகளை வாங்கிப் பிழைக்கின்றவர்களை ‘தாத்தாரியன்’ என்று சொல்லுவதுண்டு-)

(ஹஹோல்-உக்ரேனியப் பிரதேச மக்களுக்கு, ருஷ்யர்கள் இட்டுள்ள கேலிப் பெயர். - கதை முழுவதிலும் ஹஹோல் என்ற சொல் அந்திரேயையே குறிக்கிறது. எனவே அந்திரேய் என்பதும் ஹஹோல் என்பதும் ஒருவரே)

“இங்கே வந்து ரொம்ப நாளாச்சோ?”

“நகரில் சுமார் ஒரு வருஷம் வாழ்ந்தேன்; பிறகு ஒரு மாசத்துக்கு முன்னர்தான் உங்கள் தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தேன். உங்கள் மகனும், வேறு சிலரும் இங்கு அருமையான தோழர்களாயிருக்கிறார்கள். எனவே இங்கேயே கொஞ்ச காலம் இருக்கலாம் என்றுதான் நினைக்கிறேன்” என்று சொல்லிவிட்டு, மீசையை இழுத்து விட்டுக்கொண்டான்.

அவளுக்கு அவனைப் பிடித்துப் போயிற்று; தன் மகனைப் பற்றி அவன் கூறிய நல்ல வார்த்தைகளுக்குப் பிரதியாக, தானும் ஏதேனும் செய்ய வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

“ஒரு கோப்பை தேநீர் கொண்டு வரட்டுமா?” என்று கேட்டான்.

“அந்த ஆனந்தம் எனக்கு மட்டும் தானா?” என்று தன் தோளை ஒருதரம் குலுக்கிக்கொண்டே சொன்னான் அவன்.

“மற்றவர்களும் வரட்டும். அதுவரையில் பொறுத்திருக்கலாம். அப்புறம் நீங்கள் எங்கள் எல்லோருக்குமே தாராளமாகப் பரிமாறலாம்!”

அவனது பேச்சு மீண்டும் அவளது பயபீதியை நினைப்பூட்டிவிட்டது.

‘மற்றவர்களும் இவனைப்போலவே இருந்துவிட்டால்!’ என்று அவள் நினைத்தாள்.

மீண்டும் வாசல் புறத்தில் காலடி யோசைகள் கேட்டன. கதவு அவசர அவசரமாக திறக்கப்பட்டது; மீண்டும் அவள் எழுந்து நின்றாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக சமையலறைக்குள் ஒரு இளம் பெண் வந்து சேர்ந்தாள். அவள் சின்னஞ் சிறுசாக, கள்ளங் கபடமற்ற முகத்தோடு இருந்தாள்; அவள் தனது அடர்த்தியான வெளுத்த கூந்தலை முடிந்து பின்னலிட்டிருந்தாள்.

“நான் பிந்தி வந்து விட்டேனோ?” என்று அவள் மென்மையாகக் கேட்டாள்.

“இல்லை. பிந்தவில்லை” என்று வாசற் புறமாகப் பார்த்துக்கொண்டே சொன்னான் அந்த ஹஹோல். “நடந்தா வந்தீர்கள்?”

“பின்னே? நடந்துதான் வந்தேன். நீங்கள் தான் பாவெல் மிகாய்லவிச்சின் அம்மாவா? வணக்கம். என் பெயர் நதாஷா!”

“உங்கள் தந்தை வழிப் பெயர் என்ன?” என்றாள் தாய்.

“வசீலியவ்னா. உங்கள் பெயர்?”

“பெலகேயா நீலவ்னா.”

“சரி, நாம் அறிமுகமாகிவிட்டோம்.”

“ஆமாம்” என்று ஆசுவாசமாகச் சுவாசித்துவிட்டு, அந்தப் பெண்ணைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டே சொன்னாள் தாய்.

அந்தப் பெண்ணின் மேலுடைகளைக் கழற்றுவதற்கு உதவிக்கொண்டே கேட்டான் அந்த ஹஹோல்: “குளிராயிருந்ததா?”

“வயல் வெளியில் வரும்போது மகா பயங்கரம்! அந்த ஊதைக் காற்று- அப்பப்பா!”

அவளது குரல் செழுமையும் தெளிவும் பெற்றிருந்தது. வாய் சிறியதாகவும், உதடுகள் பருத்ததாயும் இருந்தன. மொத்தத்தில் உடற்கட்டு உருண்டு திரண்டு புதுமையோடு இருந்தது. மேலுடையைக் களைந்த பிறகு, அவள் தனது சிவந்த கன்னங்களை, குளிரால் விறைத்த சின்னஞ் சிறு கரங்களால் தேய்த்து விட்டுக்கொண்டாள்; அதன் பின்னர் செருப்புக் குதிகள் தரையில் மோதி ஓசை செய்ய, அவள் அந்த அறைக்குள்ளே நடமாடிக் கொண்டிருந்தாள்.

“ரப்பர் செருப்பு அணியக்காணோம்” என்று தாய் மனதுக்குள்ளாக நினைத்துக் கொண்டாள்.

“ஆம்...” என்று நடுங்கிக்கொண்டே இழுத்தாள் அந்த யுவதி. “நான் எவ்வளவு தூரம் விறைத்துப்போனேன் என்பதை உங்களால் கற்பனைகூடப் பண்ண முடியாது!”

“இதோ, உனக்குக் கொஞ்சம் தேநீர் போடுகிறேன்” என்று தாய் சமையலறைக்கு விரைந்தாள். இந்தப் பெண் தனக்கு வெகு காலமாய்த் தெரிந்தவள்போலவும் எனவே தாய்மையின் பரிவோடும் பாசத்தோடும் அவளை நேசிப்பதுபோலவும் தாய்க்குத் தோன்றியது. அடுத்த அறையில் நடந்து கொண்டிருந்த சம்பாஷணையைக் கேட்கும் போது அவள் தன்னுள் புன்னகை செய்து கொண்டாள்.

“நஹோத்கா! உங்களுக்கு என்ன கவலை” என்று கேட்டாள் அந்தப் பெண்.

(அந்திரேய் நஹோத்கா என்பது முழுப்பெயர். அந்திரேய் என்றுறம் நஹோத்கா என்றும் தனித்தனியே அழைப்பதுமுண்டு-மொ-ர்)

“பெரிய கவலை ஒன்றுமில்லை.” என்று அமைதியுடன் பதில் சொன்னான் அந்த ஹஹோல். “இந்தப் பெரியம்மாவுக்கு நல்ல கண்கள் இருக்கின்றன. எனது அம்மாவுக்கும் இந்த மாதிரிதான் கண்கள் இருந்திருக்குமோ என்று யோசித்தேன். நான் அடிக்கடி என் தாயைப் பற்றியே நினைக்கிறேன் அவள் இன்னும் உயிரோடிருப்பதாகவே நான் கருதுகிறேன்.”

“உங்கள் தாய் செத்துப்போய் விட்டதாகச் சொல்லவில்லை?”

“ஆனால், என்னுடைய வளர்ப்புத் தாய்தான் செத்துப்போனாள். நான் என்னைப் பெற்றெடுத்த தாயைப்பற்றிச் சொல்லுகிறேன். ஒருவேளை அவள் கீவ் நகரத் தெருக்களில் பிச்சையெடுத்துத் திரிந்துகொண்டிருக்கிறாளோ என்று எண்ணுகிறேன். பிச்சையெடுப்பதும், ஓட்கா குடிப்பதும்... அவள் குடித்திருக்கும்போது, போலீஸார் அவள் முகத்தில் ஓங்கியறையவும்கூடும்!....”

“உம், என் அருமைப் பையனே!” என்று பெருமூச்சுவிட்டபடி நினைத்துக் கொண்டாள் தாய்.

நதாஷா விரைவாகவும் மென்மையாகவும் உணர்ச்சி மணமாகவும் ஏதோ பேசினாள். மீண்டும் அந்த ஹஹோல் பேச ஆரம்பித்துவிட்டான்.

“நீங்கள் இன்னும் சின்னப்பிள்ளை. உங்களுக்கு உலக ஞானம் போதாது. உலகத்துக்குள் ஒரு மனிதனைக் கொண்டு வருவதே சிரமம்; அவனை நல்லவனாக வாழச் செய்வது அதைவிடச் சிரமம்.”

“என்னமாய்ப் பேசுகிறான்!” என்று தனக்குத்தானே வியந்துகொண்டாள் தாய். அந்த ஹஹோலிடம் ஏதாவது அன்பான வார்த்தையாகப் பேசிவிட வேண்டும் என்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. ஆனால், திடீரென கதவு திறக்கப்பட்டது.

(தொடர்ந்து வரும்)

# ஒரு காதல் சாட்சியாக

**-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-**

நமச்சிவாயத்தின் மனைவி பார்வதி அதிர்ந்துபோய்.... பயந்தவளாய் எச்சில் விழுங்க முடியாத நிலையில் கேட்டாள்.

“என்னங்க சொல்றீங்க?”

நமச்சிவாயம் விகாரமாய்ச் சிரிக்க.......

பார்வதியின் வயிற்றுக்குள் பயம் பந்தாய் உருண்டது.

“அந்தப் பையனை... அதான் அந்த வாத்தியார் ரகுவைக் கொலை பண்ணச் சொல்லிட்டேன். இந்நேரம்.... பாஸ்போர்ட், விஸா ஏதுமில்லாம இலவசமாக அவன் எமலோகத்துக்குப் பயணம் போயிருப்பான்.”

நமச்சிவாயத்தின் வார்த்தைகளில்.....

-பார்வதி சில்லிட்டுப் போனவளாய்க் கேட்டாள்.

“ஏங்க— அந்தப் பையன் என்னங்க பாவம் செய்தான்?”

“ஏன்— ஊருக்கே பெரும் புள்ளியான-கோடீஸ்வரனான என்னுடைய ஒரே மகளை அவன் காதலிச்சது பாவம். அதைவிட என் மகளை அவன் பக்கமாக ஈர்த்து வெச்சிருக்கானே..... மறக்க முடியாதபடி— அதுவும் பாவம்தான். அந்தப் பாவத்துக்கும் பரிகாரமாகத்தான் அவனுக்கு சிவலோகப் பதவி கொடுத்திருக்கேன்.”

பார்வதியின் கண்களில் கண்ணீர் முத்துக்கள் உருண்டன.

“ஏன்? காதலிக்கறது தப்பா?”

-அவளது தொண்டை கரகரத்தது.

“காதலிக்கறது தப்பில்ல..... தப்பேயில்ல. ஆனால்.... தகுதிக்கு மீறி ஆசைப் படுறதுதான் மகாபெரிய தப்பு. சேரியில் வாழுற ஒரு ட்ரைவரோட மகன்... பிச்சைக்காரச் சம்பளம் எடுக்கிற வாத்தியாரு தொழில் பார்க்கிறவன்... என் மகளை— அதுவும் ஒரே மகளைக் காதலிச்சதுதான் தப்பு பார்வதி... உனக்கே தெரியும் நான் நிரோஷாமேல உயிரையே வெச்சிருக்கேன். அவளுடைய வாழ்க்கைக்காகத்தான் இந்தப் பணம், சொத்து எல்லாமே சேர்த்து வெச்சிருக்கேன். அவளுடைய வாழ்க்கை எப்பவும் சீரழியக் கூடாது பார்வதி....”

-பார்வதி எதையும் கிரகிக்க முடியாத நிலையில் பார்த்திருக்க,

“கொலை செய்யிறதும் பாவம்தான். ஆனால்... பூவுக்கு இடைஞ்சலாக வளர்ற புல்லைக் கிள்ளுறமாதிரிதான் இக்கொலையைச் செய்யுறேன். பாவம், பரிதாபம் பட்டு நீ என்னமாவது ஏசகுபிசகாகப் பண்ண நினைக்கால்... கொலையைத் தடுக்கவோ.. எங்கேயாவது போய் சாட்சி சொல்லவோ எத்தனித்தால்... உன்னையும்



புல்லைக்கிள்ளுறமாதிரி கிள்ளிப்போட்டு விடுவேன். ஏன்னா... தப்பான காரியம் பண்றப்போ சாட்சியேதும் வெச்சிக்கிறது எனக்குப் பிடிக்காது பார்வதி.”

நமச்சிவாயம் யதார்த்தமாகச் சொல்ல- பார்வதி விக்கென்று ஒடுங்கி... அமைதியாகிப் போனாள்.

●-●-●-●

அந்த மாந்தோப்பில்——

நெடு நெடுவென்று உயரமாய்க் கிளைகள் பரப்பி வளர்ந்திருந்த மாமரத்தில், தன் முதுகு சாய்த்து, சாய்ந்திருந்தான் அந்த இருபத்தி நான்கு வயது வாலிபன். அழகாய்... கம்பீரமாயிருந்த அவன் மார்புப்பகுதியில் தன் முகம் புதைத் திருந்தாள் அவள்.

-அவன் மெல்ல தலையுயர்த்திக் கேட்டாள்,

“ஏன் ரகு சோகமாகிப்போய் மவுனமாயிருக்கே?”

-அவன் மெல்லமாய் நிமிர்ந்தான். அவனது கரங்கள் அவளது கேசத்தை மிருதுவாய் வருடிக்கொண்டிருந்தன.

“நிரோ... என்னால நீயெழுதின கவி வரிகளைக்கூட தாங்கமுடியல. மனசுச் குள்ள என்னமோ அடைபட்டதுமாதிரி.... ஏனம்மா அப்படியொரு வசனம் எழுதினே....? நம் சாவாவது நம்மை சேர்த்து வைக்கட்டும்னு.... உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சதற்கு அப்புறம் சாவைப்பற்றி நெனைக்கவே பயமாயிருக்கு. நூறு வயசுக்கும் மேலாக நாம சேர்ந்து வாழணும் நிரோ... எனக்கு அப்ப்டியொரு பேராசை இருக்கு...”

நிரோஷா கண்களில் கண்ணீரோடு நிமிர்ந்தாள்.

“என் அப்பா பணமே வாழ்க்கைன்னு வாழ்ந்திட்டுருக்கிற அடாவடித்தனமான மனிசன். செய்யுற தொழிலே நிழலானதாகவும் தப்பானதாகவும் இருக்கு. அப்படிப் பட்டவர் எம்மை சந்தோஷமாக சேர்த்து வாழ வைப்பாருன்னு எனக்குத் தோணல. அப்படியே செத்துப்போகலாம் போலயிருக்கு.”

நிரோஷா சொல்லிக்கொண்டே போக-

“நீ இப்போ கொஞ்ச நாளாக சாவைப் பற்றித்தான் அதிகமாகப் பேசுறே. வேணாம்மா... நம்ம காதல் தொடர்ந்து வாழணும். நாம செத்துப்போனால் நம்ம காதலுக்கு சாட்சியேயில்லாமாப் போயிடும் நிரோ. பிகோஸ் ஐ லவ் யூ நிரோ....”

நிரோஷா விருட்டென்று ஏதோ உந்துதலில்....

ரகுவை இறுக்கமாய்-காதலாய் கட்டியணைத்துக்கொள்ள,

-அவர்களுக்கு எதிர்ப்புறமாய் அடர்த்தியாய் வளர்ந்து, வளைந்திருந்த இன்னுமோர் மாமரத்தின் மறைவிலிருந்து... கையில் பளபளப்பான-கூர்மையான கத்தியோடு, முகத்தில் கடுமையோடு அவன் வெளிப்பட்டான்.

அவன்... ராஜு, அந்த வாடகைக் கொலையாளி!

●-●-●-●

ராஜு டெலிஃபோன் டயலில் விரல் பதித்துச் சுழற்றினான்.

எதிர்முனையில் ரிங்ங்ங் போய்... ரிஸீவர் எடுக்கப்பட்டது.

“ஹலோ நமச்சிவாயம் ஸ்பீக்கிங்.”

“சார்.. நான் ராஜு பேசுறேன்....”

-மறுமுனையில் நமச்சிவாயம் பதறியவராய்க் கேட்டார்.

“வி.. விஷயம் என்னாச்சு ராஜு?”

“கதையை முடிச்சிட்டேன் சார்...”

“அப்பாடா.. தடயம், சாட்சி ஏதும் விட்டுவைக்கலியே ராஜு...”

“இல்ல... ஆனால்...”

“என்ன... என்னாச்சு...?”

நமச்சிவாயம் மறுபடியும் பதட்டமாகிப்போக,

ராஜு அடக்க ஒடுக்கமாய் ஆவேசமேயில்லாமல் தெளிவாய் சொன்னான்.

“நீங்க உங்க கணக்குக்கு ஒரு கொலை பண்ணச் சொன்னீங்க. ஆனால்... என் கணக்குக்காக இன்னுமொரு கொலையும் பண்ண வேண்டியதாகப் போச்சு....”

“என்ன சொல்றே நீ?”

“அந்தப் பையனைக் கொலை செய்கிறப்போ.. அவனுடன் இருந்த அவனது காதலியோ யாரோ ஒரு பொண்ணு பார்த்துட்டாள். நான் என்ன பண்ணுவேன்...? எனக்குத்தானே சாட்சி, தடயங்களை விட்டுடறதுல உடன்பாடில்ல... விட்டிடவும் மாட்டேன். அதனால பொண்ணையும் அதே கத்தியால குத்திக் கொன்னுட்டேன்....”

ராஜு சொல்லிக்கொண்டே போக,

மறுமுனையில் மவுனமாகிப்போய்.. சில வினாடிகளில் எந்தவித ஓசையும் இல்லாமல்... ராஜு ரிஸீவரைத் தூக்கி டெலிஃபோன் தொட்டிலில் போட்டான். கோபமாய்.....

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை



# காதல் நியாயங்கள்

ஹப்புத்தளையூர்
எஃப். லெனாட்குமார்

அந்த திருமண அழைப்பிதழை கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டிருந்த என் விழிகள் லேசாக கலங்கத் தொடங்கின. இதயத்தின் எங்கோவோர் மூலையில் வலியெடுப்பதைப்போன்ற உணர்வு. ஓவென கதறி அழவேண்டும் போலிருந்தாலும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொள்கிறேன். மீண்டும் ஒரு தடவை அழைப்பிதழை வாசிக்க வேண்டும் போலிருந்தது.

மணமகன் சந்திரகாந்தன் **Eng (Lon)** என்றிருந்தது. பக்கத்தில் விதுஷா.

விதுஷா! என்ற பெயர் என்னைப் பார்த்து மௌனமாய் சிரிப்பதைப் போலிருந்தது. என்னையும் மீறி என்னிதயத்திலிருந்து வந்த விசும்பலை கட்டுப்படுத்த முடியாமல் அப்படியே கட்டிலில் சாய்ந்து அழுகிறேன்.

ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு முன் பிறந்த என் காதல் கதையை மீண்டும் ஒரு தடவை என்னிதயம் மீட்டிப்பார்க்க தயாராகிக்கொண்டிருந்தது.

□□

இது எங்கள் இரண்டாவது சந்திப்பு!

**"காதலி....**
**உன்**
**நினைவுகள் உள்ளவரைதான்**
**என்**
**ஆன்மா**
**உயிர்த்திருக்கும்!**

நல்ல கவிதை சுரேஷ்! சந்தோசமாயிருக்கு...! ஸோ... "நானில்லாவிட்டால் நீங்கள் உலகத்துல உயிர்வாழ மாட்டிங்களோ! நான் இத நம்பலாமோ?"

"சத்தியமாய் விதுஷா..! சந்தேகமில்லாம நம்புங்கோ!"

"நானும் அப்படித்தான்! என்னாலையும் நீங்கள் இல்லாமல் இந்த உலகத்துல வாழ ஏலாது! உண்மையில எங்கட இதயங்கள் இரண்டும் இணைஞ்சத நினைக்க எனக்கே ஆச்சரியமா இருக்குது. போன ஜென்மத்திலயும் நானும் நீங்களும் ஒன்டா வாழ்ந்திருப்போம் எண்டு எண்ணத் தோணுது!" சொல்லி முடித்தவள் தன் கரங்களுக்குள் என் கரத்தினை சிறைப்படுத்திக்கொள்கிறாள்.

"விது...எங்கட காதல் விஷயத்த பற்றி உங்கட வீட்டுல சொல்லிப் போட்டிங்களோ?"

"ம்.... இப்பத்தான் அம்மாகிட்ட சொல்லியிருக்கேன்! அம்மா மெல்ல அப்பாட்ட சொல்லி எப்படியும் சம்மதம் வாங்கிப் போடுவா!"

"சரி... அப்பா தடுத்தாரெண்டால்..?"

"நான் உங்களைத் தேடி ஓடி வந்திடுவேன்!" அவள் கூறி முடிக்கும் முன் அவள் பஞ்சுக் கரத்தினை மெல்ல எடுத்து முத்தமிடுகிறேன்.

□□

இதுதான் எங்களின் இறுதிச் சந்திப்பு!

"விதுஷா நீங்கள் என்ன சொல்லு நீங்கள்?" என்னையே என்னால் நம்ப முடியாமலிருந்தது.

"என்ன மன்னிச்சிக்கொள்ளுங்கள் சுரே..! இது நான் எடுத்த முடிவில்ல. எங்கட அப்பா அம்மா யோசிச்சு எடுத்த முடிவு!"

"ஏன், உங்கட அப்பாவைக் கேட்டுக் கொண்டா என்ன காதலிச்சனீங்க? அதைவிட பணக்கார இஞ்ஜினீயர் மாப்பிள்ளையெண்டோண்ண எல்லாத்தையும் மறந்து போட்டிங்களோ?"

"பிளீஸ் சுரேஷ் கொஞ்சம் பொறுமையாய்க் கேளுங்கோ. ஒரு பெண் தனக்கு வாற கணவனைப்பற்றியும், அவள் எதிர்காலத்துல வாழுறதை பற்றியும், இப்படித்தான் வாழ்க்கை அமையணுமெண்டும் முன்னமே எத்தனை எத்தனையோ கனவு கண்டிருப்பாள்! ஏன் கற்பனை செய்துகூட வைத்திருப்பாள்."

"ஸோ... நீங்கள் கற்பனை செய்த வாழ்க்கைக்கும் எனக்கும் நிறைய வித்தியாசம் இருக்கென்றுநீங்கள்..?"

"இப்படி... கோபமா பேசாதீங்கோ! நாங்கள் நினைக்கிற மாதிரியல்ல வாழ்க்கை. எங்களவிட எங்கட அப்பா அம்மா கல்யாணம் முடிச்சி நீண்டகாலம் வாழ்ந்துகொண்டிருக்கிறவங்கள். அவைகளுக்கு எது நல்லது எது கெட்டதென்று நல்லாவே தெரியும். இதெல்லாம் அவையின்ர வாழ்க்கையில அனுபவிச்சதுகள்தான். அவைகள் சொல்லுறது நாங்கள் நினைக்கிறதவிட நிச்சயமா சிறப்பா இருக்கும்."

"அப்போ... நீங்கள் என்ன காதலிச்சது- எனக்காக உருகினது- நானில்லாவிட்டால் உலகத்துல இருக்கமாட்டேன் என்றதெல்லாம் பொய்தானா?"

"பொய்யில்ல.. சுரேஷ்... சொன்னதெல்லாம் உண்மைதான்! இந்த கலியுகத்துல, மனசு, பாசம் இரண்டையும்விட பணம்தான் முக்கியமானதா இருக்கு. பாசத்தை நினைச்சிக்கொண்டு எங்களால ஒரு வாரத்துக்கு சாப்பிடாம இருக்கேலுமா? சொல்லுங்கள் சுரேஷ்..?"

இவள்மேல் வெறுப்பாக இருந்தாலும் என்னிதயத்தில் எங்கோ ஒரு மூலையில் இவள் சொல்வதும் உண்மையெனவே உணர்த்தியது. அப்படியேதான், நான் இவளை திருமணம் முடித்தாலும் எனது சம்பளத்தில் ஒழுங்காக மூன்று வேளை சாப்பாட்டை மட்டுந்தான் இவளுக்கு என்னால் கொடுக்க முடியும். ஒரு பெண்ணுக்கு அந்த மூன்று வேளை சாப்பாடு மட்டும் திருப்தியை தந்து விடுமா?"

"சுரேஷ் ஒரு கல்யாணம் முடிஞ்ச பிறகு, குழந்தைகள் பிறக்கும். நாங்கள்தான் பாசத்தை நினைச்சுக்கொண்டு எப்படியும் கஷ்டங்களை சமாளிச்சி வாழ்ந்தாலும் எங்களுக்கு பிறக்கிற குழந்தைகள் சரி ஒழுங்காக வாழக் கூடாதா? அதுகள் நாளைக்கு ஒரு டொக்டராகவோ, இஞ்ஜினியராகவோ வரவேணும்தானே! இதுக்கு மனசு மட்டும் இருந்திட்டால் போதாது சுரேஷ்- பணமிருந்தால்தான் அவங்க படிப்ப தொடர முடியும்!" என்னால் அவள் கருத்துக்களை மறுக்க முடியாமலிருந்தது. தொடர்ந்தும் அவள்தான் பேசினாள்,

"காதலைப் பற்றி படத்தில பார்க்கவும், புத்தகங்களில படிக்கவும் நல்லா இருக்கும். "ஆனா, அதுவே வாழ்க்கையெண்டால் கஷ்டமாக இருக்கும்! காதலை பொய்யென்று சொல்லேலல்ல. அது புனிதமானது. நாங்கள்தான் இதை யோசிச்சி செயற்படுத்தவேணும்."

உண்மைதான்! கறைபடிந்திருந்த என்னிதயம் பிரகாசம் பெற்றதைப்போன்ற உணர்வு ஏற்படுகிறது.

"ஒண்டு சொல்லுறன்!... நான் உங்கள ஏமாத்திப் போட்டதா மட்டும் நினைக்காதேயுங்கோ! தயவு செய்து என்ன புரிஞ்சுக்குவீங்களென்று நினைக்கிறேன்!"

□□

என் சிந்தனை கலைய மீண்டும் அந்த அழைப்பிதழை கையிலெடுத்துக்கொள்கிறேன்.

'விதுஷா'!

'நீ உணர்த்திச் சென்ற 'காதல் நியாயங்க'ளுக்காகவும், நம் காதலுக்காகவும் நான் வாழ்ந்துகொண்டிருப்பேன். என்னைப் பொறுத்தவரை நீ என்னை ஏமாற்றியவளில்லை. உன்னைப் புரிந்துக்கொள்ளாவிட்டால் நானோர் மனிதனாக இருக்க முடியாது.'

'உறங்கிக்கொண்டிருந்த உலக உண்மைகளை புரியவைத்துச் சென்றவள் நீ!' மெல்ல எழுந்து பேனையை எடுத்து அந்த திருமண அழைப்பிதழில் எழுத ஆரம்பிக்கிறேன்.

**"காதலீ...**
**உன்**
**நினைவுகள் உள்ளவரையும்**
**நம்**
**காதல்**
**நிலைத்திருக்கும்!"**

என்னையும் மீறி கண்ணிலிருந்து வடிந்த கண்ணீர்த் துளியொன்று அந்த திருமண அழைப்பிதழில் பட்டுத் தெறித்தது. ●

---

# ரெயில் பயணங்களில்.......

ஓட்டமாவடி - அறபாத்

இன்று சனிக்கிழமை. இரண்டு மாதங்களின் பின் ஊர் செல்லும் மகிழ்ச்சியில், பொலநறுவை பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். கண்டி கலைவானியில் வாங்கிய தினமுரசு என் அணுங்குப் பிடியில் திணறிக் கொண்டிருந்தது. சக பிரயாணிகளின் கரங்களிலோ சிங்கள நாளிதழ்கள் தகவல்களை கக்கிக் கொண்டிருக்க, நானொருத்தன் தமிழ் பேப்பரை விரிக்க தயங்கிக் கொண்டிருந்தேன். என்ன செய்ய ஆசை வெட்கம் அறியாது. அச்சமும் அறியாது. விரித்தேன், வியப்புடன் பார்த்தனர் (தமிழன் என்று நினைத்தார்களோ) பொலநறுவைக்கு வந்து சேர நான்கு மணித்தியாலயங்களை விழுங்கிக் கொண்டது கண்டி பஸ்.

கூடவே இருந்தனர். வன்செயல்களால் பாதிக்கப்பட்டு, தற்போது கொழும்பில் வசிப்பதாக கூறிக்கொண்டார்கள். எனக்கு பேப்பர் படிக்கும் ஆவல், அன்றைய தினகரனை இரவல் பெற்று வாசித்துக் கொண்டிருந்தேன். திடீரென ஆமி எமது பெட்டிக்குள் நுழைந்து, செக் பண்ணத் தொடங்கியது. கண்டிக்கு வந்து தொழில் பார்ப்பதில் தெரிந்துகொண்ட அரைகுறை சிங்களத்தில் விபரம் கூறி ஒருவாறு தப்பிக்கொண்டேன். இருந்த தமிழ்க் குடும்பத்தில் எனக்கு பரிச்சயமான தமிழ்ப் பெண்மணியும் இருந்தார். ஆமி வந்து தமிழா என்றான். அந்தப் பெண் சடுதியாக மறுத்து 'நே நே மம சிங்கள', என்றார். எனக்கு தூக்கி வாரிப் போட்டது.



வன்செயல்களின் பின் வாழைச்சேனைக்கு, புதிதாகத்தான் புகையிரதம் போய்க் கொண்டிருந்தது. எனக்கு புகையிரதப் பயணம், அதுவும் ஜன்னலோரம் அமர்ந்து இயற்கையை அள்ளிப் பருகிக் கொண்டு பயணிக்க கொள்ளை ஆசை. மூன்று வருடங்களின் பின் அந்த இன்பத்தை அனுபவிக்கப் போகிறேன். இப்பிரயாணத்தை நாடியதற்கு பிரதானமான இன்னொரு வேர்க் காரணமும் உண்டு. 'சென்றி'களில் இறங்கி கியூவில் நின்று, பொதியை உதறி, மீண்டும் நெரிசலில் ஏறும் அவஸ்தை இல்லை. மன்னம்பிட்டிக்கு வந்த ரெயிலின் வேகம் தணிந்தது. (யாழ் தேவி ஸ்ரையிலில்) காக்கி உடைகள் பெட்டிக்குள் குதித்தன.

நான் இருக்கும் பெட்டிக்குள் மட்டக்களப்பைச் சேர்ந்த, தமிழ்க் குடும்பங்களும்

கொழும்புச் சூழல் சிங்களத்தை கரைத்துக் குடித்து ஆமிக்கே ரீல் விட வைத்து விட்டது. அடுத்த கேள்வி ஐடின்டி..... நான் இமைக்க மறந்து ஆமியின் வாயை பார்த்துக் கொண்டிருந்தேன். 'ஐடின்டி' அவன் கேட்கவே இல்லை. சிங்களம் என்பதால் சுகம் விசாரித்துக்கொண்டு சென்றான். எங்கே யாரிடம் எதைச் சொன்னால் தப்பலாம் என்ற சமயுக்கதி தெரிந்தவர்களால் சில நேரம் தமிழ்பேசும் மக்கள் பாதிப்புறலாம். அதனால்... இப்படியான சந்தர்ப்பங்களில் உண்மையை கூறினால் நமது கௌரவம் பாதுகாக்கப் படும். சிங்களம் என்றவுடன் சந்தேகப்பட்டு மேற்கொண்டு விபரம் கேட்டிருந்தால்,கூட வரும் சக தமிழ்ப் பயணிகளும் சங்கடத்தை அனுபவிக்க நேரிடும் என்பதை இவர்கள் யோசிப்பதில்லை என்ற ஆதங்கத்துடன் மீண்டும் நான் பேப்பருக்குள் முகம் புதைத்தேன்.

---

# எங்கே நிம்மதி



பரீட் எம். பாதில்

கணேசன், இரத்மலானை புகையிரத நிலையத்திலிருந்து சற்று தூரத்துக்கப்பாலுள்ள தண்டவாளத்தின் பக்கம் வந்து கிட்டத்தட்ட 15 நிமிடங்களாகிவிட்டன. இனி இரயிலில் தலை கொடுக்க வேண்டியதுதான் பாக்கி.

'அந்த' பாழாய்ப்போன எக்ஸ்பிரஸ் அவன் இருக்கும் இடத்திலிருந்து 500 மீட்டர் தொலைவிலிருக்கும் நிலையத்திலிருந்து கிளம்பமாட்டேன் என அடம் பிடிப்பது கணேசனுக்கு கோபத்தை உண்டு பண்ணியது. கோபம்! பயம் கலந்த கோபம்!!

கணேசனுக்கு நேரம் போகப் போக... தான் எழுதி வைத்துவிட்டு வந்த கடிதத்தைப் பார்த்துவிடப் போகிறார்கள் என்ற ஒருவகைப் பயத்தால் உருவான வியர்வை கிட்டத்தட்ட அவனை குளிப்பாட்டியே விட்டிருந்தது.

கணேசனுக்கு கீழுதட்டுக்குக் கீழ் தாரை அப்பி, வெள்ளைக் கைக்குட்டையால் கட்டிவிட்டாற்போல ஒரு தாடி. இதற்கு முழுக் காரணம் தேவிதான்!

"கன்னம் குழிவிழ சிரித்து, மயக்கி... காதலித்து...திருமணம் என்று வந்தபோது...."

"உங்களுக்கு வேலை வெட்டி ஒண்ணுமில்லை... வெட்டியாக ஊர் சுற்றுகிறீர்கள்..." என்று அவன் மனதையும் ஒரு வெட்டு வெட்டிவிட்டு... அவனிலிருந்து விலகி... வேறொருத்தனுக்கு கழுத்தை நீட்டி விட்டாள். இவன், காதலை தெய்வீகமாய் நம்பியதன் வினை, இப்போது கணேசனுக்கு இரயிலில் கழுத்தை நீட்டும்படி ஆகிவிட்டது.

இப்போது 'அந்த' எக்ஸ்பிரஸ் சீறும் ஓசை கேட்க... ஒரு வெற்றி வீரன்போல் தண்டவாளத்தில் நீட்டிப்படுத்து.. கண்களை இறுக்கி மூடிக்..

அவசர அதிரடியாக கருங்கல் ஜல்லிகள் தெறிக்கும் ஓசை...

கண்ணைத் திறக்க... நூறு மீட்டருக்கு முன்னே, தலை தெறிக்க ஒருவன் ஓடிவந்து கொண்டிருந்தான். இரயிலின் புள்ளி வெளிச்சத்திலே அவனது தலைமுடி கூட அலங்கோலமாய் கலைந்திருப்பது துல்லியமாகத் தெரிந்தது.

அடப்பாவி! இவனும் நம்ம ஜாதி தானோ?...இரயில் முன் விழத்தானோ?...

கணேசன் தண்டவளாத்தை விட்டு விருட்டென்று எழுந்து.. அவனை நோக்கி ஓடி...தூர இழுத்துப்போட்டு, தானும் விழுந்து, பின் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க அவனைப் பார்த்தான்... இரக்கம் கலந்த கோபத்துடன்.


"வாழ வேண்டிய வயசுல இப்படிக் கேவலமா தற்கொலை செய்ய வந்திருக்கிறியா? உனக்கு வெட்கமா இல்ல?" கணேசன்.

"மண்ணாங்கட்டி...." என்றான் அவுன். "இரயிலில் விழுந்து சாகப்போறதா சாவுக்கிராக்கி கணேசன்னு ஒருத்தன் கடிதம் எழுதி வைச்சுட்டு வந்துட்டானாம். ஒரு பெருங்கூட்டமே அவனைத்தேடி அலறி அடித்துக்கொண்டு ஓடி வருது. அந்தப் பயல காப்பத்தலாம்னு நான் அவசரமாக முன்னுக்கு ஓடி வந்தேன்."

கணேசன் 'விக்'கித்து நிற்க, 'அந்த' எக்ஸ்பிரஸ் சீறிப்பாய்ந்து தன் பாதை வழியே வழுக்கிப் போயிற்று. ●

---

## இறக்குமதிச் சிரிப்பு



### நினைவில்லை

கற்பழிப்பு வழக்கில் கூண்டில் நின்றிருந்த இளைஞனைச் சுட்டிக்காட்டி நீதிபதி பெண்ணிடம் கேட்டார்:

"ஏம்மா என்ன நடந்தது என்பதை தைரியமாக நீ சொல்லலாம். இந்த நபர்தானே உன்னைக் கற்பழித்தான்?"

"ஆமாம். இவன்தான் என்னைக் கற்பழித்தான்."

"இந்த சம்பவம் எப்போது நடந்தது என்று சொல்ல முடியுமா?"

"ஆமாம்... அந்தச் சம்பவம் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடந்ததென்று நினைக்கிறேன்." என்றாள் அவள்.

### ஆனால்.........அப்படி

அவன் தனது குடும்ப டாக்டரிடம் போய் "எனக்கு பயமாக இருக்கிறது. என் மனைவி மறுபடியும் கருத்தரித்து விடுவாளோ?" என்று கேட்டான்.

"பயப்பிடாதே. நான் ஏற்கனவே உன் மனைவிக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துவிட்டேனே. ஒரு பெண்ணுக்கு இரண்டு தடவை கருத்தடை அறுவைச் சிகிச்சை தேவைப்படாது." என்றார் டாக்டர்.

"ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தால் இரண்டு தடவை கருத்தடை அறுவை சிகிச்சை தேவைப்படுமே டாக்டர்." என்றான் அவன்.

### எதில் பலம்?

யானையின் பலம் துதிக்கையிலா? பாதத்திலா? என்று ஒரு பாகனைக் கேட்டான் வேட்டைக்காரன்.

"அது அந்தந்த நேரத்தைப் பொறுத்தது."

"புரியவில்லையே?" என்றான் வேட்டைக்காரன்.

"இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால் சில நேரத்தில் ஆண் யானையின் பலத்தைப் பற்றி பெண் யானையிடம்தான் கேட்கவேண்டியிருக்கும்." என்றான் பாகன்.

### அதனால்தான்

கடுமையான தலைவலி என்று அவன் டாக்டரிடம் போனான்.

"சிகரெட் பிடிப்பாயா?" என்று கேட்டார் டாக்டர்.

"புகையிலை சம்பந்தப்பட்ட எதையும் நான் உபயோகிப்பதில்லை" என்றான் அவன்.

"மது அருந்துவதை நிறுத்திவிடு."

"மது வாசனையே எனக்குப் பிடிக்காது."

"நல்லது; இரவில் நீண்ட நேரம் கண்விழிப்பாயா?"

"கிடையாது."

"விபசார விடுதிக்குப் போவாயா?"

"இல்லை."

"உனக்கு திருமணமாகிவிட்டதா?"

"ஆமாம்...வந்து...எனக்கு இரண்டு மனைவிகள்."

"இதை ஏன் நீ முதலில் சொல்லவில்லை. உன் தலைவலிக்குக் காரணமே இதுதான்" என்றார் டாக்டர்.

# இலக்கிய நயம்

தருவது ரசிகன்



# தென்றலின் நாடகம்



"வா வந்தமர் என் அருகே" என்றான் செழியன். மணமுடித்து பல காலம் மகிழ்ந்திருந்தபோதும் இன்னும் வெட்கம் தான் அவளுக்கு!

தயங்கி நின்று, முகம் சிவந்து தடுமாறி வந்தமர்ந்தாள் அவன் பக்கத்தில்.

நாணத்தில் அவள் தயங்குவதும் ஒரு சுகம்தான் என்று நினைத்தான் அவள் துணைவன் செழியன்.

பட்டுடலை ஆராய்ந்து, கொஞ்சமும் என்மேல் இரக்கமில்லையோ என்று மஞ்சமும் வசைபாடி ஒலி எழுப்ப, சுக இராகம் மீட்டிக்கொண்டு இருக்கும் கதை தொடர் கதைதான். ஆனாலும் தினமும் புதுக்கதை போல் பொன்னுடலின் மாயங்கள் புதிர் கடலாய் விரிவதுதான் என்னே விந்தை!

இப்போதும் அவள் வந்து அருகில் அமர்ந்துகொள்ள தென்றல் பட்டால் தேகம் சிலிர்ப்பதுபோல உடலெங்கும் சிலிர்க்கக் கண்டான்.

"ஏன் இத்தனை நேரம். கொலையிலே நான் காத்திருக்கும் நிலை அறிந்தும் உள்ளே நீ என்ன செய்தாய்? இரக்கமே இல்லை உனக்கு."

என்றான் தாம்பூலம் சுவைத்து சிவந்திருந்த உதடுகளால்.

"பாத்திரங்கள் தேய்த்துவிட்டு வரவேண்டாமோ? சுவைத்துண்டு முடித்ததுவும் நீங்கள் எழுந்தோடி வந்துவிடுவீர்கள். எனக்கன்றோ பணி நிறைய."

துணைவி பொய்யாக சலித்துக் கொண்டாள்.

"அழைத்திருந்தால் வந்து உதவியாய் உழைத்திருப்பேன். நீ அழைக்கவில்லை."

என்றான் செழியன்.

"இதற்கு மட்டும் என் அழைப்பு தேவையில்லையாக்கும். பேச்சைப் பார். எதற்கும் பொய் சாட்டு."

சிணுங்கியது தேன் கிண்ணம். அதனால் சிலிர்த்தது அவன் தேகம் இன்னும்.

"நீதானே அழைத்தாய்?"

"நான் எங்கே அழைத்தேன்?"

"நீராடி, பூச்சூடி, போராடி வெல்ல முடியுமோ என்றெனக்கு சவால்விடும் பூந்தேக எழில் காட்டி மயக்கியதும் ஒரு அழைப்பன்றோ?"

இதமாக சொல்லிக்கொண்டு அவள் தேகம் தொட்டணைத்தான். தொடர்ந்து கரங்களால் மன்மத தூதுவிட்டான்.

"பயந்துவிட்டேன் ஒரு நொடி!"

என்றான் அவள் காதோரம் உதடுகளால் வருடிக்கொண்டு.

புரியாமல் இதழ் திறந்து அவள் கேட்டாள்:

"ஏன் பயந்தீர்கள்"

"காணவில்லையே என்றுதான்."

விழி மடல்கள் வண்ணத்திப் பூச்சி சிறகுகள் போல் படபடக்க அவள் சொன்னாள்,

"உளறுகிறீர்கள்!"

"உளறல் அல்ல. உணரல்."

வினாக்குறியாய் விழிப்புருவம் உயர்த்தி முறைத்தாள்.

"கொடி இடை உடைந்து விழுந்ததோ கீழே என்று நினைத்தேன். இல்லையில்லை இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். அதைத்தான் சொன்னேன்."

வெட்கம் வந்து விழுங்கியது அவளை! தளிர் விரல்கள் பத்தும் கொத்து மலர் சரமவளின் முகம் மூடிக்கொண்டன.

அவன் தன் கரத்தால் அவள் விரல்களின் சிறை உடைத்தான். பின்னர் முகம் உயர்த்தி துடிக்கும் இரு சுளைகளது சுவையறிய தன் உதடுகளை அனுமதித்தான்.

நாவோடு நா கலக்க, மனம் கலந்த இருவரும் மெய்மறந்து இருந்த நிலை பொறுக்காத விதமாக, இல்லத்தின் உள்ளே இருந்து கேட்டது ஓர் சத்தம்.

அவன் உதட்டின் சிறையில் இன்பவதை அனுபவித்த இதழ்களை விடுவித்து எழுந்து கொண்டாள் அன்னமகள்.

கரம்பிடித்து தடுத்தான். அவன் விழி முழுக்க கிறக்க சுகம்.

"போகதே நில்."

என்றான்.

"உள்ளேயிருந்து சத்தம் வந்தது."

என்றாள் அவள்.

"சத்தம் வந்தது தெரிகிறது. என் சித்தம் உன்னிடம் வந்துவிட்டது மட்டும் தெரிய வில்லையே உனக்கு."

"அவசரம் ஏன் உங்களுக்கு. வெந்தயக் கலயத்தை பூனை தள்ளியிருக்கவேண்டும். போய்ப் பார்த்துவருகின்றேன் நான்."

பாதச் சிலம்பொலிக்க, அவள் நடந்து போனாள். பின்னெழில்கள் அசைந்து அவன் மோகத்தீயை விசிறிவிட, பூனைமேல் பொல்லாக் கோபமுற்றான் செழியன். அவன் நெஞ்சில் விதையாய் விழுந்தது ஒரு கவிதை.

**"பக்கத்தில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசிப்**
**பழந்தமிழின் சாற்றாலே காதல் சேர்த்து**
**மிக்கஅவ சரமாகச் சென்ற பெண்ணாள்**
**விரைவாக என்னிடத்தில் வருதல் வேண்டும்.**
**அக்காலம் அறைக்குவந்த பூனையின் மேல்**
**அடங்காத கோபமுற்றேன் பிறநே ரத்தில்**
**பக்காப்பு ளைநூறு, பொருளை யெல்லாம்**
**பாழாக்கி னாலும் அதில் கவலை கொள்ளேன்."**
(1)

என்றெல்லாம் நினைத்தபடி கொல்லையிலே கிடந்த விசுப்பலகை மீது மெல்லச் சாய்ந்தான்.

சினமெல்லாம் பூனைமீது. வந்ததுதான் வந்தது நேரமறியா முட்டாள் பூனை. சத்தமில்லாமல் காரியத்தை முடித்து சென்றிருந்தால், சித்தம்மாறி என்னவள் விட்டுப் பிரிந்திருக்க மாட்டாள் அன்றோ.

'திருடத் தெரியாத திருட்டுப் பூனை. சிவபூசை வேளையிலே கரடி போல, என் ஆசை வேளையிலே இந்தப் பூனை.'

பொருள் போனால் கவலையில்லை. பேரின்பம் பெருகும் வேளை போச்சே! இந்தக் கவலைக்கு ஈடுமில்லை.'

முணுமுணுத்துக்கொண்டு கிடந்தவனின் முதுகில் சில்லென்று ஒரு தழுவல்.

"கள்ளி! கண்ணுக்குள் சிக்காமல் பின்புறமாய் வந்துவிட்டாள். எனக்கு மட்டும்தான் அவசரமாம். என்னமாய் பொய் சொன்னாள்."

நினைத்து மகிழ்ந்தான். தழுவட்டும் என்று அசையாமல் கிடந்தான்.

முதுகில் ஏதோ புரள்வது போல் உணர்ந்தான்.

கடல் அலைபோல் நீண்ட குழல் முதுகினிலே சரிந்ததுவோ." என்று நினைத்தான்.

'இல்லையில்லை. தளிர்கரத்தால் குளிர் பெண்ணாள் தடவுகிறாள். அதுதானே இந்தச் சுகம்!' என்று நினைத்து முதல் நினைப்பை மாற்றிக்கொண்டான்.

இதுவரைக்கும் முன்னுரை நான் எழுத அவள் இரசித்தாள். இன்று அவள் எழுதும் முன்னுரையை இரசித்திடுவேன்.'

மோகத்தின் படியேறி இன்பத்தின் சிகரத்தில் போய் நிற்கும் மன்மதக் கதையின் முன்னுரை தானே தொட்டணைப்பதும், சுவைத்தறிவதும் என்று நினைத்து விழுந்தான் ஆசைக் கடலில்.

எத்தனையோ நினைத்தபோதும் அசையாமல்தான் கிடந்தான்.

அசைந்தால் எங்கே அவள் வெட்கிப் போவாளோ என்று கருதித்தான் கரம்கூட அசைக்காமல் கிடந்தான் காளை.

எழுதட்டும் முன்னுரையை. புரியட்டும் மோக வித்தைகளை.

மனம் முழுக்க மகிழ்வென்னும் தேரோட்டம். உடல் முழுக்க குளிரான தேவசுகம்.

கண்மூடி அவன் இரசிக்க, எதிரில் ஒரு குரல்,

"கோபமா? நேரமாகிவிட்டதா? நான் என்ன செய்வேன் பொல்லாத பூனையது! மன்னித்துக்கொள்ளுங்கள்!"

அட... யார் அதுவோ? என்னவளோ? பேசுமிவள் என் மனைவி. பின்புறமாய் வந்தணைத்து குளிர்வித்தவள் யார்?

செழியனுக்குக் குழம்பியது மனம். அடுத்த நொடியே புரிந்தது நிஜம்.

கவிதையாய் வடித்தான் தன் நிலையை.

**"தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்**
**சிலிர்த்திடவே எனை நெருங்கிப் படுத்தாள் போலும்**
**சரியாத குழல்சரிய லானாள் போலும்,**
**தடவினாள் போலும், எனைத் தன் கரத்தால்!**
**புரியாத இன்பத்தை புரிந்தாள் போலும்**
**புரியட்டும் என இருந்தேன் எதிரில் ஓர் பெண்**
**பிரிவுக்கு வருந்தினே னென்றாள் ஓகோ!**
**பேசுமிவள் மனைவி; மற்றொருத்தி தென்றல்!"**
(2)

இரு கவிதைகளும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'தென்றல்' பற்றிய கவிதையில் இருந்து பெறப்பட்டது)

## குறுக்கெழுத்துப் போட்டி இல-82

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| 4 | | | ■ | ■ | 5 | |
| ■ | ■ | 6 | 7 | | ■ | |
| 8 | | | | ■ | 9 | |
| | ■ | | | ■ | | ■ |
| | ■ | | | ■ | 10 | |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. வேட்பாளர்களால் வாக்காளர்களுக்கு வழங்கப்படுவதில் ஒன்று.
4. சிவனின் கழுத்தில் இது தங்கியிருப்பதாகச் சொல்லுவார்கள்.
5. நாடு பற்றி எரிந்தபோது இவன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்.
6. சூரிய விளக்கு எரியும் நேரமிது.
8. ராசி பலனில் இதனைக் காணலாம்.
10. மோசமான நடவடிக்கைகளுக்கு இதனை இணைத்துக் குறிப்பிடுவதுண்டு.
11. திறப்பு விழாக்கள் சிலவற்றில் இதனை வெட்டித்தான் ஆரம்பிப்பார்கள்.
12. இதன் அளவோ சிறிது காரம் பெரிது.

### மேலிருந்து கீழ்

2. நித்திரைப் பிரியர்களுக்கு இவன் ஓர் உதாரணம்.
3. மோதல்களுக்கு இதுதான் காரணம்.
7. குளிரை இது தடுக்கும்.
8. தையல் பணிக்கும் உபயோகமாகும்.
9. முழுக்க நனைந்தபின் இது அவசியமில்லை என்று சொல்லுவார்கள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 07.01.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-82
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-80க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மே | மா | 2 த | ம் | ■ | 3 ம | 4 தி |
| 5 க | வ | லை | ■ | 6 போ | ■ | ரு |
| ம் | ■ | யீ | ■ | ட் | ■ | க் |
| ■ | 7 எ | டு | 8 பி | டி | ■ | கு |
| 9 ந | ழு | ■ | ச் | ■ | 10 வ | று |
| ட் | த் | ■ | 11 சை | க் | கி | ள் |
| 12 பு | து | மை | ■ | 13 வீ | டு | ■ |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.80இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. திருமதி. நெலோமி அன்ரனி குரூஸ் செட்டிக்குளம்.
2. எஸ்.விஜயகுமார் டிக்கோயா.
3. எம். இப்றாஹிம் ஓட்டமாவடி-3.
4. ஐ. ஷாமிலாபானு கொழும்பு-5.
5. செல்வி. அனுஷா சண்முகம் நுவரெலியா.
6. எம். தௌபீக் திருகோணமலை.
7. செலவன். கே. யுகேந்திரன் மட்டுநகர்.
8. ஆர். முகமட் பைசர் வவுனியா.
9. செல்வி வஜீஹா ஜெய்னுலாப்தீன் கண்டி.
10. எம். ஹனீபா குருநாகல்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா! எதிர்வரும் புத்தாண்டில் நீங்கள் எடுத்துக்கொள்ளப்போகும் சபதம் என்ன?

நிக்கவெவ பாஸீஸ்-ஹொரவப்பொத்தான.

உங்களைப்போன்ற அன்புள்ளவர்களின் கேள்விகளுக்கு தொடர்ந்து பதில் தேடுவது.

□□

பிரேமானந்த சாமியாரை பற்றி என்ன நினைக்கிறீர்?

ஷர்மிளா நிலூபா-கம்பளை.

நான் நினைப்பது இருக்கட்டும். கற்பழிப்பு சூட்டத்தில் செஞ்சரி போடவிடாமல் கைது செய்துவிட்டார்களே என்று பிரேமானந்தா வருத்தமாய் நினைத்துக்கொண்டிருக்கிறாராம்.

□□

அமைதிக்காக சண்டை, சண்டைக்காக அமைதி. இதில் எது சரியானது?

இந்து-இரத்தினபுரி.

முன்னதுதான் சரியானது. ஆனால் நம் நாட்டில் பின்னதுதான் நிலையானதாக இருக்கிறது.

□□

உலகின் முதல் பத்து 'விபச்சார நகரங்களில்' கொழும்பும் சேர்க்கப்பட்டுள்ளதே?

ராஜா-கொழும்பு-10.

ரொம்ப முன்னேற்றம்!

□□

டியர் சிந்தியா! சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்தின் சொந்தப் பெயர் என்ன?

க.ஜெயகாந்தன்-மன்னார்.

சிவாஜிராவ்.

□□

நடிகை மீனாவின் மேல் மோகம் கொண்டிருக்கும் எனக்கு அதிலிருந்து மீள வழி சொல்ல முடியுமா?

எம்.ஜே.பைசல்-மாத்தளை.

இது மாதிரி மோகமெல்லாம் தானாகவே தணிந்துவிடும். விரைவில் மீனாவே காணாமல் போய்விடுவார். சினிமா தாரகைகளின் கவர்ச்சிக்கு ஆயுள் கெட்டியல்ல, குட்டி!

□□

சிரித்துக்கொண்டே காதல் கொள்வது நிரந்தரம் அற்றதாம். இது உண்மையா?

த.கோகிலா-உடபுசல்லாவ.


அப்படி யார் சொன்னார்கள்? ஒருவேளை சினந்தும் கொள்ளவேண்டும் என்கிறார்களோ? அதாவது ஊடல் இல்லாத காதல் உப்பற்ற பண்டம் என்று சொல்ல நினைக்கிறார்களாக்கும். உண்மைதான் அது. அதற்காக உப்பை அதிகமாய் போட்டு விடாதீர்கள்.

□□

இருப்பதைக்கொண்டு திருப்தி அடையாதவர்கள் பற்றி?

க.சுமித்திரா-பெரிய நீலாவணை-01.

முன்னேறத் துடிக்கிறார்கள் என்று அர்த்தம்.



### தப்பிப் பிழைப்பாரா நரசிம்மராவ்?

மீண்டும் மீண்டும் தோல்வியடைபவர்களைப் பற்றி?

தா.மகேஸ்வரன்-கோட்டைக்கல்லாறு.

எந்த விசயத்தில் என்று சொல்ல மறந்து விட்டீர்களே?

□□

இ.தொ.கா தலைவர் தொண்டா யார் பக்கம்?

ம.ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

அவருக்கென்று ஒரு நோக்கம் எப்போதும் உண்டு. அதன் பக்கம்!

□□

காலத்துக்கு காலம் உலகம் மாறுகிறதா?

ஏ.எஸ்.எம். நவ்சாத்-அக்குறணை.

மாறாதது எதுவும் உலகில் இல்லை. உலகத்திற்கும் அது பொருந்தும் அப்பனே!

□□

நடிகையை காதலிக்க என்ன தெரிய வேண்டும்?

வீ.சதீஸ்வரன்-மட்டக்களப்பு.

கனவு காணத் தெரிந்திருக்க வேண்டும்.

□□

லயனல் பெர்னாண்டோ மீது புலிகளது தொழிற்சங்கம் ஏன் குறை சாட்டியிருக்கிறது?

எம்.மகேந்திரன்-வவுனியா.

அவனின்றி ஒரு அணுவும் அசையாது. அது மட்டும்தான் தெரியும்.

□□

ஜெயலலிதா தமிழராய்ச்சி மாநாட்டு வரவேற்புக்குழு தலைவியாக இருப்பது பற்றி உமது கருத்து?

சா.யோகேஸ்வரி-கொழும்பு-06.

தமிழக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதல்வர் தலைமை தாங்குவதில் தவறு கிடையாது. ஆனால் தான் தமிழக முதல்வர் என்பதை மறந்து அ.தி.மு.க. தலைவி என்ற நினைப்போடு அவர் நடந்துகொள்ள நினைத்தால்—அது தவறு.

□□

உலகத்தில் மிக உயர்வானது எது?

எல்.என்.பஷீர்-புத்தளம்.

வாழ்க்கை! உயர்வு புரியாமல் அதனை தவறவிட்டு விடாதீர் பஷீர்.

□□

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தப்பிப் பிழைப்பாரா? என்ன சொல்லுகிறீர்?

ஏ.வாகிட்-நீர்கொழும்பு.

சொந்த மாநிலத்திலேயே நெத்தியடி! சோனியா அரசியலுக்கு வர சம்மதித்தால் மறு நிமிடமே நரசிம்மராவ் அடக்க ஒடுக்கமாக இடத்தை காலிபண்ண வேண்டியதுதான்.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 61

இவ்வாரம் (01.01.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
பழமையில்லாத புதுமையு மில்லை;
புதுமையிலாத பழமையு மில்லை.
இதனைப் பலபேர் புரிவதுமில்லை.
பழமையை நினைந்து புலம்புவதாலே
பலனேதுமிங்கு நிகழ்வதுமில்லை.
என்றோ நிகழ்ந்த பாரதக் கதையினை
இன்றுள்ளோர்க்கு எடுத்துரைக்கின்றேன்.
அன்றைய நிலையில் நிகழ்தனவெல்லாம்
இன்றும் நிகழ்ந்திட நினைப்பது தவறு.
நடந்தனவற்றை நயம்பட வார்த்தையில்
வர்ணிப்பதுதான் புலவனுக்கழகு.
புலவன் புகுத்திய வார்த்தையின் அர்த்தம்
புரிந்துணர்ந்திடுதலில் தெளிந்திடும் உண்மை.

-காட்சி தொடக்கம்-

பீஷ்மர் தனது அரண்மனையிலிருக்கும்போது திருதராட்டினர் வருவதாகக் காவலன் கூறுகிறான். தொடர்ந்து மன்னர் வருகிறார்.

**பீஷ்:** மன்னவர் இங்கே வருகின்றாரா? வருக மகனே! வந்தமர்ந்திடுக! பாட்டனாரை இன்று தேடி வந்துள்ளீர்! நீண்ட இடைவெளி மாண்டு போனபின் ஈண்டு என்னை நீர் வேண்டி வந்துள்ளீர்!

**திருத:** தாத்தா என்னையோர் எதிரியாகவே நினைத்துள்ளதாய்த்தான் எண்ணத் தோணுதல் என் துர் அதிஷ்டமே!

**பீஷ்:** எனது எண்ணங்கள் எப்படி ஆயினும் அது பொருட்டல்ல.... பாண்டவர் தமது அஞ்ஞாத வாழ்வினை வேண்டும் காலத்தே முடித்துக்கொண்டனர். இதனைக் கூறினால் பாகுபாடுள்ளவன் இவனென்றென்னை இழிந்துரைக் கின்றனர். இந்த நிலையினில் எந்தன் வாதம் எடுபடுவதாய்த் தோணுவ தில்லை.

**திருத:** அவ்வாறு தாங்களேன் எண்ணுதல் வேண்டும்? காந்தாரி புதல்வரும் குந்தியின் மைந்தரும் தங்களின் அன்புக் குரியவரன்றோ? தங்கள் கட்டளை தனைச் சிரமேற் தாங்க சித்தமாயுள்ள சேவகன் நானே!

**பீஷ்:** என்னுடைய சேவைக்கு எவருமே வேண்டாம். நாட்டின் சேவையை நன்னெறிப்படுத்து. போரென்று வந்தால் பல்லுயிர் அழியும். நம் புதல்வர்களே நலிவுற நேரிடும். வெற்றி பெற்றாலும் நம்மவர் வெல்லலாம்; தோல்வியுற்றா லும் நம்மவர் வீழ்வரே. சூதாட்ட விதிப்படி பாண்டவர் பூண்ட அஞ்ஞாத வாசமும் அகன்றுள்ளபடியால் அன் னாரை அழைத்து அவர் பதி அளித்தே அமைதி காத்திடல் அரும் பணியாகும்!

**திருத:** இதே பொருளொட்டியே இங்கு வந்துளேன் யான். மத்சய நாட்டு மன்னவன் மகளை அர்ச்சுனன் மகனாம் அபிமன்யுவுடன் மணவினை பூணுதல் காண வருக என்றதோர் மடலினை யுதிஷ்டிரன் அனுப்பினான்!

**பீஷ்:** எனக்குமோர் ஓலையை அனுப்பி யுள்ளான் அவன்! பாண்டவர்க்கிதுவோர் மங்கள காலம். அங்கு நீரெவரும் செல்வது தவிர்த்தல் நன்மையே பயக்கும்! துருபத மன்னனும் அங்கு வந்திருப் பான். துரோணரும் சென்றால் தர்க்கம் தொடரலாம். துரியோதனனும் எதைச் செய்வானோ? அங்கு நாம் செல்வது அறிவுடைத்தல்ல!

-காட்சி மாற்றம்-

பாஞ்சாலம்-துருபதனிடம் மற்றுமொரு மகனான சிகண்டி வருகிறான்.

**துரு:** வருக மகனே! வந்தென்னருகில் வந்தமர்ந்திடுக. யுதிஷ்டிர மன்னவன் திருமண முடங்கல் அனுப்பி வைத்துள் ளார். நம் பெரும் படையுடன் செல்வதே நலமென நான் நினைக்கின்றேன். திருமணம் முடிந்ததும் கவுரவ சேனையை போர்முனைதனிலே சந்திக்க நேரலாம்!

**சிகண்டி:** ஆமாம் அப்பா! அப்பெரும் போரை ஆவலுடன் நான் காத்தே இருக்கிறேன். இப்பிறப்பன்றி வெவ் வேறு பிறவியில் பூண்ட பயன்களும் மறுமறு பிறவிகள் எடுத்தே தீர்த்திடல் அவசியமாகலாம்! பீஷ்மரை நானும் சந்திக்க வேண்டும்!

**துரு:** மகனே உன்னைப் புரிந்திடலரிது. பாண்டவர் பூண்ட யாக மதிலும் சேர்ந்தே வந்திட மறுத்திருந்தாய் நீ! கங்கையின் மைந்தர் பீஷ்மர் தானும் பல முறை வினவினார்! உன் நலம் கேட்டார்!

**சிக:** அன்னாரைக் காணவே ஆவலாயுள் ளேன்! துரோணரைத் தீர்க்க திஷ்டத் துய்மனை தீயிடம் பெற்றீர். தீ அழிந் துற்றபின் சாம்பலில்தானே நானே உதித்தேன்? இதனால் எனக்கும் கடமை ஒன்றுள்ளது.

-காட்சி மாற்றம்-

அபிமன்யுவும், திரௌபதி-பாண்டவர் மூலம் பெற்ற ஏனைய புதல்வர்களும் குருகுலத்தில்..

**சதாநீகன்:** அபிமன்யு அண்ணா! நீண்ட இடைவெளி தாண்டிய பின்னரே எமதரும் தாயை அடையவிருக்கிறோம்! எம்மை அன்னை அறிந்து கொள்வாளா?

**அபி:** தாயிடமுள்ள தனிப்பெரும் சக்தியால் தனையனை அறியத் தடையேதுமில்லை!

**சுதுரகர்மா:** கண்ணன்மாமா எம்முடனி ருந்தால் கவலையே இல்லையே! அவரே எம்மை அறிமுகம் செய்வார்!

**சதா:** அண்ணன் சுகாகுலன் தன்னை எவரும் அறிமுகம் செய்ய அவசியமில்லை. பெரியப்பா பீமரின் பிள்ளை இவனென பார்த்ததும் உடனே புரிந்திடுமன்றோ?

**சுகாகுலன்:** கிண்டலை விடப்பா! சித்தப்பா நகுலரின் பக்கம் சென்றுனை மாட்டியே வைப்பேன்!

**அபி:** தாய்க்குத் தனையரை அறிமுகம் செய்திட அவசியமில்லை. அமைதி அடைவீர்- அவள் எமை அறிவாள்.

□□□

திரௌபதியுடன் சுபத்திராவும் கிருஷ்ணனும்.

**திரௌ:** அண்ணா கண்ணா..! என் பிள்ளை களை நீ ஏன் அழைத்து வரவிலை?

**சுப:** நானே சொன்னேன்! கேட்டா னில்லையே!

**கிருஷ்:** இருவரும் சேர்ந்தெனை துருவுகின் றீர்களோ?

**திரௌ:** தாயின் வேதனை தாயே அறிவாள்! பதின்மூன்றாண்டுகள் பிரிந்திருந்தேனே! பாசம் என்னை வாட்டுவதறிகிலாய்! தாயின் பாசம் எத்தனை பெரிதென அறியாதவனா?



**கிருஷ்:** தவறாக என்னை எண்ணுதல் தவிர்க்க! தனையரைத் தாய்மை அணைந்து மகிழ்வதை பார்த்தின்புறவே ஆவலாய் வந்தேன்! அவர்கள் பின்வர, நான் முன் வந்தேன்! தாயிடம்தான் அவர் அணைவது முதன்மை என்பதால் அவரை பின்வர வைத்துளேன்! இதுவரை அவரை வேறெவர்க்கும் நான் அறிமுகம் செய்திடத் துணிந்த தேயில்லை!

□□□

திரௌபதியின் மகன்களும் அபிமன்யுவும் வந்து சேருகின்றனர். சுபத்திரையின் மகனான அபிமன்யு முதலில் திரௌபதியின் தாழ் பணிந்து ஆசி பெறுகிறான். அவ்வாறே ஏனைய பிள்ளைகளும் தாய்மார் இருவரிடமும் ஆசி பெறுகின்றனர்.

**திரௌ:** வாழ்க மகனே வளமெலாம் பெற்று! அபிமன்யு நீதான்- சுபத்திரையின் எழில் உன்னிடம் தோணுதே!

**கிருஷ்:** பாரத நாட்டின் இணையிலா வீரனாய் புகழினைப் பெறவுள பெரு வீரனிவன். சலித்துப்போன வாழ்த்துகள் எவையும் பொருத்தமதாகா எனதரும் தங்கையே! வீரனுக்குரிய வார்த்தைகள் தொகுத்து நல்வாழ்த்தினை நல்குக!

**திரௌ:** உலகினில் வீரம் உள்ளவரை யுமுன் வீரப் புகழும் மேன்மையும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றேன் நான்!

**கிருஷ்:** எல்லா வாழ்த்தையும் அவனுக்கீந்தால் பின்னவர்க்கெங்கே வார்த்தைகள் உதிக்கும்?

□□□

திரௌபதியின் ஏனைய மக்கள் ஒவ்வொருவராக வந்து வணங்கி வாழ்த்துப் பெறுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

அபிமன்யு-உத்தரை மாலைகள் மாற்றி திருமணம் புரிகின்றனர். தொடர்ந்து விராட மன்னன், அரசி சுதேசினை, பலராமர், கிருஷ்ணர், அர்ச்சுனன், சுபத்திரை, திரௌபதி ஆகியோரிடம் இருவரும் ஆசி பெறுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

மத்சய நாட்டு அரண்மனை-கிருஷ்ணனும் பலராமனும் அவைக்கு வருகின்றனர்.

**துருபதன்:** வாசுதேவ கிருஷ்ணனும் வந்து சேர்ந்துவிட்டதால் அஸ்தினாபுரியை படையுடன் பொருதிட நாள் குறிப்பிடல் இன்றே நல்லது!

**கிருஷ்:** போரைப் பற்றிய எண்ணமதேனோ? பாண்டவர் பட்ட துயரமெல்லாம் நன்றாய் உணர்ந்த ஒருவன் தான் யான்! தேவருலகையும் தம்மடிப் படுத்தும் தீரமிருந்தும் தர்மம் காக்கவே ஐவரும் துணிந்தே கானகமேகினர்.

**சிகண்டி:** அவ்வாறிருந்தும் இன்னும் அமைதி பேணுவதேனோ....?

**கிருஷ்:** போர்முனை என்பது கடைசித் தீர்வு! சதுரங்க ஆட்ட நிபந்தனை யெல்லாம் சுபமாய் முடிந்ததால் நாட்டினை மீட்டிட நாட்டம் கொண்ட தாய் யுதிஷ்டிரன் முதலில் தகவல் தன்னை திருதராட்டிர மன்னவனுக்கு அனுப்புதல் முழுமுதற் கடமை!

**விரா:** தர்மராஜனாம் யுதிஷ்டிரன் வந்து, தன்னை வணங்கி நாட்டினைத் தரும்படி கேட்டதும் தந்திடும் பண்புடன் திருத ராட்டிர மன்னவன் இந்திரப் பிரஸ்தம் தந்திடுவானோ?

**கிருஷ்:** திருதராட்டிர மன்னவன் சார்பில் கருத்தினை இங்கு தருவதாகவே எண்ணுதல் தவறு. தன் நிலைப் பாட்டினை யுதிஷ்டிர மன்னவன் தூதுவன் மூலம் தெரிவிப்பதுதான் முழுமுதற் செயலாம்!

**பலரா:** தம்பி கண்ணன் கூறுதல் சரியே! கடந்த காலம் நடந்தவையெல்லாம் மறைந்தே போவது நன்மை பயக்கும். இரத்த உறவு கொண்டுள்ள இவ ரெலாம் கொலை விழும் போரினை கருதுதலாகா! அமைதி வழியே ஆக்கம் தந்திடும். யுதிஷ்டிரன் தூதுவன் தன்னை அனுப்புதல் நலமே பயக்கும் நம்மையில் முடிவுறும்!

**துரு:** பலராமர் கூற்று வியப்பினைத் தருவது! யுதிஷ்டிர மன்னவர் உரிமை கோருதல் அருகதையாகும்! பிச்சை கேட்பது பொருத்தமதாகுமா? துரியோதனனிடம் கையேந்திச் செல்வது உரிமை கோருத லாகாது உண்மை! வில்லினில் அம் பினை ஏற்றியே அவனிடம் உற்றதைப் பெறுவதே அறிவதுவாகும்! யுதிஷ்டிர மன்னவன் தாழில் வீழ்ந்து துரியோ தனனும் தம்பிமார் தாமும் மன்னிப்புக் கோரிப் பெற்றிடவேண்டும். இதுவே என் வழி! இதனைத் தவிர்த்தால் அத்தனை பேரையும் அடியுடன் சாய்ப் பேன். பாண்டவர் ஐவரும் அரும் பெரும் வீரர்கள். அவருடன் எவரும் பொருதிட முடியுமோ? பாஞ்சாலி பெற்ற கணவரைப் போலவன் புத்திரர் ஐவரும் மாபெரும் வீரர்கள். அர்ச்சுனன் புதல்வன் அபிமன்யுவுக் கிணையெவர் யாருளர்? இத்தனை பெரும் படை அணியினிலுள்ள பெருமை சேர் பாண்ட வர் தருமம் கேட்டு தாழ் பணிந்திடவோ? இவ்வரும் சபையினில் இத்தகை வார்த்தைகள் இயம்புதலிழுக்கு!

பலராமர் துருபதனின் வார்த்தைகளால் கோபமுறுகிறார். கிருஷ்ணர் சமாதானப் படுத்துகிறார்.

**துரு:** இந்திரப் பிரஸ்த நாட்டினை பாண்டவர் தம்வச மாக்கிட துரியனா விடுவான்?

**பல:** ஏன் விடமாட்டான்? சூதாடு சபையினில் பாண்டவர் முதலில் தோற்றனவெல்லாம் திருதராட்டினரே திருப்பித் தந்ததை மறந்திட முடியுமா? கங்கையின் மைந்தரும் கிருபரும் துரோணரும் நீதியை நிலைபெற வைத்திட முடியுமே!

**துரு:** பாஞ்சாலி தனக்குப் பாதகர் புரிந்த அநீதி தனையும் பிதாமகராலும் தடுத்திட முடிந்ததா? என் மகள் திரௌபதி ஏற்ற துயரினை எண்ணிடும்போது என் உதிரம் கொதிக்குதே! தருமரும் தம்பியர் நால்வரும் நேர்வழி சென்றதால் நேர்ந்த அநர்த்தம் நீங்களும் அறிந்ததுதானே! இத்தனை இழிவுகள் இளைத்த அவர்களை போர்க்களம் தன்னில் மாய்ப்பதே நேர்வழி! சக்கர ஆயுதம் ஏந்திய மாயனே! போர்முனைக்கேகும் காலம் கடத்துதல் நேர்மையான வழியது வாகுமோ?

**கிருஷ்:** போரினைத் தவிர்த்திடக் காரணம் ஒன்றே! மனித உயிர்க்கு மதிப்பளித் திடுதல் ஒன்றேதான் என் சொந்தக் காரணம்!

**திஷ்டத்துய்மன்:** என் தங்கை மானம் பறித்தவர் தம்மை தாட்சண்யமின்றி தாக்கி நொருக்குதல் மனிதப் பண்புக் கிழிவாகிடுமோ? பத்தினிப் பெண்ணை பரத்தை என்றோதிய வாயினைக் கிழிப்பது பண்பற்ற செயலோ? சுயநல வேட்கையில் சூதுடன் சூழ்ச்சிப் பாதையை வகுத்தவர் சிரத்தைக் கொய் வது மனிதப் பண்புக்கு மாறாகிடுமோ?

**கிருஷ்:** நிச்சயமாக! நீ தரும் காரணம் மனித உயிரை மாய்க்கும் மார்க்கமே! போர் முனை தனிலே சாய்ந்து விழுபவர் பலப்பலபேர்கள். அத்தனை பேரும் அநீதியின் சின்னமா? செத்து விழுந்திடும் போர் வீரரெல்லாம் தங்கையின் மானம் பறித்தவர் பக்கம் சார்ந்து நின்றனரா? துணை புரிந்தனரா? குருதி வெள்ளம் குமுறிப்பாயும்; செத்தவர் சடலம் மிதந்து சென்றிடும்; குவிந்திடும் பிணத்தினைக் கணக்கிட முடியுமா? போரினால் நேரிடும் பேரழிவுக்கான காரண கர்த்தா தானே என்று பொறுப்பினை ஏற்றிட துருபத மன்னவர் முன்வருவாரா? ஆகவே முதலில் அற நெறிப் பாதையாம் அமைதி வழியினில் பேசிப் பார்ப்போம்! போர்தான் உரிய பொது வழியென்றால் அதனையும் அவரே முன்வைத்திடட்டும். பாண்டவர் முதலில் பேசிப் பார்க்கட்டும்!

**விரா:** சமாதானப் பாதையில் செல்வதனால் எமைச்சமரிட முடியாத சக்தியற்றவரென சாற்றத் துணிவரே!

**கிருஷ்:** சத்திரியர்க்குறு தர்மமுணர்ந்தோர் அஸ்தினாபுரத்தில் அனேகமாயுள்ளனர். துரியனுக்கவர்கள் அறிவுரை நல்கிட வாய்ப்பினை அளிப்போம்! துருபத மன்னரே! வயதினில் முதிர்ந்த அனுபவ சாலி தாங்களே என்பதால் சமாதானத் தூது அமைந்திடும் முறைதனைச் சாற்றுதல் தம் கடன்!

**பீமன்:** பாஞ்சாலி கூந்தலை பாதகர் குருதியால் சீவி முடித்திடச் சபத மேற்றேனே! அவளவிழ் கூந்தல் அவ் வாறேதான் நிலைத்திட வேண்டுமா?

**கிருஷ்:** மனிதப் பண்பினை மீறியதாகவே சபதமும் சான்றாய் விளங்கிடுமானால் நினைத்ததை நீ முடி! அமைதி நிலைபெற சபதம் துறத்தலே நல மெனக் கண்டால் நம் வழி சேர்ந்திடு.

பீமன் கிருஷ்ணன் முன் தலை கவிழ ஏனையோர் அமைதியடைகின்றனர்.

**கிருஷ்:** அஸ்தினாபுரியினை அமைதி யோடடைந்து சமாதானத்தூதினை செப்பிட அனைவரும் ஒரே மனதுடனே ஒப்புதலளித்தீர்!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்-பீஷ்மர், கிருபர், துரோணர், விதுரர் ஆகியோர் கலந்துரையாடல்.

**விதுர:** முக்கியமான முடிவொன்றினை நாம் எடுத்தாக வேண்டும். பாண்டவர் தூதுவன் இங்கே வருமுன் மன்னவர் தூதனை அனுப்புதல் வேண்டும். பாண்டவர்க்குரிய பூமியை முறையாய்ப் பெற்றிட வரும்படி அழைப்பதே நலன்தரும்! துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் துணையுடன் மன்னவர் முன்னிலை சென்று இக்கருத்தினையே கூறினாலென்ன?

**கிரு:** இதுவுமெம் கடமைதான்! அஸ்தினா புரத்தின் அன்புக்குரிய மைந்தர் நாமன்றோ?

**துரோ:** கிருபரின் கூற்றும் உண்மையே... ஆனால்..!

**பீஷ்:** ஆனால் என்ற வார்த்தையை நீவிர் மறந்திட முயன்றிட வேண்டும், ஏனெனில், கோழைகள்தானவ் வார்த் தைக்குரியவர்!

**துரோ:** கங்கையின் மைந்தரே! ஒளிந்து மறைந்திட ஓரிடம் எனக்கு வேண்டுவ தில்லை! எம் தாயகத்தின் கொடிக்கு நாம் என்றுமே கேடு நினைத்திடல் கொடுமையதாகுமே!

**விதுர:** இவ்வாறு கூறியே உரிய பாதையை விட்டு விலகியே செல்வது சரியோ? நாட்டுப் பக்தி உண்மையில் மன்னவர் சுயநல நோக்குக் கேயாதாரம். தன் மகன் தன்னைக் காப்பதே தன்னுடை தனிக் கடமையென மன்னவன் துணி கிறான். அன்னவர் ஆசைக் கருந் துணை செய்வதால் அஸ்தினாபுரத்தின் அழிவே முடிவாம். பாண்டவர் தம்மை மீண்டிங் கழைத்தவர் நாட்டினை அளிப்பதே நாட்டினைக் காத்திட நல்லதோர் வழியாம்! மன்னவரிடம்போய் உண்மையைக்கூற வேண்டியதுங்கள் தனிப்பெருங் கடனாம்; இல்லையேல் பார்த்தனின் கணைகளால் அழிவதே திண்ணமதாகும்.

**துரோ:** அவ்வாறு கூறி இவ்வந்தணன் தன்னை பயங்கொள வைத்திட நினைவோ விதுரரே!

**பீஷ்ம:** விதுரரின் கூற்று தவறானதல்ல! போரினைத் தவிர்ப்பதே எமதுடன் கடமை! வெற்றியும் தோல்வியும் எவரிடமேனும் இணைந்திடும், அதனால் பாண்டவர் தம்மை நாம் வென்றாலும் அதுவே நமக்கொரு வெற்றியதாகுமா? போரொன்றெழுந்தால் எத்தனை உயிர் கள் மாண்டு மடியும்? மகன் மீது வைத்த பாசத்தைச் சற்றே விலக்கி வைத்தே மன்னவர் உண்மையை உணர்ந்திட வைப்பதே எமதரும் கடமை! ஐவரை அழைத்து இந்திரப் பிரஸ்த நாட்டினை அளித்திட அறிவுரை கூறிட போவோம் வாரீர்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரர் அரண்மனை-மன்னருடன் பீஷ்மர், விதுரர், கிருபர், துரோணர் ஆகியோர் விவாதிக்கின்றனர்.

**திருத:** துரியோதனனையும் அழைத்தே இதனை அலசுதல் நலமென நான் நினைக்கின்றேன்!

**பீஷ்ம:** நாட்டின் மன்னவன் நீரா அன்றி துரியோதனனா?

**திருத:** நாளை இவ்வாட்சி அவனுடைத் தன்றோ?

**விதுர:** நாட்டின் நலன்தரு திட்டம் காண்ப தில் மன்னவன் தனக்கே முழு முதல் உரிமை! இதனைத் தவிர்த்து விதி வேறுளதோ?

காவலன் துருபத நாட்டு தலைமைக் குரு பாண்டவர் சார்பில் தூதனாக வந்திருப்பதாக ஒருவன் கூறுகிறான்.

**பீஷ்ம:** இது நடைபெறுமென என்றோ நினைத்தேன்! அமைதிக் கதவு திறந்தே உள்ளது என்பதை மனதில் வைத்திரு மகனே!

**திருத:** அரச சபைதனில் தூதனைக் காணவே உரிய ஒழுங்கினை விதுரரே செய்திடும்!

**விதுர:** இங்கே காண்பது நலமாயிருக்குமே!

**திருத:** என் மகன்-யுதிஷ்டிரன் நேராக வந்திடில் இங்கழைத்திருப்பேன்! மன்ன வன் தூதனை முறைப்படி அவைதனில் காண்பதே முறைமை!

-காட்சி மாற்றம்-

சகுனி, கர்ணன், துரியோதனன், துச்சாதனன் ஆகியோர் சந்திக்கின்றனர்.

**துரி:** தூதன் எதற்கு இங்கு வந்துள்ளான்?

**சகுனி:** இங்கிருப்போர் எவரும் செவிட ரல்லவே? ஏன் கத்துகின்றாய் நீ?

**கர்ண:** தூதனாயிருந்தால் தாமதமின்றி திருப்பி அனிப்பிடுக...!

**துரி:** அஞ்ஞாத வாசம் நீங்கிடுமுன்னமே அன்னாரை நானே கண்டுவிட்ட பின் தூதனை அனுப்பியேன் தாமதிக் கின்றனர்? கானகம் ஏகிட வேண்டுதல் விடுத்தே தூதனை அனுப்புதல் மான மதற்ற வேதனையன்றோ? தர்மராஜனாம் தனிப்பேர் பெற்றவன் தர்மத்தை மறந்தான். பிதாமகர், குருமார் இருவரோ டிணைந்தே தந்தையைத் தூண்டி தடுமாற வைப்பரோ?

**கர்:** சதுரங்க ஆட்டத்தில் வென்றவன் உன்னை தந்தையால் என்னதான் செய்திட முடியும்?

**சகுனி:** காம்பிலிய நாட்டின் தூதுவன் கூறும் வார்த்தையை முதலில் கேட்பது நலன்தரும். இங்கிருக்கும் எமை முட்டாள்களாக்கிட எவராலும் ஆகா என்பதை உணர்த்துதல் எம் கட னன்றோ! பாண்டவர் நோக்கம் அறிந்த பின் எமது கருத்தினைக்கூறி அனுப்பு வோம் தூதனை! யுதிஷ்டிரன் தன்னைச் சூழ்ந்திருப்போரெலாம் உண்மையில் மூடர்கள். கிருஷ்ணன் மட்டுமே பொல்லா மாயவன்! வார்த்தை ஜாலத்தால் வென்றே விடுவான். அன்னவன் மட்டும் இல்லாதிருந்தால் பாண்டவர் கதையினை என்றோ தீர்ப்பேன்! அவனுடை நோக்கம் எனக்குப் புரியும்! அமைதி வழிதான் அவன் முதல் நாட்டம்! அதனைத் தொடர்ந்தே அமரிடத் துணிவான்!

<u>பின்னணிப் பாடல்:</u>

**நன்மை விரும்பிகள் நல்வழி நாடுவர்**
**நாசம் நினைப்பவர் தீமையை விதைப்பர்**
**உண்மை நிலைபெற உழைப்பவர் பாதையில்**
**கண்ணியம் நிறைந்தே புண்ணியம் பூத்திடும்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

Regd. as a News Paper at the G.P.O.(PRO/94/94)

அருள் ஜுவலர்ஸ்
4 3 6 3 3 1
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11



தினமுரசு
வாரமலர்



வன்முறை மண்ணில் விழ வெண் புறா விண்ணைத் தொடும் அந்த நாள் என்று வரும்?

Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
4 3 3 6 8 6
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11



## இசையால் வசமாகா இதயமேது




இசை இதயத்தை நெகிழ வைக்கும். மெல்ல மெல்ல இதமான உலகுக்குள் கேட்பவரை இழுத்துச்செல்லும். இதுவெல்லாம் இன்றைய செவிகளை அதிரவைக்கும் திரைப்பட இசைக்குப் பொருந்தாது. திரைப்பட இசை இதமான உலகை நோக்கி அழைத்துச்செல்வதற்குப் பதிலாக அதிரவைக்கிறது. அதன் ஆயுளும் மிகக் குறைவாக இருக்கிறது. தற்காலிக உணர்ச்சிகளை உறுத்தி செய்வதோடு திரை இசையின் வேலை முடிந்துவிடுகிறது.

## 94ல் இயற்கையும் எதிரியாய்.........

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர்-1994 ஜனவரியில் அமெரிக்க-கலிபோர்னிய மாநிலத்தில் மாபெரும் நில நடுக்கம் ஏற்பட்டு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. ஏறத்தாழ 25,000 கட்டிடங்கள் நாசமாயின என்றும், 55 பேர் உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது. பொருட்சேதம் கோடிக்கணக்கில். இயற்கையின் இந்தத் தாக்குதலால் நொடிப்பொழுதில் சகல உடைமைகளையும் இழந்த ஒரு குடும்பம், பிரசித்தி பெற்ற ஹொலிவூட் போல்வாட் என்ற இடத்தில் பயந்து சுருண்டு ஒட்டியிருப்பதைப் படம் காட்டுகிறது.





## வீழ்த்தினால் வெற்றி

பதக்கத்தோடு படத்தில் இருப்பவர் எவாண்டர ஹொலிபீல்ட். குத்துக்களால் எதிரிகளை கலங்கடித்து ரசிகர்களை கிறங்கடிக்கும் அதிபார குத்துச்சண்டை வீரர். வயது- 32. கடந்த ஏப்ரல் மாதம் மைக்கல் மூவர் என்பவரிடம் இவர் தோற்றுப் போக ரசிகர்களுக்கு அதிர்ச்சி. மற்றொரு அதிர்ச்சியாக இவருக்கு இருதய நோய் என்ற செய்தி வந்தது. மருத்துவ ஆராய்ச்சியின் பின் இருதயம் ஆரோக்கியமாக இருப்பதாக கண்டறியப்பட்டது. இப்போது எவாண்டர பூரண தேக நலத்தோடு தனது எதிரிகளை குத்திக் கவிழ்க்க தயாராகி வருகிறார். நாள் கிளப்பும் மோதல்களை இனி ரசிக்கலாம்.

## இந்திய கிரிக்கெட் உலகம்

94 கடைசியில் சுறுசுறுப்பாகியிருந்தது. ஆண்கள் கிரிக்கெட் அணி பல வெற்றிகளைக் குவித்தது. பெண்கள் கிரிக்கெட் குழுவும் 'விட்டோமாபார்' என்று அசத்தியிருக்கிறது. பூர்ணிமா ராவ், சன்டியா அகர்வால் ஆகியோர் தலைமையில் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி சமீபத்திய போட்டிகளில் பிரகாசித்திருக்கிறது. பூர்ணிமாராவின் ஒஃப் ஸ்பின் பந்துவீச்சால் எதிரணியின் விக்கெட்டுக்கள் ஆட்டம் காணுகின்றன. இனி கிரிக்கெட் ஆண்களின் விளையாட்டு என்று எவரும் சொல்ல முடியாது.

## பந்தை விரட்டும் பாவையர்



## சர்ச்சையான உடை



இந்த அழகியின் பெயர்- குளோரியா. புகழ்பெற்ற இந்த அழகி ஒரு சர்ச்சையில் சிக்கிக் கொண்டார். இவரது இந்த ஆடையைத் தயாரித்தவர் 'திருக்குர்ஆன்' வாக்கியம் ஒன்றை சாய்வல் வர்ண முத்துக்களால் ஆடையில் அமைத்து விட்டார். வாசகத்தின் அர்த்தம்- 'ஒரு மகாராணியின் நினைவாக ஒரு காதல் கவிதை'. எதிர்ப்புகள் கிளம்பின. மத நம்பிக்கைகளை புண்படுத்தும் செயலை சகலரும் கண்டித்தனர். ஆடை தயாரிப்பாளர் எதிர்ப்புக்கு முன் சரணடைந்தார். தான் வடிவமைத்த மூன்று ஆடைகளையும் அழித்துவிட்டு மன்னிப்புக் கோரினார். இதுக்குத்தான் சொல்வார்கள் 'அர்த்தம் புரியாமல் காரியத்தில் கைவைக்கக்கூடாது' என்று.